Registered as a News Paper in Sri lanka

விலை : ரூபா 20 .00

தினப்பதிப்பு

# தினமுரசு
THINAMURASU

முரசு - 05 திருவள்ளுவர் ஆண்டு 2046 ஆடி 05 செவ்வாய்க்கிழமை (21.07.2015) பக்கங்கள் 20 ஓசை - 293

நாடாளுமன்றத் தேர்தல் - 2015



ஈழமக்கள் ஜனநாயகக்கட்சி

# வெளியாகியது விஞ்ஞாபனம்

## மக்கள் நலன்சார் திட்டங்கள்



## இதுவே எமது முன்னுரிமை

(யாழ்ப்பாணம்)

தேர்தல் விஞ்ஞாபனத்தில் குறிப்பிட்ட விடயங்களை நடைமுறைப்படுத்தி மக்களுக்கான நலன்சார் திட்டங்களை நிச்சயம் முன்னெடுப்போம் என ஈழமக்கள் ஜனநாயகக் கட்சியின் செயலாளர் நாயகமும், முதன்மை வேட்பாளருமான டக்ளஸ் தேவானந்தா தெரிவித்துள்ளார்.

யாழ்ப்பாணம் கிறீன் கிறாஸ் விடுதியில் ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியின் தேர்தல் விஞ்ஞாபனத்தை வெளியிட்டு ஊடகவியலாளர்கள் மத்தியில் உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், 1977 இல் நடைபெற்ற தேர்தலின் போது இதுதான் கடைசித் தேர்தல் என்றும் அடுத்த தேர்தல் தமிழீழத்தில் தான் என்றும் தமிழ்த் தலைமைகள் கூறின. ஆனால் நடந்

19 ஆம் பக்கம் பார்க்க

## புளியங்குளத்தில் ஆர்ப்பாட்டம்; அடிப்படை வசதி கோரி

(வவுனியா)

வவுனியா, புளியங்குளம் மக்கள் வீட்டுத்திட்டம் உள்ளிட்ட தீமக்கான அடிப்படை வசதிகளை செய்து தரக்கோரி நேற்று ஆர்ப்பாட்டம் ஒன்றில் ஈடுபட்டனர்.

19 ஆம் பக்கம் பார்க்க

## முடங்கியது மருத்துவமனை

(தெல்லிப்பளை)

தெல்லிப்பளை ஆதார வைத்தியசாலையில் நேற்று வைத்தியசாலை வைத்தியர்கள், தாதியர்கள் மற்றும் ஊழியர்களும் காலை சுமார் மூன்று மணி நேரம் வேலைப் பகிஷ்கரிப்பு

19 ஆம் பக்கம் பார்க்க

## தேர்தல் சட்டங்களை மீறுகிறார் ரணில்

### சுசில் பிரேமஜயந்த சாடல்

(கொழும்பு)

பிரதமர் ரணில் விக்ரமசிங்க தேர்தல் சட்டங்களை மீறிச் செயற்பட்டு வருவதாக ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பின் பொதுச் செயலாளர் சுசில் பிரேமஜயந்த தெரிவித்துள்ளார்.

நிதிக் குற்றவியல் விசாரணைப் பிரிவு மீது பிரதமர் அழுத்தங்களை பிரயோகித்து அரசியல் இலாபங்களை ஈட்ட முயற்சிப்பதாகக் குற்றம் சுமத்தியுள்ளார்.

அரசியல் எதிரிகளை நெருக்குதல்களுக்கு உள்ளாக்கும் நோக்

19 ஆம் பக்கம் பார்க்க

## ரயில் மோதி ஒருவர் பலி

(யாழ்ப்பாணம்)

புளியங்குளம் ரயில் நிலையத்துக்கு அண்மையில் ரயில் தண்டவாளத்தில் துயில் கொண்ட குடும்பஸ்தர் ஒருவர் ரயிலுடன் மோதுண்டு மரணமடைந்துவிட்டார்.

நேற்று இரவு 9.30 மணியளவில் இடம்பெற்ற இந்த சம்பவத்தில் வடிவேல் சதாசிவம் (வயது-49) என்பவரே மரணமடைந்துள்ளார். இவர் மது போதையிலேயே தண்டவாளத்தில் உறங்கிக் கொண்டிருந்ததாகத் தெரிகிறது.

## அரச அதிகாரிகளுக்கு சீனாவில் புலமைப்பரிசில்

(கொழும்பு)

இலங்கையிலுள்ள அரச அதிகாரிகளின் பட்ட மேற்படிப்புக்களுக்கும் அதனைத் தொடர்ந்து இடம்பெறும் பயிற்சி நெறிகளுக்கும் புலமைப் பரிசில்களை வழங்க சீன அரசாங்கம் தயார் நிலையில் உள்ளதாக இலங்கை அபிவிருத்தி நிர்வாக நிறுவகத்தின் பணிப்பாளர் நாயகம் வசந்த தேசப்பிரிய தெரிவித்தார்.

த ஹஸ்ட் பல்கலைக்கழகத்தின் (The HUST (Huazhong University

19 ஆம் பக்கம் பார்க்க

## தேர்தல் முறைகேடுகள்; இதுவரை 304 முறைப்பாடு

(கொழும்பு)

நடைபெறவுள்ள பொதுத் தேர்தல் தொடர்பில் இதுவரை 304 முறைப்பாடுகள் கிடைக்கப்பெற்றுள்ளதாக தேர்தல்கள் செயலகம் அறிவித்துள்ளது.

இதில் பதவி உயர்வுகள் மற்றும் இடமாற்றங்கள் தொடர்பில் 118 முறைப்பாடுகள் கிடைக்கப் பெற்றுள்ளதாகவும் தேர்தல்கள் செயலகம் குறிப்பிட்டுள்ளது.

## சரிவடைகிறது தங்கத்தின் விலை

(கொழும்பு)

சுமார் ஐந்து வருடங்களின் பின் உலக சந்தையில் தங்கம் பாரிய வீழ்ச்சியை பதிவு செய்துள்ளது.

ஆசிய சந்தையில் தங்கத்தின் விலை 2010 ஆம் ஆண்டுக்குப் பின் பாரிய வீழ்ச்சியை சந்தித்துள்ளது. மேலும் உலக சந்தையில் பிளாட்டினம் உலோகத்தின் விலையும் 5 சதவீதத்தால் வீழ்ச்சியடைந்துள்ளது.

## வாக்களிக்க விசேட ஏற்பாடு

(கொழும்பு)

மாற்றுவலுவுள்ளோர் வாக்களிக்கச் செல்வதில் சிரமங்களை எதிர்நோக்கினால் வசதிகளைப் பெற்றுக் கொள்ள விண்ணப்பிக்க முடியும் என தேர்தல்கள் செயலகம் தெரிவித்துள்ளது. இதற்கென ஆகஸ்ட் 9 ஆம் திகதிவரை விண ணப்பிக்க முடியும். மாற்று

19 ஆம் பக்கம் பார்க்க

நாடாளுமன்ற பொதுத் தேர்தல் - 2015



டக்ளஸ் தேவானந்தா



ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சி (ஈ.பி.டி.பி.)

# மினி சூறாவளியால் ஆலய கூரை சேதம்


(கரவெட்டி)

நேற்று முன்தினம் இரவு வீசிய மினி சூறாவளியால் கரவெட்டி தெற்கில் அமைந்துள்ள முங்கோடை முருகன் ஆலயத்தின் ஒரு பகுதி சேதமடைந்துள்ளது.

இந்த ஆலயத்திற்கு அண்மையா்கவுள்ள இப்பில் மரம் இந்த திடீர் சுழற்காற்றினால் ஆலயத்தின் மேல் கூரையில் விழுந்ததில் இந்த சேதம் ஏற்பட்டிருப்பதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த மரம் ஆலயத்தின் மேல் விழுந்ததில் சுமார் 5 இலட்சம் ரூபாவுக்கு மேல் சேதமேற்பட்டுள்ளதாக ஆலய பரிபாலன சபையின் தலைவர் சி. கந்தசாமி தெரிவித்தார். (18)

# மக்களின் தலை விதியை மாற்ற அரசியல் தலைமையில் மாற்றம் வேண்டும்





தமிழ்த் தலைமையில் மாற்றம் ஒன்றைக் கொண்டுவருவதன் ஊடாகவே தமிழ் மக்களின் தலைவிதியை மாற்றி அமைக்க முடியும் என ஈ.பி.டி.பியின் யாழ்ப்பாண தேர்தல் மாவட்ட வேட்பாளர் சொல்லின் செல்வர் இரா.செல்வவடிவேல் தெரிவித்துள்ளார்.

யாழ்ப்பாணம் சிறாம்பியடி லேன் வாழ் மக்களுடன் நேற்று இடம்பெற்ற சந்திப்பின்போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் கல்வி, சுகாதாரம், வாழ்வாதாரம், பொருளாதார மேம்பாடு, அபிவிருத்தி உள்ளிட்ட மக்கள் நலன்சார்ந்த பல்வேறு செயற்திட்டங்களை எதிர்காலத்தில் மேலும் வளர்தெடுக்கும் வகையில் தேர்தல் விஞ்ஞாபனம் தயாரிக்கப்பட்டுள்ள நிலையில் அதனை சிறப்பான முறையில் முன்னெடுப்பதற்கு மக்கள் ஆணை அவசியமானது.

இவ்வாறு மக்கள் எமக்கு ஆணை தரும் பட்சத்தில் டக்ளஸ் தேவானந்தா தலைமை மற்றும் வழிகாட்டலுடன் மக்கள் நலன்சார்ந்த செயற்திட்டங்களை முன்னெடுப்பதற்கு நாம் தயாராக இருக்கின்றோம்.

மக்கள் நாளாந்தம் எதிர் கொள்ளும் பிரச்சினைகள் மற்றும் தேவைப்பாடுகளை நிவர்த்தி செய்வதற்கான தீர்வுத் திட்டம் எம்மிடம் உள்ளது.

ஆனால் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பிடம் எவ்விதமான தீர்வுத்திட்டங்களும் இல்லை என்பதுடன் அவர்களுக்கு மக்களின் பிரச்சினைகளை தீர்ப்பதில் அக்கறையோ, விருப்பமோ இல்லை என்றும் சுட்டிக்காட்டினார்.

அந்த வகையில் தமிழ் தலைமையில் மாற்றமொன்று கொண்டு வரப்படவேண்டியதன் அவசியத்தை வலியுறுத்திய இரா.செல்வவடிவேல் அதனூடாகவே தமிழ் மக்கள் மாற்றத்தையும் ஏற்றத்தையும் காணமுடியும் என்றும் தெரிவித்தார்.

இதன்போது ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியின் செயலாளர் நாயகமும், முதன்மை வேட்பாளருமான டக்ளஸ் தேவானந்தா, யாழ் மாநகர முன்னாள் முதல்வரும் வேட்பாளருமான திருமதி யோகேஸ்வரி பற்குணராசா ஆகியோரும் கருத்துரைத்திருந்தனர்.

# கவனிப்பாரற்றுக் காணப்படும் ஒதியமலை ஆரம்ப சுகாதார நிலையம்



(முல்லைத்தீவு)

முல்லைத்தீவுஒதியமலைக் கிராமத்தின் ஆரம்பசுகாதார நிலையம் கவனிப்பாரற்றுக் காணப்படுகின்றது.

ஒதியமலை ஆரம்ப சுகாதார நிலையம் புனர்நிர்மாணம் செய்யப்பட்டு சுகாதார நிர்வாகத்துக்கு கையளிக்கப்பட்ட நிலையிலும் இக்கட்டடத்தை பராமரிப்பதிலும் இக்கட்டடத்தில் சுகாதார சேவைகளை மேற்கொள்வதிலும் சுகாதாரத் திணைக்களத்தினால் இழுத்தடிப்பு செய்வதனால் மக்கள் அசௌகரியங்களைஎதிர் நோக்கிவருகின்றனர்.

கர்ப்பிணித் தாய்மார்கள் இக்கிராமத்தில் போக்குவரத்தில்லா நிலையிலிருந்து தங்கள் மருத்துவ தேவைக்கு 10 கிலோ மீற்றர் தூரம் சிரமத்தின் மத்தியில் நடந்து சென்று தண்டுவான் ஆரம்பசுகாதார நிலையத்தில் தங்கள் வைத்திய சேவையினை பூர்த்தி செய்து வருவதாகவும் மக்கள் தெரிவிக்கின்றன.

தமதுபகுதியில் அமைக்கப்பட்ட சுகாதார நிலையம் வௌவால்கள், மாடுகள் பயன்படுத்திவருவதாகவும் இதனை சம்மந்தப்பட்ட அதிகாரிகளுக்கு முறையிட்டபோதிலும், இது வரைக்கும் எந்தவித பயனும் கிடைக்கப் பெறவில்லை என மக்கள் கவலை தெரிவிக்கின்றன. இதனை சம் மந்தப்பட்ட அதிகாரிகள் கவனத்தில் கொண்டு சீர்செய்து தரும்படி மக்கள் கோரிக்கை விடுத்துளளனர். (40)

# உலவிக்குளம் பிள்ளையார் வருடாந்த உற்சவம்

(அச்சுவேலி)

அச்சுவேலி உலவிக்குளம் பிள்ளையார் ஆலய வருடாந்த உற்சவம் இன்று கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி தொடர்ந்து 11 தினங்கள் விசேட பூசை வழிபாடுகள் நடைபெறும்.

இவ் உற்சவத்தின் 10ஆம் நாளன்று தேர்த்திருவிழாவும் இறுதி நாளான 11ஆம் நாளான்று தீர்த்தோற்சவத்துடன் விழா நிகழ்வுகுள் நிறைவு பெறுமென ஆலய நிர்வாகம் வெளியிட்ட அறிவிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ, 168)

# வீதி புனரமைக்கக் கோரி மறியல் போரில் மக்கள்

(வவுனியா)

வவுனியா - செட்டிகுளம் வீதியை புனரமைத்து தருமாறு கோரி வீதிமறியல் போராட்டம் ஒன்று நேற்று இடம்பெற்றது. வவுனியாவில் இருந்து வீரபுரம் ஊடாக செட்டிக்குளம் செல்லும் பிரதான வீதியில் புதையல் பிட்டியில் இருந்து இராசேந்திரங்குளம் வரையிலான சுமார் இரண்டு கிலோமீற்றர் வீதி மிகவும் மோசமான நிலையில் கடந்த பல வருடங்களாக காணப்பட்ட நிலையில் சுமார் 6 மாதங்களுக்கு முன்னர் வீதி அபிவிருத்தி அதிகாரசபையால் குறித்த வீதிக்கு கிரவல் பரவப்பட்டது. தற்போது அந்த வீதியில் உள்ள ஆடைத் தொழிற்சாலை மற்றும் ஏனைய நடவடிக்கைகளுக்காக ஒரே தடவையில் தொடர்ச்சியாக பல வாகனங்கள் செல்வதால் புழுதி கிளம்பி அருகில் உள்ள வீடுகளில் கூட வசிக்க முடியாத நிலை காணப்படுகின்றது.

இதனால் பலருக்கு சுவாச நோய்கள் ஏற்பட்டுள்ளதாகவும், வீட்டில் உணவுப் பொருட்களைக் கூட வைக்க முடியாத நிலை ஏற்படுவதாகவும் தெரிவித்து இப் பகுதி மக்கள் வீதி மறியல் போராட்டத்தில் ஈடுபட்டதுடன், வீதியை உடனடியாக தார் போட்டு செப்பனிட்டு தருமாறும் கோரினர்.

இதன் போது அப்பகுதிக்கு வந்த நெளுக்குளம் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி மற்றும் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் சிவசக்தி ஆனந்தன், வடமாகாண சபை உறுப்பினர் இ.இந்திரராஜா ஆகியோர் மக்களிடம் பேசியதையடுத்து வீதிமறியல் போராட்டத்தை மக்கள் கைவிட்டனர். இதேவேளை, வீதி அபிவிருத்தி அதிகார சபையின் வடமாகாண பணிப்பளரிடம் முன்னாள் எம்.பி.சிவசக்தி ஆனந்தன் குறித்த விடயம் தொடர்பில் உடனடியாகத் தொலைபேசியில் தெரியப்படுத்திய போது தற்போது இதனைத் திருத்த நிதி இல்லை எனவும் தேர்தல் முடிவடைந்ததும் உடனடியாக திருத்தப்படும் எனவும் தெரிவித்தார் என முன்னாள் எம்.பி. மறியல் போராட்டத்தில் ஈடுபட்ட மக்களிடம் தெரிவித்ததையடுத்து போராட்டம் கைவிடப்பட்டது.

# கூட்டுறவாளர் புவனேஸ்வரியின் கட்டுரைத் தொகுப்பு வெளியீடு

## திருவுருவப்படமும் திரைநீக்கம்





(உரும்பிராய்)

உரும்பிராய் கற்பகவிநாயகர் மகளிர் சிக்கனக் கடன் கூட்டுறவுச் சங்கத்தின் ஸ்தாபகர் அமரர் புவனேஸ்வரி கனகரட்ணத்தின் திருவுருவப் படத் திரைநீக்கமும் அவர் எழுதிய கட்டுரைகளின் தொகுப்பு நூலகிய அமுதம் என்ற நூலின் வெளியீடும் நேற்று முன்தினம் காலை உரும்பிராய் கற்பக விநாயகர் சிக்கனக் கடன் கூட்டுறவுச் சங்கத்தில் அமைந்துள்ள புவனேஸ்வரி மண்டத்தில் நடைபெற்றது.

சங்கத் தலைவர் மதுரை நாயகி திருநாவுக்கரசு தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் சங்கப் பொருளாளர் த. உமா வரவேற்புரையாற்றினார்.

உரும்பிராய் இந்துக்கல்லூரியின் முன்னாள் ஆசிரியரும் இந்து கலாசார அமைச்சின் ஓய்வுநிலை உதவிப் பணிப்பாளருமாகிய சிவத்தமிழ் வித்தகர் சிவ.மகாலிங்கம் அமுதம் என்ற நூலை வெளியிட்டு வைத்தார். இதன் முதற்பிரதியை யாழ். மாவட்டக் கூட்டுறவு உதவி ஆணையாளர் சு.கணேஸ் பெற்றுக் கொண்டார். நூலின் நயப்புரையை கோப்பாய் ஆசிரிய கலாசாலை பிரதி அதிபர் ச.லலீசன் வழங்கினார்.

அமரர் புவனேஸ்வரியின் திருவுருவப் படத்தை கூட்டுறவு உதவி ஆணையாளர் சு.கணேஸ் திரைநீக்கம் செய்து வைக்க சங்கச் செயலாளர் ச.பத்மலோஜினி மலர் மாலையிட்டு வணக்கம் செலுத்தினார். அமரரின் மகன் ந.லலிகரன் நினைவுச் சுடர் ஏற்றினார்.

உரும்பிராய் கற்பக விநாயகர் கோவில் பரிபாலனசபைத் தலைவர் நந்தகுமார், தெல்லிப்பழைக் கோட்டக் கல்விப் பணிப்பாளர் அ.ஈஸ்வரநாதன், ஓய்வு நிலை கூட்டுறவு உதவி ஆணையாளர் சண்முகநாதன், ஓய்வு நிலை கிராமிய வங்கி முகாமையாளர் கணேஸ் உள்ளிட்ட பலர் நினைவுரைகளை ஆற்றினர்.



## யாழ் - கிளிநொச்சி தேர்தல் மாவட்டத்தில் போட்டியிடும் ஈ.பி.டி.பி. வேட்பாளர்களை வெற்றி பெறச் செய்வோம்!

**டக்ளஸ் தேவானந்தா**
(செயலாளர் நாயகம் - ஈ.பி.டி.பி.)
முதன்மை வேட்பாளர்

4



ஐயாத்துரை ஸ்ரீரங்கேஸ்வரன்
(வடமராட்சி ஈ.பி.டி.பி. இணைப்பாளர்)
1



இராமநாதன் ஐங்கரன்
(வலிகாமம் கிழக்கு ஈ.பி.டி.பி. இணைப்பாளர்)
2



'சொல்லின் செல்வர்'
இரா. செல்வவடிவேல்
3



திருமதி. யோகேஸ்வரி பற்குணராஜா
(யாழ். மாநகர முன்னாள் முதல்வர்)
5



பசுபதி சீவரத்தினம்
(ஈ.பி.டி.பி. தேசிய அமைப்பாளர்)
6



முருகேசு சந்திரகுமார்
(முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர்)
7



சில்வேஸ்திரி அலென்ரின்
(முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர்)
8



சிவகுரு பாலகிருஸ்ணன்
(வலிகாமம் மேற்கு ஈ.பி.டி.பி. இணைப்பாளர்)
9



சூசைமுத்து அலெக்ஸ்சாண்டர்
(தென்மராட்சி ஈ.பி.டி.பி. இணைப்பாளர்)
10

நீ இல்லாமல் எதுவும் நடக்காது என்று நினைப்பதை விட பெரும் முட்டாள்த்தனம் வேறில்லை

-அன்புவழியூர்க்கவிராயர் -

தினப்பதிப்பு
தினமுரசு
THINAMURASU
இல:373, பிரதான வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி : 0212223628, கைத்தொலைபேசி : 0777193264
தொலைநகல் : 0212221811, thinamurasu@live.com
Online : www.emurasu.com

## சொல்லி அழுவதற்குத்தானா தலைமை?

"எமது கொள்கைகளை எங்களது இலட்சியத்தை எமது மண்ணிலே தோற்கடிக்க நினைப்போருக்கு இந்தத் தேர்தலில் பாடம் படிப்பிப்பதுடன், தமிழினம் என்றுமே அடிபணியாது என்பதைத் தெளிவாகக் காட்டுங்கள்" என்று சாவகச்சேரியில் நேற்று மாவை அறைகூவல் விடுத்ததாக தமிழரசுக் கட்சிப் பத்திரிகை செய்தி வெளியிட்டிருக்கிறது.

முதலில், தேர்தல் என்ன போரா அறைகூவல் விடுப்பதற்கும், சங்கநாதம் முழங்குவதற்கும்? திடீரென்று ஏன் இந்தத் தலைவர்கள் உணர்ச்சி வசமாகிறார்கள்?

நேற்று வரை நாடாளுமன்றத்திலும் தேசிய நிறைவேற்றுச் சபையிலும் "நாங்கள் கொண்டுவந்த அரசு, நல்லாட்சி மாற்றம் வந்தது" என்று நல்லவிதமாகச் சிரித்துக் கதைத்துக் கொண்டு தானே இருந்தார்கள்?

ஜனாதிபதித் தேர்தலின் போது மைத்திரியை வெல்ல வைப்பதற்காகச் சந்திரிகாவிடம் ரணிலிடம் எல்லாம் சுமுகமான உரையாடல்களை நடத்தி, எலெக்சன் செலவுக்கென்று காசும் வாங்கி வந்து பகிர்ந்து கொடுக்க மட்டக்களப்பெல்லாம் மாவையார் போய் வந்தாரே!

பிறகு மாகாண சபைக்கும் தெரியாமல் மைத்திரிக்கும் தெரியாமல் நல்லாட்சி அரசின் பிரதமர் ரணிலிடம் இணக்கமாகப் பேசித்தானே அபிவிருத்திக்கென்று சொல்லிச் சிலபல கோடிகளை வாங்கியதில் தங்களுக்குள் அடிபட்டும் கொண்டார்கள்!

அப்போதும் இவர்களுக்குள்தான் பிடுங்குப்பாடு இருந்ததே தவிர, காசு குடுத்த சிங்களத் தலைவர்களுடன் எந்தப் பிரச்சினையும் இவர்களுக்கு இருக்கவில்லையே!

அந்தக் காசில் எங்கெங்கு அபிவிருத்திகள் நடந்தன என்று, அவர்களது அறைகூவலைப் புல்லரிப்போடு வெளியிடும் ஊடகங்கள்தான் தேடியறிந்து மக்களுக்குச் சொல்ல வேண்டும்... இருக்கட்டும்.

தேர்தல் அறிவிப்பு வரும்வரை குசல விசாரிப்புகளும் குழைவுச் சிரிப்புகளும் 'பெட்டி' வாங்குதல்களும் சொந்த பந்தங்களுக்கான அலுவல்களைச் சுளுவாய்க் கேட்டுப் பெற்றுக் கொள்ளலுமாக எல்லாம் சுமுகமாய்த்தானே நடந்துகொண்டிருந்தது?

தேர்தலை அறிவித்தவுடன் மட்டும் பகை நாட்டரசைப் போலப் போருக்கு அறைகூவுதலும், தமிழ் மக்கள் எல்லோரும் வாளும் வேலும் எடுத்துக் கொண்டு வாக்குச் சாவடிகளுக்கு வந்துவிட வேண்டும் என்பது போலத் திடீரெனச் சிம்ம கர்ஜனைகள் புரிவது ஏன்?

அதுவும், இவர்களில் குறைந்தது 20 எம்பிக்களையாவது பாராளுமன்றம் அனுப்பித்தான், தமிழினம் என்றுமே அடிபணியாது என்பதைத் தெளிவாகக் காட்ட வேண்டுமாம்!

என்னமாய்ப் பகைமுழக்கப் பேச்சுப் பேசித் தொடர்ந்து தங்கள் வண்டிலை விட்டுக்கொண்டே போகலாம் என்று தெரிந்து வைத்திருக்கிறார்கள் பாருங்கள்!

அப்போ, இவ்வளவு காலமாக இவர்களைத் தொடர்ந்து பாராளுமன்றம் அனுப்பியும், தமிழ் மக்களை அடிபணியும் நிலையில் தான் இன்னமும் வைத்திருப்பதாக ஒப்புதல் வாக்குமூலம் தருகிறார்களா? இம்முறையும் இவர்களுக்கே வாக்குகளைப் போட்டுத்தான் 'தமிழினம் அடிபணியாது' என்பதைக் காட்ட வேண்டுமா?

அல்லது நீங்கள்–இனிமேலும் வரப்போகின்ற ஒவ்வொரு தேர்தலிலும் அறைகூவல்களையும் அரசுக்கு எச்சரிக்கைகளையும் விடுப்பதற்கு வசதியாக, தமிழ் மக்களை இப்படியேதான் வைத்திருப்பீர்களா?

'தமிழினம் அடிபணியாது' என்பதை ஒவ்வொரு தேர்தலிலும் தமிழ் மக்கள் தொடர்ந்து உங்களுக்கு வாக்குகளைப் போட்டுக் காட்டிக்கொண்டே இருக்கும்படியாகத்தான் நிலைமை தொடருமா?

தமிழினத்தின் கதியை மாற்றுகிறோம்; தீர்வைக் கொண்டுவருகிறோம் என்று நீங்கள் வாக்குகளைப் பெற்றுக்கொண்டது, தமிழர்களை வேறு யாரோ அடிபணிய வைத்துக் கொண்டிருக்கிறார்கள் என்பதைச் சொல்லி அழுவதற்குத் தானா? - ஆசிரியர்

# மக்களின் பணத்தில் வாழும் அவசியம் எனக்கில்லை

## பிரதிப்பாதுகாப்பு அமைச்சர் ஆவேசம்

(கொழும்பு)

நாட்டு மக்களின் பணத்தில் வாழ்வதற்கான அவசியம் எனக்கில்லை, அமைச்சருக்கு வழங்கப்படும் உத்தியோகபூர்வ வாகனத்தையும் வீட்டையும் தான் பெற்றுக்கொள்ளவில்லை என பாதுகாப்பு பிரதி அமைச்சர் ருவண் விஜேவர்தன தெரிவித்துள்ளார்.

திவுலப்பிட்டியவில் இடம்பெற்ற ஐக்கிய தேசியக் கட்சி செயற்பாட்டாளர்கள் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கும் போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

என்னை வாழ வைத்துக் கொள்வதில் எனக்கு அவசியம் இல்லை. மக்களை வாழவைப்பதே எனக்கு அவசியமானது. நாடாளுமன்றத்தில் இருந்தவர்கள் பலர் போதைப்பொருள், எத்தனோல் கொண்டு வந்தார்கள.

மதுபானசாலைகளை அமைததுக்கொண்டு நாட்டை சீரழித்தார்கள், மக்களின் பணத்தில் சிலர் மதுபானங்களை நிரப்பிக் கொண்டார்கள்.

வெள்ளை வான் கலாசாரத்தை உருவாக்கி அரசியல் கொள்கைகளை மேற்கொள்ள இடமளிக்கவில்லை.

மகிந்த ராஜபக்ஷ உள்ளிட்ட குழுவினர் மேடைகளில் இன்று நாட்டை குறித்து பேசுவது, மீண்டும் தங்கள் பைகளை நிரப்பிக் கொள்வதற்கென அவர் மேலும் குறிப்பிட்டுள்ளார்.

# மகிந்தவின் மீள்வருகையால் பீதியில் ஐக்கிய தேசியக் கட்சி

முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ மீண்டும் அரசியலுக்கு வந்துள்ளதால், ஐக்கிய தேசியக் கட்சிக்கு மகிந்த பீதி ஏற்பட்டுவிட்டதென ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பின் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் வீ.கே.இந்திக்க தெரிவித்துள்ளார்.

ஊடகமொன்றிற்கு கருத்துத் தெரிவித்த அவர் மேலும் தெரிவிக்கையில்,

மகிந்தவுக்கு ஆதரவளித்த காரணத்தால் என்னை முல்கிரிகல தொகுதி அமைப்பாளர் பதவியிலிருந்து நீக்கிவிட்டனர். நல்லாட்சி அரசாங்கத்தின் கூட்டங்களால் மகிந்த ராஜபக்ஷவை தோற்கடிக்க முடியாது.

மகிந்தவை திருடன் என்றும், ஊழல் மோசடியில ஈடுபட்டவன் என்றும் பல குற்றச்சாட்டுக்களை முன்வைத்திருந்தாலும் மக்களுக்கு உண்மை தெரியும் மக்கள் அனைவரும் மகிந்த வுக்கே வாக்களிப்பார்கள் என்றும் கூறியுள்ளார்.

# இருபக்க தாக்குதலுக்கு தயார்

## கூறுகிறார் அனோமா பொன்சேகா

(கொழும்பு)

தேர்தலில் இருபக்க தாக்குதலுக்கு தயாராகியுள்ளோம். தனியாக போட்டியிட்டாலும் தற்போதைய ஜனாதிபதி மற்றும் பிரதமரின் பயணத்திற்கு வலுச்சேர்ப்போம் என பீல்ட் மார்ஷல் சரத் பொன்சேகாவின் மனைவி அனோமா பொன்சேகா தெரிவித்துள்ளார்.

ஊடகமொன்றுக்கு வழங்கிய செவ்வியிலேயே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

மகிந்த ராஜபக்ஷ மற்றும் தரப்பினர் அதிகாரத்திற்கு வருவதனை தடுப்பதே எங்கள் கட்சியினதும் ஏனைய கட்சியினதும் ஒரே கருத்தாக உள்ளது. நாங்கள் அந்த கருத்தின் ஊடாக வேறு பக்கத்தில் இருந்து அந்த இலக்கை அடைவோம்.

நாங்கள் இரண்டு பக்கத்தில் இருந்தும் தாக்குதல் மேற்கொள்வோம், எங்கள் இரண்டு பக்கங்களின் நோக்கமும் ஒன்றே. நான் நாட்டிற்காகவே தேர்தலில் போட்டியிடுகின்றேன் குடும்பத்திற்காக் அல்ல.

இது எனது முதல் தடவையல்ல, எனது கணவரை சிறைப்படுத்திய சந்தர்ப்பத்திலும், எனது கணவர் விடுதலையாகுவதற்காக நான் எழுந்து நின்றேன்.

எனது இரண்டு பிள்ளைகளும் ஒரு போதும் அரசியலுக்கு வரப்போவதில்லை, இந்த பயணம் நாட்டின் எதிர் காலத்திற்கே தவிர எங்கள் குடும்பத்திற்காக அல்ல.

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன மற்றும் பிரதமருடன் எங்களின் கட்சி தலைமைத்துவத்திற்கிடையிலும் வலிமையான பிணைப்பு காணப்படுவதாகவும், நாட்டின் நலனுக்காக அனைத்து நடவடிக்கைகளும் மேற்கொள்வ்தாக கம்பஹா மாவட்ட வேட்பாளர் அனோமா பொன்சேகா மேலும் தெரிவித்துள்ளார்.

# சு.க.மத்திய செயற்குழுக்கூட்டம் ஜனாதிபதியுடன் நாளை பேச்சு

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் மத்திய செயற்குழுவை கூட்டுவது தொடர்பில் கட்சியின் தலைவர்ான ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவிடம் நாளை பேச்சுவார்த்தை நடத்தப்படவுள்ளது.

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் பொதுச் செயலாளர் அநுர பிரியதர்ஷன யாப்பா மற்றும் கட்சியின் தேசிய அமைப்பாளர் சுசில் பிரேமஜயந்த ஆகியோர் ஜனாதிபதியை சந்தித்து இது தொடர்பில் பேச்சுவார்த்தை நடத்தவுள்ளதாக கட்சி வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் மத்திய செயற்குழுவை கடந்த புதன்கிழமை கூட்டுவதற்கு தீர்மானிக்கப்பட்டது. எனினும் சுதந்திரக் கட்சியின் யாப்பின் பிரகாரம் கட்சியின் தலைவரது அனுமதியின்றி மத்திய செயற்குழுவை கூட்டமுடியாதென தெரிவித்து, நீதிமன்றத்தால் அதற்கு இடைக்கால தடையுத்தரவு பிறப்பிக்கப்பட்டது.

இதனையடுத்து க்ட்சியின் மத்திய செயற்குழுவை கூட்டுமாறு சுதந்திரக் கட்சியின் 22 உறுப்பினர்கள் கட்சியின் செயலாளரிடம் எழுத்து மூலம் கோரிக்கை விடுத்துள்ளனர்.

இந்நிலையில், குறித்த எழுத்து மூலமான கோரிக்கையுடன் ஜனாதிபதியை சந்திக்கவுள்ள இவர்கள், செயற்குழுவை கூட்டுவது தொடர்பில் இறுதித் தீர்மானம் எடுப்பார்களென தெரிவிக்கப்படுகிறது.

## அஞ்சல் திணைக்களத்தில் பதவி வெற்றிடங்கள்

தொழில்நுட்பம் அல்லாத மற்றும் தொழில் நுட்பபதவி தொகுதியின் கண்காணிப்பு முகாமைத்துவ உதவியாளர் பதவிக்கான விண்ணப்பங்களை அஞ்சல் திணைக்களம் கோரியுள்ளது.

விண்ணப்பதாரி 18 முதல் 30 வயதுக்குட்பட்டவராகவும் க.பொ.த சாதாரண தரத்தில் 4 பாடங்களில் திறமைச்சித்தியுடன் 6 பாடங்களிலும், உயர்தரத்தில் 3 பாடங்களிலும் ஒரே அமர்வில் சித்தியடைந்தவராகவும் இருத்தல் வேண்டும்.

மூன்றாம் நிலை தொழில் கல்வி ஆணைக்குழுவில் பதிவு செய்யப்பட்டுள்ள நிறுவனத்தினால் 360 மணித்தியாலங்களுக்கு குறையாத NVQ Level-3 பாடநெறி அல்லது அதற்கு மேலான பாட நெறியை பூர்த்தி செய்துள்ளமை கணனி அறிவு என்பன தொழில் தகைமைகளாக கருதப்படும்.

பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பங்களை எதிர்வரும் 27 ஆம் திகதிக்கு முன் பரீட்சை ஆணையாளர் நாயகம், ஒழுங்கமைப்பு மற்றும் வெளிநாட்டு பரீட்சைகள் பிரிவு, இலங்கை பரீட்சைத் திணைக்களம், த.பெ.இல 1503, கொழும்பு என்ற முகவரிக்கு அனுப்பி வைக்குமாறும் அந்த அறிவித்தலில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ)

# பின்தங்கிய பகுதிகள் அபிவிருத்திக்காக ஏன் முன்னுரிமை காட்டவில்லை

## கூட்டமைப்பிடம் சமூக மேம்பாட்டு இணையத்தின் செயலாளர் கேள்வி

(யாழ்ப்பாணம்)

நாடாளுமன்ற உறுப்பின்ருக்கான 5 ஆண்டு வரவு செலவு திட்ட நிதி ஒதுக்கீட்டில் பின்தங்கிய பிரதேசங்கள் ஏன் முன்னுரிமைப்படுத்தப்படவில்லையென சமூக மேம்பாட்டு இணையத்தின் செயலாளர் ப.கேசவதாசன் தமிழ்த்தேசியக் கூட்டமைப்பிடம் கேள்வியெழுப்பியுள்ளார்.

வலி.மேற்கில், தொல்புரம் கலைவாணி சனசமூக நிலையத்தின் தமிழ் கூட்டமைப்பின் எம்பிக்கள், வடக்கு மாகாண சபை உறுப்பினர்களிடம் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற சந்திப்பிலேயே இக் கேள்வியை அவர் எழுப்பியுள்ளார்.

சமூக மேம்பாட்டு இணையத்தின் செயலாளர் ப.கேசவதாசன் தலைமையில் இடம்பெற்ற இக் கலந்துரையாடலில், இணையத்தின் 53 சனசமூக நிலைய பகுதிகளை உள்ளடக்கி அதன் 32 பிரதிநிதிகள், மற்றும் சுழிபுரம் பகுதி சமூக ஆர்வலர்கள், இளைஞர்கள் எனப்பலரும் கலந்து கொண்டனர்.

இச்சந்திப்பில் உரையாற்றிய இணையத்தின் செயலாளர்,

வட்டுக்கோட்டை தொகுதிக்கான ஒரு நாடாளுமன்ற உறுப்பினரை கடந்த அரசாங்கத்தில் உங்கள் கட்சி பெற்றுக் கொண்டுள்ளது. இவருக்காக 5 ஆண்டுகளுக்கும் பொதுவில் 250 இலட்சம் ரூபா இத் தொகு திக்கென நாடாளுமன்றத்தால் ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்தும் எமது பின்தாங்கிய பகுதி மக்களின் திட்டங்களுக்காக இந்த நிதியில் எதுவும் செலவழிக்கப் பட்டதாக எம்மால் உணர முடியவில்லை.

வட்டுக்கோட்டை தொகுதியில் கல்வி, தொழில்வாய்ப்பு, பொருளாதாரம், அடிப்படைவசதிகள் மற்றும் உட்கட்டமைப்பு வசதிகளில் மிகவும் பின்தங்கிய நிலையில் வாழும் எமது பிரதேசங்களை கிராமங்களை நீங்களும் நன்கறிவீர்கள்.

இந்தக் கிராமங்களுக்கு உங்கள் எம்பிக்களின் ஒதுக்கீடுகள் எவையும் கிடைத்ததாக தெரிவியவில்லை. என்பதும் உங்களுக்கு தெரியும். இந்த நிலையில் இந்த தேர்தல் சமயத்தில் இந்த மக்களிடம எந்த முகத்துடன் வந்துள்ளீர்கள் என்பதை எம்மால் புரிந்து கொள்ளமுடியாமல் உள்ளதாக அவர் குறிப்பிட்டார்.

இதற்கு பதிலளித்து உரையாற்றிய தமிழ் கூட்டமைப்பு எம்.பி. சித்தார்த்தன், உங்களது கேள்வியில் நிறைய நியாயம் இருப்பதை ஒத்துக்கொள்கிறேன். வலி.மேற்கு பிரதேசத்தின் பின்தங்கிய பகுதிகளுக்கான தமிழ் கூட்டமைப்பின் கட்சி பிரதிநிதிகள் சரியான முறையில் நியமிக்கப்படாமைதான் இதற்கு பிரதான காரணமென்பதை சித்தார்த்தன் ஒப்புக்கொண்டார்.

இங்குள்ள மக்கள் எதிர் கொள்ளும் அடிப்படைப்பிரச்சினைகள் குறித்து வடக்கு மாகாண சபையின் கவனத்திற்கு கொண்டு செல்லவிருப்பதாகவும் மாவை சேனாதிராஜா எம்.பியுடன் மீண்டும் ஒரு சந்திப்புடன் மக்களின் தேவைகளை ஆராயஇருப்பதாக இச் சந்திப்பில் கலந்து கொண்ட வடமாகாண சபையின் தவிசாளர் சி.வி.கே.சிவஞானம் தெரிவித்தார்.

குறிப்பாக அரச நியமனங்களில் சிற்றூழியர் தரத்திலான வேலைவாய்ப்புக்களிலும் கூட எமது மக்கள் திட்டமிட்டு புறக்கணிக்கப்பட்டிருக்கின்றனர். வீதி திருத்தம், மின் விநியோகம், வீடமைப்பு உதவிகள் போன்றவை வசதிபடைத்த மக்கள் வாழும் பகுதிகளுக்கே வழங்கப்பட்டிருப்பதையும் இணையத்தின் செயலாளர் இச்சந்திப்பில் சுட்டிக்காட்டினார். எமது மக்களுக்கென நீண்ட காலமாக அரசின் உதவிகளை பெற்றுக்கொள்வதற்கான வாய்ப்புக்கள், குறிப்பாக பல்வேறு திணைக்களங்களிலும் நிறைவேற்றுத்தரத்திலிருக்கும் அதிகாரிகளால் திட்டமிட்டு புறக்கணிக்கப்பட்டுவருவதும், இச்சந்திப்பில சுட்டிக்காட்டப்பட்டது.

இந்தப் புறக்கணிப்பை, வேண்டுமென்றே தமிழ்கூட்டமைப்பு எம்பிக்கள் கண்டும்காணாமல் இருந்து வருவது பற்றியும் இச்சந்திப்பில் இணையத்தின் பிரதிநிதிகள் சுட்டிக்காட்டினர். மத்தியில் பதவியிலிருக்கும் அரசின் மீது எமக்கு வெறுப்பேற்றுவதன் மூலம் தமிழ்ச் சூழலில் அதிகாரத்திலிருந்தோர் எமது மக்களுக்கான வள வாய்ப்புக்களை மறிதலித்து வந்ததை போதிய விழிப்புணர்வின்மை காரணமாக எமது மக்கள் இனங் கண்டு கொள்ள தவறிவிட்டனர்.

இந்த நிலை இனிமேலும் தொடரக்கூடாதென்பதில் நாம் உறுதியாக உள்ளோம். சமூகத்தில் தாம் பிற்படுத்தப்பட்டிருப்பதற்கான காரணிகளில் அகக்காரணிகளே பிரதான பங்கு வகித்திருப்பதையும் எதிர்காலத்தில் எமது மக்கள் எதிர்கொள்ளும் அவலங்களை அம் மக்களுடன் வாழ்ந்து பட்டறிந்து கொண்டுள்ள நேர்மையான சமூகப் பணியாளர்களையே இம் மக்கள் தமக்கான பிரநிதியியாக தேர்ந்து கொள்ள வேண்டும் என்பதிலும் நாம் உறுதியாக உள்ளோமென இணையத்தின் பிரநிதிநிகள் மேலும் தெரிவித்தனர். (அ)

## நெடுங்கேணி மீன் சந்தையில் சின்னறால் ஆயிரம் ரூபா

(யாழ்ப்பாணம்)

நெடுங்கேணிபொதுமீன் சந்தையில் சின்னறாலின் விலை ஆயிரம் ரூபாய்க்கு விற்பனை செய்யப்பட்டுவருகின்றது.

முல்லைத்தீவுவட்டுவாகல் கடற்கரைப்பகுதியில் மீனவர்களினால் சின்னறால் 550 முதல் 600 ரூபா வரைவிற்பனை செய்யப்பட்டுவருகின்றது.

அதனை கொள்வனவு செய்யும் வியாபாரிகள் நெடுங்கேணிசந்தையில் கொண்டு வந்து 400 - 450 வரை ஒரு கிலோவுக்குலாபம் வைத்து ஆயிரம் ரூபாய்க்கு விற்பனைசெய்துவருவதால் மக்கள் இதனைவாங்கிச் சாப்பிடுவதில் பெரும் பொருளாதார நெருக்கடியினை சந்தித்துவருவதாக மக்கள் கவலைதெரிவித்துள்ளனர்.

இதனை விலைக்கட்டுப்பாட்டு பிரிவினர் கவனத்திற் கொண்டு இதற்கான விலையினை மக்கள் பாதிக் கப்படாத அளவுக்கு வியா பாரிகளினால் விற்பனை செய்யப்படவேண்டுமென கோரிக்கை விடுத்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (40)



மருதனார் மடம் சந்தைக்கான புதிய கடைத் தொகுதி பல மில்லியன் ரூபா செலவில் அமைக்கப்பட்டு வருவதையும், ஒரு பகுதி நவீன கடைத்தொகுதியின் கட்டடவேலைகள் பூர்த்தியடைந்திருப்பதையும் காணலாம். (66)

## புதுக்குடியிருப்பு பிரதேச செயலக கலை இலக்கியப்போட்டி முடிவுகள்

புதுக்குடியிருப்பு பிரதேச செயலகத்தால் நடாத்தப்பட்ட கலை இலக்கியப் போட்டி முடிவுகள் வெளியிடப்பட்டுள்ளன.

போட்டிகளில் வெற்றியீட்டிய மாணவர்களின் விபரம் வருமாறு:

**கவிதை நயத்தல் போட்டி**

ச.அகனிலா, அ.அனுசியா (பாரதி வித்தியாலயம்).

**கனிஷ்ட பிரிவு (கவிதைப் போட்டி)**

ர.ரதுசாயினி (மந்துவில் அரசரட்ணம் வித்தியாலயம்), இ.யாழினி (வள்ளிபுனம் கனிஷட உயர்தரப் பாடசாலை), வி.அபிவர்ணா (உடையார்கட்டு மகா வித்தியாலயம்).

**கனிஷ்டபிரிவு (கட்டுரைப் போட்டி)**

சி.மேனுஜா (ஆனந்தபுரம் அரசினர் தமிழ்க்கலவன் பாடசாலை), த.தமிழ்பிரியா (மந்துவில் அரசரட்ணம் வித்தியாலயம்), வி.அபிவர்ணா .(உடையார் கட்டு மகா வித்தியாலயம்).


**சிரேஷ்டபிரிவு (கவிதைப போட்டி)**

ர.பவித்திரா (உடையார்கட்டு மகாவித்தியாலயம்), சி.அகலிசை (சுதந்திரபுரம் அரசினர் தமிழ்க்கலவன் பாடசாலை), இ.கீர்த்தனா (பாரதி வித்தியாலயம்).

**சிரேஷ்டபிரிவு (கட்டுரைப் போட்டி)**

தி.தீர்ச்சனா (உடையார் கட்டு மகாவித்தியாலயம்), நி.யாழிசை (பாரதி வித்தியாலயம்), கே.சாலினி (உடையார்கட்டு மகாவித்தியாலயம்).(160)

## ஒதியமலை வாசிகசாலை புனர்நிர்மாணம் செய்யப்படுமா?



முல்லைத்தீவு ஒதியமலை வாசிகசாலைநீண்டகாலமாக புனர் நிர்மாணம் செய்யப்படாதநிலையில் காணப்படுகின்றது.

ஒதியமலை வாசிகசாலை நீண்டகாலமாக மேல்ப்பகுதி உடைந்த நிலையில் காணப்படுகின்றது. இதனைபுனர் நிர்மாணம் செய்துதரும்படி கிராமமக்களினால் பலதடவைகள் சம்மந்தப்பட்டஅதிகாரிகளிடம் முறையிட்டபோதிலும் எந்தவித பயனும் கிடைக்கவில்லை.

இவ் வாசிகசாலையானது இக் கிராமமக்களின் வரலாற்றில் பல துயரச் சம்பவங்களை நினைவு கூர்ந்து நிற்கின்றது. அரசியல் வாதிகளோ அதிகாரிகளோ இந்த வாசிகசாலைமீது கவனம் செலுத்துவதில்லை என அப்பகுதிமக்கள் கவலை தெரிவிக்கின்றனர்.(40)

## நயினாதீவு குடிநீர் விநியோகம் 3 இலட்சம் ரூபா நிதி உதவி

(நயினாதீவு)

நயினாதீவுபகுதி மக்களின் குடிநீர் விநியோகத்துக்கென 3 இலட்சம் ரூபா நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

இங்குள்ள மக்களின் குடிநீர் தேவையை கவனத்தில் கொண்டு நயினாதீவு பகுதி மக்களுக்கான சுவிஸ் ஒன்றியம் இந் நிதியை வழங்கியுள்ளது.

தற்சமயம் இங்குள்ள கிணறுகள் அனைத்தும் வற்றிவிட்ட நிலையில், வெளியிடங்களில் இருந்து நீரைத்தருவிப்பதற்கு உதவுமாறு இங்குள்ள பொது அமைப்புக்களின் பிரதிநிதிகள் விடுத்த வேண்டுகோளை கவனத்தில எடுத்து இந்த நிதியை வழங்கியதாக சுவிஸ் ஒன்றியத்தின் இணைப்பாளர் மு.மகாலிங்கம் தெரிவித்தார்.

பிரதேச மக்களின் இக்கட்டான நிலமையை கவனத்திலெடுத்து இந் நிதியை வழங்கி உதவியமைக்காக வேலணை பிரதேச சபை உறுப்பினர் ந.கருணாகரமூர்த்தி சுவிஸ் ஒன்றியத்தின் இணைப்பாளருக்கு தனது நன்றிகளைத் தெரிவித்துள்ளார்.

நாடாளுமன்ற பொதுத் தேர்தல் - 2015



முருகேசு சந்திரகுமார்

(முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர்)



ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சி (ஈ.பி.டி.பி.)

## நாடாளுமன்ற கலைப்பின் பின்னர் பொருளாதாரத்தை நலிவுறுத்தும் அரசு

### ஜி.எல்.பீரிஸ் குற்றச்சாட்டு

(கொழும்பு)

நாடாளுமன்றம் கலைக்கப்பட்டதன் பின்னர் தற்போதைய அரசாங்கம் நாட்டின் பொருளாதாரத்திற்கு பாதிப்பு ஏற்படுத்தும் நடவடிக்கையை மேற்கொள்கின்றது என முன்னாள் அமைச்சர் ஜி.எல்.பீரிஸ் தெரிவித்தார்.

நேற்றுமுன்தினம் கொழும்பில் எதிர்க்கட்சித் தலைவரின் அலுவலகத்தில் இடம்பெற்ற செய்தியாளர் மாநாட்டிலேயே அவர் இவ்வாறு குறிப்பிட்டார். அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில்,



நாடாளுமன்றம் கலைக்கப்பட்டதன் பின்னர் நடைமுறையில் உள்ள அரசாங்கம் நாட்டின் பொருளாதாரத்திற்கு பாதிப்பு ஏற்படுத்தும் நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளது. இதற்கு அமைய சர்வதேச கடன்களை பெற்றுக்கொள்கின்றது. பல்வேறான உடன்படிக்கைகளைக் கைச்சாத்திடுகின்றனர். கேள்விப் பத்திரம், ஒப்பந்தக்காரர்களுக்கு அனுமதி என்பன தொடர்ச்சியாக வழங்கப்பட்டு வருகின்றன.

இவற்றில் அநேகமானவை அதன் நடைமுறைகளுக்கு அமைய செயற்படுத்தப்படவில்லை. அண்மையில் 600 மில்லியன் அமெரிக்க டொலர் பெறுமதியான கடன் பெற்றுக்கொள்ளப்பட்டுள்ளது. இவ்வாறு பெற்றுக் கொள்ளப்பட்ட இந்தக் கடனினால் இந்த நாட்டுக்கு எதுவித நன்மையும் கிடைக்கப்போவதில்லை.

எனவே, எதிர்வரும் ஆகஸ்ட் மாதம் 18ஆம் திகதி மகிந்த ராஜபக்ஷ தலைமையில் அமையும் புதிய அரசாங்கம் இவை குறித்து தனித்தனியே ஆராயும். அதனை நடைமுறைப்படுத்துவதற்கு நான் தயார் இல்லை. அது பிழையாகவும் நாட்டிற்கு அவசியமான முறையில் செயற்படுத்தப்பட்டு இருக்குமானால் அதனை முன்னெடுத்துச் செல்வது எமது பொறுப்பாகும் எனவே இது குறித்து நாம் மாற்றமொன்றைச் செய்வோம் என்றார்.

## அரசியலில் எவரையும் நம்ப முடிவதில்லை

### முன்னாள் அமைச்சர் குணரட்ன வீரக்கோன் தெரிவிப்பு

(கொழும்பு)

அரசியலில் எவரையும் நம்ப முடியவில்லை அமைச்சர்கள் நாய்களை விடவும் பெறுமதியற்றவர்கள் என முன்னாள் அமைச்சர் குணரட்ன வீரக்கோன் தெரிவித்துள்ளார்.

தேர்தல் பிரசாரக் கூட்டமொன்றில் உரையாற்றிய அவர் மேலும தெரிவித்துள்ளதாவது,

இந்த தேர்தல் முறைமையில் என் மீது எனக்கே நம்பிக்கையில்லை.

நன்மைகள் கிடைத்தவுடன் ஒரு பக்கமிருந்து மற்றைய பக்கத்திற்கு தாவுவதனால் இந்த நிலைமை ஏற்பட்டுள்ளது.

மகிந்தவுக்காக குரல் கொடுப்போரை நாடாளுமன்றம் அனுப்பி வைக்க வேண்டும்.

நான் கடந்த காலங்களில் ஜே.வி.பி. கட்சியில் இணைந்து செயற்பட்டிருந்தேன்.

படையினரின் தாக்குதல்களும் பொலிஸாரின் தாக்குதல்களுக்கும் இலக்காகி நான் நன்றாக பண்பட்டு விட்டேன். முடிந்தால் எனக்கும் ஓர் விருப்பு வாக்கு வழங்குங்கள்.

மகிந்தவுக்கு முன்னால் சென்று அனுராதபுரத்தில் பாசமாக நடித்தவர்கள் பலர், நாடாளுமன்றில் என்னென்ன சொன்னார்கள் என்பது எனக்குத் தெரியும் என்றார்.

### சுனாமி நிதி புலிகளுக்கு

## குற்றம் நிரூபணமானால் மகிந்தவிற்கு குடியுரிமை இரத்து

### என்கிறார் அனுரகுமார

மகிந்த ராஜபக்ஷ பிரதமராக இருந்த போது சுனாமி அனர்த்



தம் காரணமாக வடக்கில் இடம் பெயர்ந்த மக்களுக்கு வீடுகளை நிர்மாணிக்கும் போர்வையில் விடுதலைப் புலிகளுக்கு நிதி வழங்கியதாக மக்கள் விடுதலை முன்னணியின் தலைவர் அனுர குமார திஸாநாயக்க தெரிவித்துள்ளார்.

இந்தக் குற்றச்சாட்டு நிரூபிக்கப்பட்டால், மகிந்த ராஜபக்ஷவின் குடியுரிமையை இர்த்துச் செய்ய முடியும் எனவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

குருநாகலில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற மக்கள் விடுதலை முன்னணியின் தேர்தல் பரப்புரைக் கூட்டத்தில் பேசும் போதே அவர் இதனை கூறியுள்ளார்.

இது குறித்து ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவிடம் வினவியதாகவும் ஜனாதிபதி ஆணைக்குழு நடத்தும் விசாரணைகளின் பின்னர் குற்றவாளி என நிரூபிக்கப்பட்டால், குடியுரிமை இரத்தாகும் எனக் கூறியதாகவும் அனுரகுமார திஸாநாயக்க கூறியுள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

இரண்டு வருடங்கள் எஞ்சியிருக்கும் போது சோதிடர்களின் ஆலோசனைப்படி மகிந்த தேர்தலை நடாத்தினார்.

நாடாளுமன்ற உறுப்பினராக, பிரதியமைச்சராக, அமைச்சரவை அந்தஸ்துள்ள அமைச்சராக, எதிர்க்கட்சித் தலைவராக, பிரதமராக, ஜனாதிபதியாக பதவி வகித்து விட்டு மீண்டும் நாடாளுமன்ற உறுப்பினராக முயற்சித்து வருகிறார்.

ஜனாதிபதி பதவி இல்லாமல் போனதும் பிரதமர் பதவிக்கு வர முயற்சிக்கின்றார். ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியை ராஜபக்ஷ அணியினரிடம் இருந்து காப்பாற்ற வேண்டும். சிரமத்துடன் அதனை செய்ய ஜனாதிபதி மைத்திரி பால சிறிசேன முயற்சித்து வருகிறார்.

மகிந்த ராஜபகஷவிடம் இருந்து ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியை பாதுகாக்க வேண்டுமாயின் வெற்றிலைக்கு எதிராக வாக்களியுங்கள் என அனுரகுமார திஸாநாயக்க குறிப்பிட்டுள்ளார்.

## உத்தியோகபூர்வ வாகனங்களுக்கு கட்டணத்தைச் செலுத்தத் தயார்

### மகிந்த அறிவிப்பு

(கொழும்பு)

தன்னால் பயன்படுத்தப்படும் இரண்டு உத்தியோகபூர்வ வாகனங்களுக்கு கட்டணம் செலுததப்பட வேண்டுமாயின் அது குறித்து உடனடியாக அறியத் தருமாறு முனனாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ, ஜனாதிபதியின் செயலாளர் பீ.பி. அபேகோனிடம் கோரிக்கை விடுத்துள்ளார்.

நேற்றுமுன்தினம் முற்பகல் அந்த கோரிக்கையை விடுத்ததாகவும் அவர் கூறியுள்ளார். குருநாகல் கல்கமுவ பிரதேசத்தில் நடைபெற்ற தேர்தல் பிரச்சாரக் கூட்டத்திலேயே அவர் இதனை குறிப்பிட்டுள்ளார்.

தனக்கு வழங்கப்பட்டுள்ள இரு வாகனங்களை தான் தேர்தல் பிரசாரப் பணிகளுக்காக பயன்படுத்துவதாகவும் அவர் அறிவித்துள்ளார்.

இதனால், அதற்கான கட்டணத்தை செலுத்த வேண்டுமாயின் அது பற்றி அறியத தருமாறும் அவர் கோரியுள்ளார்.

அமைச்சர்களுக்கு வழங்கப்பட்டுள்ள வாகனங்களை தேர்தல் பிரச்சாரத்திற்கு பயன்படுத்தினால், அதற்காக ஒரு லட்சம ரூபாவை கட்டணமாக பெறுவது என அரசாங்கம் அண்மையில் தீர்மானித்தது.

அரசாங்கத்தின் இந்த தீர்மானம் காரணமாக தானும் கட்டணத்தை செலுத்த தயார் என முன்னாள் ஜனாதிபதி கூறியுள்ளார்.




## தேர்தல் பிரசார கூட்டமாக மாறும் பரீட்சைக் கருத்தரங்குகள்

### தேர்தல்கள் ஆணையாளர் குற்றச்சாட்டு

(கொழும்பு)

பரீட்சை கருத்தரங்குகள் என்ற போர்வையில் தேர்தல் பிரசார நடவடிக்கைகளை முன்னெடுக்க கூடாதென, தேர்தல்கள் ஆணையாளர் மகிந்த தேசப்பிரிய எச்சரிக்கை விடுத்துள்ளார்.

கல்விப் பொதுத் தராதர உயர்தரப் பரீட்சை மற்றும் தரம் ஐந்து புலமைப் பரிசில் பரீடசை ஆகியவற்றை காரணம் காட்டி பரீட்சைக்குத் தோற்றும் மாணவர்களின் பெற்றோர்களை அழைத்து மேற்கொள்ளும், தேர்தல் பிரசாரங்களை இரத்துச் செய்ய



வேண்டுமென அவர் குறிப்பிட்டுள்ளார்.

இது தொடர்பில் முறைப்பாடுகள் கிடைக்கப்பெற்றன அறிவுறுததலை மீறிச் செயற்படுபவர்களுககு எதிராக கடும் சட்ட நடவடிக்கை எடுக்கப்படும்.

இதேவேளை பாடசாலை அபிவிருத்திக் கூட்டங்கள் மற்றும் பழைய மாணவர் கூட்டங்களை நடாத்துவதற்கு எவ்வித தடையும் இல்லை பாடசாலை தொடர்பான எவ்வாறான கூட்டங்களிலும் வேடபாளர்கள் பங்கேற்க கூடாதென்றும், இது குறித்து பாடசாலை அதிபர்கள் தெளிவுபடுத்த வேண்டு மென றும் கேட்டுக்கொண்டார்.

# யாழ்ப்பாணம் - அக்கராயன் பிரதான பாதை

# 4 கிலோ மீற்றர் புனரமைப்பு எப்போது?

## பொது மக்கள் கேள்வி



(கிளிநொச்சி)

கிளிநொச்சி பூநகரி முட்கொம்பன் கிராமத்திலிருந்து அக்கராயன் நோக்கிய நான்கு கிலோ மீற்றர் வீதி புனரமைக்கப்படுமானால் யாழ்ப்பாணத்திலிருந்து பூநகரி வழியாக கிளிநொச்சியின் ஸ்கந்தபுரம் வரையான வீதி புனரமைப்பு முழுமை பெறும் யாழ்ப்பாணத்திலிருந்து முட்கொம்பன் வரையும் தற்போது வீதி புனரமைக்கப்பட்டுள்ளது.

முட்கொம்பன் கிராமத்திலிருந்து ஸ்கந்தபுரம் வரையான நான்கு கிலோமீற்றர் வீதி புனரமைக்கப்படாத நிலையில் குன்றும் குழியுமாகக் காணப்படுகின்றது. தற்போது 427 மில்லியன் ரூபா செலவில் வீதி அபிவிருத்திதிணைக்களத்தினால் அக்கராயன் மருத்துவமனையிலிருந்து ஸ்கந்தபுரம் கரும்புத்தோட்டம் பிளையார் கோவில் வரையான வீதி புனரமைக்கப்பட்டு வருகின்றன.

கரும்புத்தோட்டம் பிள்ளையார் கோவிலுக்கும் முட்கொம்பன் கிராமத்திற்குமிடையிலான நான்கு கிலோமீற்றர் வீதி குன்றும் குழியுமாக காணப்படுவதன் காரணமாக யாழ்ப்பாணத்திற்கும் அக்கராயனுக்குமிடையில் நடைபெறுகின்ற அரச பேருந்துப்பணி குன்றும்குழியுமான வீதிவழியாகவே இடம்பெறுகினறது. குறித்த நான்கு கிலோ மீற்றர் வீதியினை புனரமைத்துத் தருமாறு முட்கொம்பன் கிராம அபிவிருத்திச்சங்கம் பூநகரிப் பிரதேச செயலர் மற்றும் கிளிநொச்சி மாவட்ட செயலர் ஆகியோரிடம் மனுக்கையளித்துள்ளது. (160)

# மாவைக் கந்தனின் காம்யோற்சவப் பெருவிழா

(யாழ்ப்பாணம்)

வாழ்வு பெற்ற வல்லி சோழ இளவரசி மாருதப்புரவீகவல்லியின் மாவை ஆதீனப்பேரரசு அருள் மிகு மாவிட்டபுரம் ஸ்ரீ கந்தசாமி கோவில் காம்யோற்சவப் பெருவிழா இன்று செவ்வாய்க்கிழமை ஆரம்பமாகி 25 தினங்கள் திருவிழாக்கள் இடம்பெறவுள்ளன.

தினமும் காலை 6 மணிக்கு உஷத்காலப்பூசையும், 9.30 மணிக்கு ஸநபனாபிஷேகமும் இடம்பெற்று மு.ப.10.30 மணிக்கு காலை சாந்தி பூசையும் 11.30 மணிக்கு வசந்த மண்டப பூசையுடன் 12 மணிக்கு திருவிழா இடம்பெற்று 12.30 மணிக்கு இற்கு உச்சிக்கால பூசையுடன் அன்னதானமும் இடம்பெறவுள்ளது.

மாலை உற்சவத்தில் பிற்பகல் 4.30 மணிக்கு ஸ்நபனாபிஷேகம், 5.30 இற்கு சாயரட்டை பூசை, 6 மணிக்கு 2 ஆம் காலைப் பூசையைத் தொடர்ந்து வசந்த மண்டப பூசை திருவிழா என்பன இடம்பெறும்.

இதேவேளை 25 ஆம் திகதி சனிக்கிழமை சண்முகர் திருநடனம் மு.ப. 11.30 இற்கு இடம்பெறும். அத்தோடு எதிர்வரும் 13 ஆம் திகதி வியாழக்கிழமை மு.ப. 10 மணிக்கு இரதோற்சவம் இடம்பெறுவதுடன் மறுநாள வெள்ளிக்கிழமை காலை 5.30 மணிக்கு சுவாமி கீரிமலை தீர்த்தத்திற்கு புறப்படும், காலை 6.30 மணிக்கு கண்டத்தீர்த்தமும் மாலை 5 மணிக்கு கீரிமலையிலிருந்து சுவாமி புறப்படுதல் என்பன இடம்பெறவுள்ளன. (இ)

# ஆடைத்தொழிற்சாலையில் பதவி வெற்றிடங்கள்

ஆடைகளை உற்பத்தி செய்வதற்கான இயந்திர இயக்குநர்களை பயிற்றுவிக்கும் திட்டமொன்றை LEE HEDGES PLC நிறுவனம் யாழ்ப்பாணம், மானிப்பாயில் ஆரமபிக்கவுள்ளது.

இத்திட்டத்தை நடைமுறைப்படுத்தவென தொழிற்சாலை முகாமையாளர், மேற்பார்வையாளர்கள், போதனையாளர், இயந்திர இயக்குநர்கள் பதவிக்கு பொருத்தமான நபர்களிடமிருந்து நிறுவனம் விண்ணப்பங்களை கோரியுள்ளது.

இது தவிர 18 முதல் 30 வயதுக்குட்பட்ட பயிலுநர் இயந்திர இயக்குநர்கள் JUKI தையல் இயந்திர திருத்துநர்கள், மின்னியலாளர்கள் உதவியாளர்கள், பாதுகாப்பு ஊழியர்களுக்கான வெற்றிடங்களுக்கு விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

ஆர்வமுள்ளவர்கள் தமது சுயவிபரங்களை அடுத்த இரு வாரங்களுக்குள் pplh@leehedges.lk என்ற மின்னஞ்சல் முகவரிக்கு அனுப்பி வைக்குமாறும் அந்த நிறுவனம் வெளியிட்ட அறிவிப்பில தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ)

# கண்காட்சியும் சஞ்சிகை வெளியீடும்

(நவாலி)

நவாலி சென்பீற்றேஸ் றோ.க.த.க. பாடசாலையின் 13 ஆவது வருடத்தை வரவேற்கும் விழா கற்றல் கற்பித்தல் உபகரணக் கண்காட்சியும் அருணன் சஞ்சிகை வெளியீடும் இன்று செவ்வாய்க்கிழமை காலை 9 மணிக்கு அதிபர் க.ஸ்ரீநந்தகோபால் தலைமையில் நடைபெறவுள்ளது.

ஆசியுரையினை நவாலி பங்குத்தந்தை செ.றோய் பேடினன்ட் அடிகளார் வழங்கவுள்ளார்.

பிரதம விருந்தினராக வடமாகாண பிரதிக்கல்விப் பணிப்பாளர் க.மணிமாறன் சிறப்பு விருந்தினராக திருமதி ம.விக்னராஜா (உதவிக்கல்விப் பணிப்பாளர் மாகாணக்கல்வித் திணைக்களம் வடமாகாணம்) கௌரவ விருந்தினர்களாக வலிகாமம் வலய உதவிக் கல்விப் பணிப்பாளர் திருமதி.றூபா உதயரட்ணம் ஆகியோர் கலந்து சிறப்பிக்க உள்ள்னர். (66)



நவாலி தெற்கு காக்கை தீவு வயல் மற்றும் வீதி ஓரங்களில் கொட்டப்படும் கழிவுகள், பிளாஸ்ரிக்போத்தல்கள் ஏனைய கழிவுப் பொருட்களை காணலாம் (66)


நாடாளுமன்ற பொதுத் தேர்தல் - 2015







ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சி (ஈ.பீ.டி.பி.)


## முரசின் இன்றைய பலன்

21.07.2015 செவ்வாய்க்கிழமை

மன்மத வருஷம் ஆடி மாதம் 29 ஆம் திகதி.
அமிர்த சித்த யோகம் / பஞ்சமி திதி
உத்தர நட்சத்திரம் பின்னிரவு - 2.40 வரை பின் அத்தம்
இராகுகாலம் 3.01 - 4.31 வரை சுப நேரம் 10.31 - 12.01 வரை



ஜோதிர் வித்யா ரத்னா வி.ஏ.சிவராசா அவர்களால் கணிக்கப்பட்டது.

**மேடம்** – சுவீப் அதிர்ஷ்டமுண்டாகலாம்

**ரிஷபம்** – பிள்ளைகளின் நடத்தைக் கோலங்களைக் கண்காணித்தல் அவசியம்

**மிதுனம்** – ஆடம்பரப் பொருட்களை கொள்வனவு செய்ய கடன் படுதல்

**கடகம்** – விழாக்களில் தம்பதியர் சகிதம் பங்கு கொண்டு சிறப்பித்தல்

**சிம்மம்** – வெளிநாட்டினின்றும் உறவினர் வருகை ஆனந்தத்தை தருதல்

**கன்னி** – வாகனம் தொல்லை கொடுப்பதினால் உரிய நேரத்திற்கு சமுகமளிக்காமை

**துலாம்** – திகதி தப்பிய பொருட்களைக் கவனிக்காது கொள்வனவு செய்து கவலைப்படல்

**விருச்சிகம்** – எய்தவன் இருக்க அம்பை நோகும் நிலையில் இருந்து கவலைப் படல்

**தனுசு** – தொலைந்த ஆவணத்தை பகீரதப்பிரயத்தனமெடுத்து தேட முற்படல்

**மகரம்** – வாகனத்தில் ஒழச் சென்று ஏற முற்பட்டவேளை ஆபத்தினை எதிர்பார்க்கல்

**கும்பம்** – விட்டுக்கொடுப்பதினால் முரண்பாடு விலகி சுமுக நிலை ஏற்படல்

**மீனம்** – மன அமைதி பெற யோகா, மற்றும் தியானப் பயிற்சியில் ஈடுபடல்

# மைலோ கிண்ண வலைப்பந்து
# வடக்கு பாடசாலை அணிகள் பங்குபற்றாதது வியப்பாக உள்ளது
## ஏற்பாட்டாளர்கள் அதிர்ச்சி




(யாழ்ப்பாணம்)

மைலோ கிண்ண வலைப்பந்தாட்ட இறுதிச் சுற்றில் நாட்டின் பல்வேறு பகுதிகளிலிருந்தும் 250 இற்கும் மேற்பட்ட பாடசாலை அணிகள் விளையாட தகுதிபெற்றுள்ளன.

எனினும் வட மாகாணத்திலிருந்து எந்தவொரு பாடசாலையும் பங்குபற்றாதமை வியப்பை தருவதாக போட்டி ஏற்பாட்டாளர்கள் தெரிவித்தனர். இதுகுறித்து அவர்கள் தெரிவித்துள்ளதாவது,

மைலோ கிண்ண வலைப்பந்தாட்டப் போட்டிகள் தொடர்பான சகல விபரங்களையும் விண்ணப படிவங்களையும் வட மாகாண வலைபந்தாட்ட ஒருங்கிணைப்பாளருக்கு அனுப்பி வைத்திருந்தோம்

ஆனால் அதற்கு உரிய பதில் எங்களுக்கு கிடைக்கவில்லை. வட மாகாணத்தில் குறிப்பாக வேம்படி மகளிர் கல்லூரி, மெதடிஸ்த கல்லூரி, அராலி சரஸ்வதி, தெல்லிபழை யூனியன் கல்லூரி, தெல்லிப்பழை மகாஜனா கல்லூரி ஆகிய பாடசாலைகள் வலைப்பந்தாட்டத்தில் திறமையை வெளிப்படுத்தி வருவதை நாம் அறிவோம்.

ஆனால் இம் முறை இறுதிச் சுற்றுக்கு வட மாகாணத்திலிருந்து எந்தவொரு பாடசாலையும் வருகை தராதது ஏமாற்றத்தைத் தருகின்றது என இலங்கை பாடசாலைகள் வலைபந்தாட்ட சங்க செயலாளர் ஷிரோமி குருப்பு தெரிவித்தார்.

எவ்வாறாயினும் வட மாகாண பாடசாலைகள் இறுதிச் சுற்றில் பங்குபற்றுவதற்கு முன்வந்தால் அவற்றின் விண்ணப்பங்களை ஏற்று சகல ஏற்பாடுகளையும் செய்து கொடுக்கத் தயார் எனவும் அவர் கூறினார.


போட்டியில் பங்குபற்ற விரும்பும் வட மாகாண பாடசாலைகள் ஒருங்கிணைப்பாளர் ஊடாக உடனடியாக விண்ணப் பிக்குமாறும் மேலதிக விபரங்களுக்கு 071 8050422 என்ற தொலைபேசி இலக்கத்தில் தன்னுடன் தொடர்பு கொள்ளுமாறும் ஷிரோமி குருப்பு கேட்டுக் கொண்டுள்ளார்.

இவ் வருட முன்னோடிப் போட்டிகளில் வட பகுதியைத் தவிர்ந்த ஏனைய பகுதிகளிலிருந்து 4000 இற்கும் மேற்பட்ட பாடசாலை அணிகள் பங்குபற்றியிருந்தன.

வழமைபோல் இம் முறையும் 14, 16, 18 வயதுக்குட்பட்ட பிரிவுகளில் சம்பியன், இரண்டாம் இடம், மூன்றாம் இடம் ஆகியவற்றுக்கு மைலோ கிண்ணங்கள் வழங்கப்படுவதுடன் அந்தந்தப் பிரிவுகளில் அதிசிறந்த வீராங்கனைகளும் தெரிவு செய்யப்பட்டு கிண்ணங்கள் வழங்கப்படும் எனத் தெரிவித்தார்.

இலங்கை பாடசாலைகள் வலைப்பந்தாட்ட சங்கம் 24ஆவது வருடமாக நடத்தும் மூன்று வயதுப் பிரிவுகளுக்கான மைலோ கிண்ண வலைப்பந்தாட்ட இறுதிச் சுற்றுப் போட்டிகள் மாத் தளை பேர்னார்ட் அளு விகாரே மைதானத்தில் இம் மாதம் 25ஆம் திகதி முதல் 27ஆம திகதி வரை நடைபெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## மகனுக்கு தீவிர பயிற்சி களத்தில் சச்சின்




இந்திய அணியின ஜாம்பவான் சச்சின் டெண்டுல்கர் தனது மகனும் தன்னைப் போல் சிறந்த வீரராக வரவேண்டும் என தீவிர முயற்சியில் இறங்கியுள்ளார்.

தனது மகனான அர்ஜுன் டெண்டுல்கரின் தீவிர பயிற்சிக்காக சச்சின் டெண்டுல்கர் தனது குடும்பத்தினரோடு இங்கிலாந்தில் உள்ளார்.

இங்கிலாந்து அவுஸ்ரேலிய அணிகளுக்கிடையே ஆஷஸ் டெஸட் கிரிக்கெட் போட்டி இங்கிலாந்தில் நடைபெற்று வருகிறது. ஆஷஸ் தொடருக்காக அங்கு இங்கிலாந்து வீரர்கள் தீவிர பயிற்சியில் ஈடுபட்டு வருகின்றனர் இந்த நிலையில் இங்கி லாந்து வீரர்களுக்கு பந்து வீசி அர்ஜுன் டெண்டுல்கர் பயிற்சி எடுத்து வருகிறார்.

அதில் அவரது இடதுகைப் பந்து வீச்சு, பாகிஸ்தான் முன்னாள் சூப்பர் ஸ்டார் வாசீம் அக்ரமை நினைவுபடுத்தும் வகையில உள்ளதாக கிரிக்கெட் விமர்சகர்கள் தெரிவித்துள்ளனர்.

## மற்றொரு கில்கிறிஸ்ட்



அவுஸ்ரேலிய முன்னாள் விக்கெட் கீப்பர் கில்கிறிஸ்ட் பாணியை இங்கிலாந்து கிரிக்கெட அணியின் விக்கெட் கீப்பரான பட்லர் கடைப்பிடித்துள்ளார்.

லோர்ட்ஸ் மைதானத்தில் நடந்த 2ஆவது ஆஷஸ் டெஸ்டின் நான்காம் நாள் ஆட்டத்தில் இங்கிலாந்து வீரர் பட்லர் துடுப்பெடுத்தாடியபோது அவுஸ்ரேலிய சுழற்பந்து வீச்சாளர் லயன் வீசிய ப்ந்து பட்லரின் கால் காப்பில் பட்டு அதன் பிறகு துடுப்பில் உரசிச் சென்று விக்கெட் கீப்பரிடம் தஞ்சம் புகுந்தது.

விக்கெட் கீப்பர் நடுவரிம் அவுட் அப்பீல் கேட்டார். ஆனால், நடுவர் தர்மசேனாவிற்கு பந்து துடுப்பில் பட்டதா? என்ற சந்தேகம் எழுந்தது.


பந்து துடுப்பில் உரசிச்சென்றது என்பதை அறிந்த பட்லரோ நடுவரின் முடிவுக்கு காத்திராமல் விரைவாக பெவிலியன் திரும்பினார்.

இங்கிலாந்து இக்கட்டான நிலையில் இருந்த போதிலும் பட்லர் நேர்மையாக நடந்து கொண்டது அனைவரையும் ஆச்சரியத்துக்குள்ளாக்கியது.

இந்த நிகழ்வை பார்க்கும் போது அவுஸ்ரேலிய முன்னாள் விக்கெட் கீப்பர் கில்கிறிஸ்ட்தான் நினைவுக்கு வருகிறது என்று கிரிக்கெட் விமர்சகர்கள் தெரிவித்துள்ளனர்.

ஏனெனில், இவர் துடுப்பெடுத்தாடும்போது பந்து துடுப்பில் உரசிச் சென்றது தெரியவந்தால், நடுவரின் முடிவை எதிர்பார்க்காமல் விரைவாக பெவிலியன் திரும்பி விடுவார் என்பது குறிப்பிடத்தக்கது.

## பொலிவிய கால்பந்து தலைவர் கைது



பொலிவிய கால்பந்து சம்மேளனத்தின் தலைவர் காலோஸ் சாவோஸ் அந்நாட்டு பொலிஸாரினால் கைது செய்யப்பட்டுள்ளார்.

நிதி மோசடி குற்றச்சாட்டை அவர் எதிர்கொண்டிருக்கும் நிலையில் பொலிவிய பொலிஸாரினால் கைதுசெய்யப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

தென்னாபிரிக்காவின் கால்பந்து சம்மேளனத்தின் பொருளாளராக அவர் பணிபுரிந்து வருகின்றார்.

இந்த நிலையில் பொலிவியா கால்பந்து சம்மேளனத்தின் மேலும் 20 நிறைவேற்று அதிகாரிகள் மீதும் நிதிமோசடி குற்றச்சாட்டு பதிவாகியிருப்பதாக அந்நாட்டு ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

இவர்களில் பலருக்கு எதிராக நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டுள்ளதாக தெரிவித்துள்ள பொலிவிய பொலிஸார், ஏனையோர் மீது விரைவில் வழக்கு தொடரவிருப்பதாகவும் கூறியுள்ளனர்.

நாடாளுமன்ற பொதுக் தேர்தல் - 2015




ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சி (ஈ.பி.டி.பி.)

## அஜ்மல் பந்துவீச்சில் முன்னேற்றம் திருப்தி கொள்ளும் ரஷீத்




பாகிஸ்தான் அணியின் நட்சத்திர சுழற்பந்து வீச்சாளரான சயித் அஜ்மலுக்கு விதிமுறைகளை மீறிபந்து வீசுவதாக புகார் எழுந்ததையடுத்து, அவர் தற்போது பந்து வீச்சில் முன்னேற்றம் கண்டிருப்பதாக பாகிஸ்தான் அணியின் தேர் வுக்குழுத் தலைவர் ஹாரூன் ரஷித் தெரிவித்துள்ளார்.

சயித் அஜ்மலுக்கு கடந்த சில மாதங்களுக்கு முன்பு, விதி முறைகளை மீறி பந்து வீசுவதாக புகார் எழுந்தது. இதன் பேரில் அவருக்கு ஐ.சி.சி தடை விதித்தது. பின்னர் பாகிஸ்தான் முன்னாள் சுழற்பந்து வீச்சாளர் சக்லைன் முஷ்டாக், அஜ்மலின் பந்து வீச்சை திருத்துவதற்கான நடவடிக்கைகளில் ஈடுபட்டார்.

இதையடுத்து இந்தியாவில், சென்னையில் நடந்த பந்து வீச்சு சோதனைகளின் அடிப்படையில், அஜ்மலுக்கு விதிக்கப்பட்டிருந்த தடை விலக்கிக் கொள்ளப்பட்டது.

தற்போது இங்கிலாந்தின் ஓர்செஸ்டர்ஷைர் அணிக்காக விளையாடி வரும் அஜ்மல், பந்து வீச்சில் முன்னேற்றம் கண்டிருப்பதாக, பாகிஸ்தான் அணியின் தேர்வுக்குழு தலைவர் ஹாரூன் ரஷீத் கூறியுள்ளார்.

இது குறித்து அவர் மேலும் கூறுகையில், அஜ்மல் தற்போது 15 நாட்களுக்கு ஒரு முறை பயோ மெக்கானிக்ஸ் நிபுணர் வைத்தியர் போல் ஹூரியனுடன் ஆலோசனை நடத்தி வருகிறார்.

அஜ்மல் பந்து வீச்சில் முன்னேற்றம் கண்டுள்ளார். அவரது பந்து வீச்சு முறைகளில், சாதகமான பதில் கிடைத்துள்ளது. ஓர்செஸ்டர்ஷைர அணிக்காக இந்த தொடர் முழுவதும், விளையாட அஜ்மல் விரும்புகிறாா. நான் அவரிடம் பேசியபோது, என்னிடம் இதைத் தெரிவித்தார்.

அவர் தனது பந்து வீச்சு முறை மற்றும் செயல்திறனில் திருப்தியடையும் வகையில் செயற்பட்டு, தேசிய அணியில் தனக்கான இடத்தை உறுதி செய்து கொள்ளலாம் எனத் தெரிவித்தார்.

# தோல்விக்குக் காரணம் துடுப்பாட்டமே




## ரஹானே தெரிவிப்பு

இந்தியா மற்றும் சிம்பாப்வே அணிகளுக்கிடையிலான 2ஆவது ரி20 போட்டியில், இந்திய அணி 10 ஓட்டங்களால் தோல்வியடைந்த நிலையில், தோல்விக்கு துடுப்பாட்டமே காரணம் என இத் தொடருக்கான அணித் தலைவர் ரஹானே தெரிவித்துள்ளார்.

இத் தோல்வி குறித்து, அவர் மேலும் கூறுகையில்,

எங்கள் பந்துவீச்சாளர்கள் மிகச் சிறப்பாக செயற்பட்டு அவர்களை கட்டுப்படுத்தினார்கள். முக்கியமாக கடைசி 5 ஓவர்களில் அவர்களின் பந்துவீச்சு சிறப்பாக இருந்தது. ஆனால் எங்கள் துடுப்பாட்டம் சிறப்பாக இல்லை.

நாங்கள் தொடர்ந்து விக்கெட்டுகளை இழந்தபடி இருந்த தால் வேகமாக ஓட்டங்கள் குவிக்க முடியாமற போய்விட்டது. பந்துவீச்சு மற்றும் களத்தடுப்பு ஆகிய இரண்டிலும் சிம்பாப்வே அணி வீரர்கள் மிகச் சிறப்பாக செயற்பட்டார்கள் என்பதை மறுக்க முடியாது. அதேசமயம் ஒட்டு மொத்தமாக இந்தத் தொடரில் இந்திய அணியின் ஆட்டம் சிறப்பாக இருந்தது. என அவர் தெரிவித்தார்.



நீர்வேலி சவாரித்திடலில் நீண்ட இடைவெளிக்குப் பின்னர் நேற்று முன்தினம் மாட்டுவண்டி சவாரிப் போட்டி இடம்பெற்றதனைக் காணலாம்.-

# 405 ஓட்டங்களினால் அவுஸ்ரேலியா அபார வெற்றி

அவுஸ்ரேலியா மற்றும் இங்கிலாந்து அணிகளுக்கிடையிலான இரண்டாவது டெஸ்ட் போட்டியில் அவுஸ்ரேலிய அணி 405 ஓட்டங்களினால் அபார வெற்றி பெற்றுள்ளது.



வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த ஆஷஸ் தொடரின் இரண்டாவது டெஸ்ட் போட்டியில நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்ற அவுஸ்ரேலிய அணி துடுப்பெடுத்தாடச் தீர்மானித்தது. இதன்படி தமது முதல் இனிங்ஸிற்காக துடுப்பெடுத்தாடக் களம் இறங்கிய அவுஸ்ரேலிய அணி 8 விக்கட்டுக்களை இழந்து 566 ஓட்டங்களைப் பெற்றிருந்த போது ஆட்டத்தினை இடைநிறுத்தியது.

துடுப்பாட்டத்தில் அவுஸ்ரேலிய அணி சார்பில் அதிகபட்சமாக ஸ்ரீவ் ஸ்மித் 215 ஓட்டங்களையும், ரொஜர்ஸ் 173 ஓட்டங்களையும் பெற் றுக் கொடுத்தனர். பந்து வீச்சில் இங்கிலாந்து அணி சார்பில் பரோட் 4 விக்கெட்டுக்களை கைப்பற்றியிருந்தார்.

இதனைத்தொடர்ந்து தமது முதல் இனிங்ஸிற்காக துடுப்பெடுத்தாட களம் இறங்கிய இங்கிலாந்து அணி சகல விக்கெட்டுக்களையும் இழந்து 312 ஓட்டங்களை பெற்றுக்கொண்டது.

துடுப்பாட்டத்தில் அதிகபட்சமாக இங்கிலாந்து அணி சார்பில் குக் 96 ஓட்டங்களையும், ஸ்ரோக்ஸ் 87 ஓட்டங்களையும் பெற்றுக்கொடுத்தனர். பந்து வீச்சில் அவுஸ்ரேலிய அணி சார்பில் ஜோன்சன் மற்றும் ஹொலிவூட் ஆகியோர் தலா மூன்று விக்கெட்டுக்களை வீழ்த்தியிருந்தனர்.

இந்தநிலையில் தமது இரண்டாவது இனிங்ஸிற்காக துடுப்பெடுத்தாட களம் இறங்கிய அவுஸ்ரேலிய அணி 2 விக்கெட்டுக்களை இழந்து 254 ஓட்டங்களை பெற்றிருந்த வேளை தமது ஆட்டத்தினை இடைநிறுத்தியது.

509 என்ற கடினமான வெற்றியிலக்கினை நோக்கி பதிலுக்கு துடுப்பெடுத்தாட களம் இறங்கிய இங்கிலாந்து அணி சகல விக்கெட்டுக்களையும் இழந்து 103 ஓட்டங்களை பெற்று 405 ஓட்டங்களினால் படு தோல்வியடைந்துள்ளது.

இந்தப்போட்டியின் ஆட்டநாயகனான அவுஸ்ரேலிய அணி சார்பில் முதல் இனிங்ஸின் போது இரட்டைச்சதம் பெற்ற ஸ்ரீவ் ஸ்மீத் தெரிவானார்.

ஐந்து போட்டிகளைக் கொண்ட டெஸ்ட் தொடரில் முதல் இரண்டு போட்டிகளிலும் இரு அணிகளும் தலா ஒரு போட்டிகளில் வெற்றி பெற்று சமநிலையிலுள்ளன.

# வல்வை றெயின்போ கிரிக்கெட் பிளே ஒவ்சுற்றில் சைனிங்ஸ்



வல்வை றெயின்போ விளையாட்டுக் கழகம் நடாத்திவரும் 6 நபர் 5 பந்துபரிமாற்றங்களை கொண்ட கிரிக்கெட் தொடரில் PLAY OFF சுற்றுக்கு முதலாவது அணியாக நுழைந்துள்ளது சைனிங்ஸ் அணி.

இந்த சுற்றுத் தொடரில் வல்வைக்குட்பட்ட 7 கழகங்களும் பங்குபற்றுகின்றன. ஒரு அணி மற்றைய அனைத்து அணிகளுடனும் தலா 2 முறை மோதவேண்டும். இந்த அடிப்படையில் ஒரு அணி 12 போட்டிகளில் பங்கு பற்றும்.

கடந்த வாரம் சைனிங்ஸ் அணி றெயின்போ, உதயசூரியன் மற்றும் ரேவடி அணிகளை வெற்றி கொண்டது. 4 போட்டிகளில் 3 வெற்றிகளை பதிவு செய்தது சைனிங்ஸ் அணி.

மீண்டும் இந்த வாரம் நடைபெற்ற 6 போட்டிகளில் நேதாஜி, உதயசூரியன், ரேவடி மற்றும் இளங்கதிர் அணிகளை வீழ்த்தி றெயின்போ அணியுடனான போட்டியில் வெற்றி பெறத் தவறி 5 வெற்றிகளை பதிவு செய்தது சைனிங்ஸ் அணி.

இதுவரை 10 போட்டிகளில் களமிறங்கிய சைனிங்ஸ் அணி 8 வெற்றிகளைப் பெற்று முதலிடத்தில் உள்ளதுடன் PLAY OFF சுற்றுக்கு முதலாவது அணியாக நுழைந்துள்ளது.




# விருந்துபசாரம்



(கொழும்பு)

சர்வதேச கிரிக்கெட் போட்டிகளுக்காக் இலங்கைக்கு வந்துள்ள பாகிஸ்தான் அணியினர் மற்றும் இலங்கை அணியினருக்கான விருந்துபசார நிகழ்வொன்று, இலங்கைக்கான பாகிஸ்தான் தூதுவராலயத்தின் தூதுவர் ஓய்வு பெற்ற மேஜர் ஜெனரல் ஷெய்யித் ஸக்கீல் தலைமையில் கொழும்பு தாஜ் சமுத்திரா ஹோட்டலில் உள்ள போல் ரூமில் கடந்த சனிக்கிழமை இரவு நடைபெற்றது

இந்நிகழ்வில் பாகிஸ்தான் மற்றும் இலங்கை கிரிக்கெட் வீரர்கள், இலங்கை கிரிக்கெட் நிறுவன அதிகாரிகள், வெளிநாட்டு தூதுவர்கள், அவற்றின் பிரதிநிதிகள், அமைச்சர் ஏ.எச்.எம்.பௌசி, முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் பைசர் முஸ்தபா, பாகிஸ்தான் தூதுவராலய அதிகாரிகள், கிரிக்கெட் வீரர்கள் உட்பட பலர் கலந்துகொண்டனர்.

# இலங்கையில் தமிழ் மக்கள் அடுத்த 15 வருடங்களில் இரண்டாம் நிலை சிறுபான்மை இனமாக மாற்றப்படும்

**- யாழ் மருத்துவர் சங்கத் தலைவர் முரளி வல்லிபுரநாதன்.**

இலங்கையில் தமிழ் மக்கள் அடுத்த 15 வருடங்களில் 2ஆம் நிலை சிறுபான்மை இனமாக மாற்றப்படும் அபாயம் உள்ளது. 2012ஆம் ஆண்டு 11.2 வீதமாக இருந்த தமிழர்கள் 2031ஆம் ஆண்டில் 10.3 வீதமாக மாறும் அபாயத்தை ஆய்வுகள் குறிப்பிடுகின்றன.

இந்த வருட குடித்தொகை தின தொனிப் பொருளாக அபாய நிலையில் உள்ள ஊறு படத் தக்க குடித்தொகையை பாதுகாப்போம் என ஐக்கிய நாடுகளின் குடித்தொகைப் பிரிவு பிரேரித்து இருக்கிறது. இவ்வாறான ஒரு அபாய நிலையில் வாழும் குடித்தொகையாகத் தான் யுத்தப் பாதிப்பு, மீள்குடியேற்ற மறுப்பு, குற்றங்களுக்கான நீதி மற்றும் இழப்பீடு வழங்கப்படாமை, திட்டமிட்ட பாரபட்சங்கள் போன்றவற்றினால் தொடர்ந்து பாதிக்கப்பட்டுக் கொண்டிருக்கும் ஒரு இனமாக இலங்கையில் தமிழ் மக்கள் வாழ்ந்து கொண்டிருக்கின்றார்கள்.

போருக்குப் பின்னர் ஏற்படும் அதிகரித்த குழந்தைப் பிறப்புகள் (baby boom) வடகிழக்கு மாகாணங்களில் போருக்குப் பின்னர் ஏற்படவில்லை. இதற்கு திருமண வயதில் இருக்கும் பல பெண்களுக்கு பொருத்தமான ஆண் துணை அற்று இருப்பதே காரணமாகும்.

வடகிழக்கு மாகாணங்களில் 89 ஆயிரம் விதவைகள் உள்ளனர். இதற்குமேல் வடகிழக்கு மாகாணங்களில் ஆண்களின் தொகையை விட பெண்களின் தொகை மிக அதிகம். இதற்கு ஆண்களில் அதிகமாக போரில் ஏற்பட்ட இறப்புகள், காணாமற்போகச் செய்யப்பட்டோர், வெளிநாடுகளுக்கு இடம் பெயர்ந்தோர் போன்றவை காரணங்களாகும்.

இந்நிலையில் அதிகமாக காணப்படும் பெண்களுக்கு பொருத்தமான ஆண்துணையை ஏற்படுத்தும் எவ்வித மான செயற்பாட்டுத் திட்டங்களோ விதவைகள் மறுவாழ்வுத் திட்டங்களோ எம்மிடம் இல்லை.

இந்நிலையில் சனத்தொகை அதிகரிப்பிற்கு முதலில் நாங்கள் செய்யக்கூடிய விடயம் என்னவென்றால் வடகிழக்கு மாகாணங்களில் உள்ள காலம் தாழ்த்திய திருமணங்களை நிறுத்தவேண்டும்.

2012 இல் மேற்கொள்ளப்பட்ட ஆய்வுகளின் படி இலங்கையில் காலம் தாழ்த்திய திருமணங்களில் தமிழர்களே முதலிடத்தில் உள்ளார்கள். அதிலும் யாழ்ப்பாண மாவட்டம் இலங்கையிலேயே முதலாவது இடத்தில் இருக்கின்றது.

அதாவது ஏனைய இனத்தவர்கள் உரிய வயதில் திருமணம் செய்கிறார்கள். தமிழர்களில் உரிய வயதில் திருமணம் செய்ய முடியாமைக்கு, பல காரணங்கள் இருக்கின்றன.

குறிப்பாக பொருளாதாரம், சீதனம், சாதி மதப் பிரச்சினை, பிரதேசவாதம், மிகையான சோதிட நம்பிக்கை உள்ளிட்ட பல சிக்கல்கள் எங்கள் சமூகத்தில் இருக்கின்றன.

முக்கியமாக போரின் பின்னர் இந்தப் பிரச்சினைகள் மேலும் அதிகரித்திருக்கின்றன. எனவே இவைகள் முதலில் களையப்படவேண்டும். காலதாமதமான திருமணங்கள் கர்ப்பம் தரிக்கும் தன்மையைக் குறைத்து சனத்தொகை வளர்ச்சியை மட்டுமல்லாமல், பிறக்கும் அடுத்த சந்ததியையும் பல்வேறு வகையிலும் பாதிக்கின்றது.

அதிகரித்த வயதில் கர்ப்பம் தரிக்கும் போது கர்ப்ப காலத்தில் தாய்க்கும் சேய்க்கும் அதிகரித்த சிக்கல்கள் ஏற்படும். நிறை குறைந்த பிள்ளைகள் பிறப்பது, குறை மாதப் பிரசவம், பிறப்புக் குறைபாடுகள், புத்திக் கூர்மைக் குறைவு போன்ற பிரச்சினைகள் குழந்தைகளில் மாத்திரமல்லாது கர்ப்ப காலத்தில் தாய் சேய் உயிர் இழப்புகள் கூட அதிகமாக ஏற்படுகிறது.



பெற்றோருக்கும் பிள்ளைகளுக்கும் அதிக வயது வேறுபாடு காணப்படும் போது அதிகளவு கருத்து வேறுபாடுகள் மற்றும் தொடர்பாடல் பிரச்சினைகள் காணப்படுவதுடன் குடும்பங்களில் அதிகளவு மன உளைச்சலும் பிரச்சினைகளும் ஏற்படுகின்றன. எனவே உரிய வயதில் திருமணம் செய்வதும் தாமதம் இன்றி குழந்தைகள் பெற்றுக் கொள்வதும் ஆரோக்கியமான சமூகத்திற்கும், சனத்தொகை மற்றும் பொருளாதார வளர்ச்சிக்கும் உகந்ததாகும்.

சனத்தொகையை அதிகரிப்பதற்கு பொருளாதாரமும் வலுப்படுத்தப் படவேண்டும். 2010 இல் இலங்கையில் மந்த போசணையினால் குழந்தைகள் அதிகம் பாதிக்கப்பட்ட மாவட்டங்களில் வவுனியா 51 வீதம். யாழ்ப்பாணம் 41வீதம் ஆகவும் இருந்தது. மந்த போசணையும் வறுமையும் அதிகரித்த நோய்களுக்கும் இறப்புகளுக்கும் இட்டுச் சென்று குடித்தொகையை குறைக்கிறது.

தற்போதைய சூழ்நிலையில் இவற்றை எல்லாம் நிவர்த்தி செய்யவேண்டிய கடப்பாடு எமக்குள்ளது. முக்கியமாக தமிழர்கள் வாழ்க்கைத்துணை தேடுவதில் பிற்போக்கான முறைகளைக் களைந்து காலம் தாழ்த்திய திருமணங்களை முழுமையாக நிறுத்த வேண்டும். பொருளாதார ரீதியாக வலுப்பெற வேண்டும்.

வெளிநாட்டில் வாழும் தமிழர்கள் இலங்கையின் சீதன சந்தைக்கு வலுச் சேர்க்காமல் தமிழர்களின் பொருளாதாரத்தை மீளக் கட்டி எழுப்புவதற்கு உதவ வேண்டும். விதவைகளுக்கு மறுவாழ்வு அளிப்பதற்கு மாகாண அரசாங்கம் ஒரு திட்டத்தை அமுல் படுத்தி வெளிநாட்டுத் தமிழர்களையும் இதில் இணைத்துக் கொள்ளவேண்டும். தமிழ் தலைவர்கள் தமிழ்த் தேசியம் என்ற பெயரில் வாக்கு கேட்கும் அதே வேளை தமது தமிழ் வாக்காளர்களின் எண்ணிக்கையை அதிகரிப்பதற்கு நேர்மையாக உழைக்கவேண்டும். மனித உரிமை ஆர்வலர்களுடன் இணைந்து தமிழ் பெண்களுக்கான பாதுகாப்பான சூழல் உருவாக்கப்பட வேண்டும்.

# அழகை வளர்க்க...



❖ பொன்னாங்கண்ணிக் கீரையைச் சமைத்துச் சாப்பிட்டு வர, மேனி தங்கம் போல் பிரகாசிக்கும்.

❖ முதுகில் கூனல் விழாமலிருக்க மீன் எண்ணெய்யைத் தினமும் இரண்டு கரண்டி சாப்பிட வேண்டும்.

❖ கம்பீரமான தோற்றம் உண்டாக கரட், தக்காளி, வெண்டிக்காய் ஆகியவற்றை உண்ண வேண்டும்.

❖ அங்கங்கள் சுருக்கம் விழாமல் வலிவு பெற தினந்தோறும் ஏதாவது ஒரு பழச்சாற்றை ஒரு டம்ளர் அருந்த வேண்டும்.


❖ உடல் சோர்வாகாமல் இருக்க இனிப்புடைய பழங்கள், தேன் ஆகியவற்றை அடிக்கடி சாப்பிடுங்கள்.

# யார் இந்த மசாபா?

சமீபத்தில், மும்பையில், ஹிந்திப்பட தயாரிப்பாளர் மது மான்டினாவுக்கும், ∴ பாஷன் டிசைனர் மசாபாவுக்கும் திருமண நிச்சயதார்த்தம் நடைபெற்றது. இந்த மசாபா யார் தெரியுமா? அக்காலத்தில் மேற்கிந்தியத் தீவுகள் கிரிக்கெட் குழுவில், விவியன் ரிச்சர்ட்ஸ் என்ற ஒரு புகழ்பெற்ற ஆட்டக்காரர் இருந்தார் அல்லவா... அவருடைய மகள் தான் மசாபா! பழம்பெரும் ஹிந்தி நடிகை நீனா குப்தா இவரது அம்மா; மணமகன் மதுமான்டினா, ஹைதராபாத்தைச் சேர்ந்தவர்.



# மூடுபனித் தீவு!



ஸ்கொட்லாந்து நாட்டின் இரண்டாவது மிகப்பெரிய தீவு ஸ்கை... (skye) இதற்கு மூடுபனித் தீவு என்றும் பெயர் உண்டு. காரணம்... அட்லாண்டிக் கடல் மற்றும் வளைகுடா ஆறுகளிலிருந்து கிளம்பி வரும் காற்று இங்கு இத்தகைய சூழலை தோற்றுவிக்கிறது.


ஆண்டிற்கு 1500 - 2000 மி.மீ. மழை சகஜம். சிலசமயம் கூடுதலாகவும் பெய்யும். மொத்தமே ஆண்டிற்கு 200 மணி நேரம்தான் "பளிச்" வெயில் அடிக்கும். அதனை மே மாதத்தில் உணரலாம். இங்கு மிகக் குறைந்த வெப்பம் 6.5 பாகை சென்ரிகிரேற்றும் அதிகபட்சமாக 15.4 பாகை சென்ரிகிரேற்றும் நிலவும். குறைந்த வெப்பம் ஜனவரியிலும் அதிக வெப்பம் ஜூலையிலும் இருக்கும்.

சீதோஷ்ண நிலை மாறிக் கொண்டேயிருக்கும். ஒரேநாளில் பல சீசன் உண்டு என இந்தத் தீவை ஜோக்காக கூறுவது உண்டு.

சரிவான மலைத்தொடர்கள். கூரான முனை கொண்ட முட்புதர்களைக் கொண்ட பூமி. இங்குள்ள கறுப்பு க்யூலின் மலை. எட்டுக் கால்களையுடைய ராட்சச மீன் காணத்தக்கவை. இந்தத் தீவின் பெரிய நகரம் போர்ட்ரீ (Portree). ஜனத்தொகை 10,008. இங்குள்ள மக்களின் முக்கிய தொழில் விவசாயம், மீன் பிடித்தல், விஸ்கி தொழிலகங்கள்தாம்.

1995இற்கு முன் இந்தத் தீவுக்குப் படகில்தான் செல்ல முடியும். தற்போது பாலம் கட்டி விட்டனர். இதன் மூடுபனியை இரசிக்க சுற்றுலாப் பயணிகள் பெரிய அளவில்வருகின்றனர். இந்தத் தீவு பல திரைப்படங்களில், நாடகங்களில், நாவல்களில் இடம்பெற்றுள்ளது. இங்கு கிருஷ்ணப் பருந்து, சிவப்பு மான், நன்னீர் மீன் ஆகியவை காணத் தக்கவை. இங்கு காலிக் (Gaelic) மொழி பேசுபவர்கள் அதிகம்.

# திருமதி விஜயகலா மகேஸ்வரன் அவர்களுக்கு ஒரு பகிரங்கமடல்



அண்மையில் தாங்கள் வடமராட்சி பருத்தித்துறைப் பகுதியில் நடைபெற்ற மக்கள் சந்திப்பின்போது எமது மக்களைக் கொன்றொழித்தவர்களுக்கு இம்முறை நாம் தேர்தலில் பாடம் புகட்ட வேண்டும் எனத் தெரிவித்திருந்தீர்கள்!

தாங்கள் பாவம்! அனுபவம் தெரியாதவர்! தங்கள் கணவர் கொலையின் பின் அரசியலுக்கு வந்தீர்கள்! எமது நாட்டின் சரித்திரத்தை ஒரு தடவை சரியாக வாசித்துவிட்டு அறிக்கைகளை விட்வேண்டும்.

1947இல் ஐக்கிய தேசியக் கட்சி 95 தொகுதிகளில் 42 தொகுதிகளில் வென்று வேறு கட்சிகளுடன் இணைந்து முதலாவது தேசிய அரசுப் பேரவையில் ஆட்சி அமைத்திருந்தது. தேசபிதா என வர்ணிக்கப்பட்ட டி.எஸ். சேன நாயக்கா அவர்கள் 1948ஆம் ஆண்டு சுதந்திரத்தின் பின்னர் குடியுரிமைச் சட்டம் மூலமும் 1949இல் நிறைவேற் றிய இந்திய மற்றும் பாகிஸ்தானியர் குடியுரிமைச் சட்டமூலமும் இந்திய வம்சாவளித் தமிழ் மக்களை நாடற்றவர்களாக்கியது. இதன்போது காங்கிரஸ்கட்சியில் பிளவு ஏற்பட்டு தமிழரசுக் கட்சி உதயமானது.

1977இல் ஐ.தே.கட்சி 140 உறுப்பினர்களுடன் பெரும்பான்மைப் பலம்பெற்று ஆட்சி அமைத்தபோது தமிழர் விடுதலைக் கூட்டணி 18 ஆசனங்களைக் கைப்பற்றி எதிர்க்கட்சி ஏறியது. அதன் பின்னர் நடந்த கலவரங்கள் 1977ஆவணி அமளி என அழைக்கப்பட்டது.

அதன்பின் 1981இல் மாவட்ட அபிவிருத்திச் சபைத் தேர்தல் வன்முறைகளின் போது யாழ்ப்பாணம் எரிக்கப்பட்டதும் - அதன்பின் 1983இல் நடந்த இனக்கலவரமும் 1985களின் பின் ஆரம்பிக்கப்பட்ட விமான, கடற்பீரங்கித் தாக்குதல்கள் அனைத்தும் நீங்கள் பிரதிநிதித்துவப்படுத்தும் ஐக்கிய தேசியக் கட்சியாலேயே தமிழ் மக்கள் மீது தொடுக்கப்பட்டது என்பதையும் இவை அனைத்துக்கும் மூலகாரணம் தங்களின் கட்சி என்பதையும் மறந்து விடவேண்டாம்.

குறிப்பாக 1985களில் அரியாலை, வல்வெட்டித்துறை படுகொலை, குமுதினிப் படகுப் படுகொலை குறிப்பிடத்தக்கவை. ஹெலி, கிபிர், புக்காரா, சொப்பர் என்ற பலவித தாக்குதல்களை தொடக்கிய் பெருமை உங்களின் கட்சிக்கே உரியது! வலி.வடக்கில் உயர் பாதுகாப்பு வலயம் தொடக்கப்பட்டதும் உங்களின் ஆட்சிக் காலத்திலேயேதான்! 1994இன் பின் ஆட்சிக்கு வந்த சந்திரிகா தலைமையிலான அரசு உங்கள் கட்சி செய்தவற்றையே தொடர்ந்தது.


தங்களின் கட்சித் தலைவராக இருந்த டிங்கிரி பண்டா விஜேதுங்க தாங்கள் பெருமரமெனவும் எம்மை செடி, கொடி என விமர்சித்ததும் - இந்தக் கட்சிக்காக உங்களைப் போன்றோர் படர்ந்திருப்பதும்தான் எமது நிலை!

கடந்த மாத இறுதியில் விஜயம் செய்த மீள்குடியேற்ற அமைச்சர் சுவாமிநாதன் மீளக் குடியமர இராணுவத்தினர் அனுமதிக்கவில்லை என்ற தகவலைத் தெரிவித்திருந்ததும் - கையாலாகாத தனத்தையே காட்டுகிறது! எதுவும் செய்ய முடியாவிட்டால் பதவிகளைத் தக்க வைத்திருக்காது விலகுவது மேல்! வீணாக மிண்டுகொடுத்து மக்களை ஏமாற்ற வேண்டாம்! மக்கள் நம்பத் தகுந்தமாதிரி நடந்து நன்மதிப்பைப் பெற்றுக் கொள்ளுங்கள்!

**இன்றுவரை எமது வலி. வடக்கு பகுதியினுள் சென்று குடியேறாமல் அலைந்து கொண்டு இருக்கும் துர்ப்பாக்கியசாலி,**
**கட்டுவன் த. துளசிதாசன்**

# சொன்னார்கள்....

## நடிகருக்கும் நடிகைக்கும் நடிப்புக்கு அப்பால் ஒன்றுமில்லை



சீக்கிய மதத்தில் பிறந்த நான், டில்லியில்தான் வளர்ந்தேன். "தபஸ்வினி" என்கிற சமஸ்கிருத வார்த்தையின் அடிப்படையில் எனக்கு "தாப்ஸி" என்று பெயரிட்டதாக பெற்றோர்கள் கூறுவார்கள். தென்னிந்தியாவில் மொடலிங் செய்யும் போதுதான் படங்களில் நடிக்கும் வாய்ப்புகள் வந்தன. என்னுடைய முதல் படமான "ஆடுகளம்" ஆறு தேசிய விருதுகளைப் பெற்றது. அதன் பிறகே தொடர்ந்து திரைப்படங்களில் நடிக்கும் அங்கீகாரம் எனக்குக் கிடைத்தது.

சொப்ட்வெயார் என்ஜினீயர் ஆக வேண்டும் என்ற எண்ணத்தில் டில்லி ஐபி யூனிவர்சிட்டியில் சேர்ந்தேன். இரண்டாம் ஆண்டு கம்ப்யூட்டர் முன்னே அமர்ந்து என்ன சாதிக்கப் போகிறோம் என்ற எண்ணம் தோன்றவே, எம்பிஏ படிக்க சிஏடி பரீட்சை எழுதினேன். முதலாவது முயற்சியில் வெற்றி கிடைக்கவில்லை.

கல்லூரியில் படிக்கும்போதே பிர்ஜு மகராஜின் சீடர் ஒருவரிடம் "கதக்" நடனம் கற்றுக் கொண்டேன். அடுத்த பரீட்சை எழுத ஓராண்டு இருப்பதால் என்ன செய்வதென்று யோசித்துக் கொண்டிருந்த நேரத்தில் திரைப்பட வாய்ப்பு வந்தது. திரைப்படத்தில் நடிப்பதை என்னுடைய தந்தை விரும்பவில்லை. முதல் படமே தேசிய விருது பெற்று, அடுத்தடுத்து மூன்று படங்கள் ஒப்பந்தமாயின.

தெலுங்கு திரையுலகைப் பொறுத்தவரை புதுமையான அனுபவம் என்றே சொல்லலாம். காரைவிட்டு இறங்கி செட்டிற்குள் நுழையும்போது அனைவருமே எழுந்து நின்று வரவேற்பது. அவர்களைக் கடந்து செல்லும்வரை நிற்பது எனக்குப் பிடித்திருந்தது. அந்த வாய்ப்பை நான் இழந்ததில்லை.

என்னுடைய தந்தை ரியல் எஸ்டேட் நிறுவனமொன்றை இன்னமும் நடாத்தி வருகிறார். டில்லியில் இருந்தபோது அவர் என்னை தனியாக வெளியே அனுப்பியதே இல்லை. தென்னிந்தியாவில் வந்து தனியாகத் தங்குவதற்கு அனுமதியளித்தார். முதல் ஓராண்டு ஹைதராபாத்தில் தனியாகத்தான் இருந்தேன். அப்போது எனக்கு 22 வயது. பெற்றோர்களை விட்டுவிட்டு தனியாக வந்த இடத்தில் யாராவது அன்பு காட்டினால் சுலபமாக விழுந்து விடுவோமோ என்ற பயம் உள்ளுக்குள் இருந்தது. நகரமும், மொழியும் புதியது. ஆட்களைப் பார்த்தவுடனே புரிந்துகொள்ளும் சக்தி இருந்தது.

எனக்கு நண்பர்கள் அதிகம் கிடையாது. எப்போதும் சந்தோஷமாக இருக்கவே விரும்புவேன். ஒருநாளாவது வருத்தத்துடன் நான் வீட்டிற்குச் சென்றது கிடையாது. தூங்கச் செல்வதற்கு முன் நான் மகிழ்ச்சியாக இருப்பதற்கு என்ன காரணம் என்று நினைக்கத் தவறியதில்லை. சந்தோஷம் என்பது உங்கள் கைகளில்தான் இருக்கிறது. என்னை ஒரு பிரபல நட்சத்திரமாக நான் நினைப்பது இல்லை. பணம் கிடைக்கிறதே என்பதற்காக வந்த வாய்ப்புகளை எல்லாம் ஒப்புக் கொள்வதும் இல்லை. இரண்டாவது வாய்ப்பு கிடைக்காது என்பது எனக்குத் தெரியும். எதையுமே யோசித்துச் செயற்படுத்தவே விரும்புவேன்.

திருமணத்தைப் பற்றிய எண்ணமும் உண்டு. எப்போது திருமணம் செய்து கொள்ள வேண்டுமென்று தோன்றுகிறதோ அப்போது நிச்சயம் திருமணம் செய்து கொள்வேன். நடிப்பது போதும் என்று தோன்றியவுடன் நடிப்பதை நிறுத்தி விடுவேன். நிச்சயம் நான் ஒரு சர்தார்ஜியை திருமணம் செய்து கொள்ள மாட்டேன். இதுவரை எந்த சர்தார்ஜியுடனும் நான் பழகியதும் இல்லை. எந்த நடிகருடனும் பழகியதில்லை. ஒரு நடிகருக்கும் நடிகைக்கும் நடிப்புக்கு அப்பால் தொடர்பு இருக்க வேண்டும் என்று நான் நினைத்ததும் இல்லை.

**- டாப்ஸி**

## சிரிப்பதையே மறந்துவரும் அம்மாக்களுக்கு...



ஒரு பெண் நடிகர் நிஜ வாழ்க்கையில் தாயாக மாறிய பிறகு அவளுக்கு சினிமாவில் கிடைக்கும் அதிகபட்ச புரமோஷன் அம்மா கேரக்டர்கள்தான். அக்கா அண்ணி எல்லாம் நடுவில் வரலாம். ஆனால் நிரந்தரமான இடம் என்பது அம்மாதான். அந்த அம்மாவுக்கான பாவம் என்ன என்பதை நமது கலாசாரம் ஏற்கனவே சொல்லிக் கொடுத்திருக்கிறது. புருஷனுக்காக அழணும், குழந்தைகளுக்காக உழைக்கணும்.

அவ்வளவுதான். இதிலிருந்து மாறுபடுவதற்கு ஒரே வழி அம்மா கதாபாத்திரத்தில் நகைச்சுவையை இழையோடச் செய்வதுதான் என்று நினைத்தேன். இளம் கதாநாயகியாக நடித்துவந்த காலத்தில் நெருக்கமான காதல் காட்சிகளில் நடிக்க மிகவும் சங்கடப்பட்டேன். அதிலிருந்து தப்பித்துக்கொள்வதற்காக கொஞ்சம் நகைச்சுவையைக் கலக்க ஆரம்பித்தேன். அதுவே எனக்கு முத்திரையாகிவிட்டது. அதையே அம்மா கதாபாத்திரங்களுக்கும் இடம்மாற்றினேன்.

இன்றைய அம்மாக்கள் கணவன், குழந்தைகளால் ஏற்படும் மனஅழுத்தம் காரணமாக சிரிப்பதையே மறந்துகொண்டு வருகிறார்கள். எனது கதாபாத்திரங்களாவது சிரிப்பை அவர்களுக்கு நினைவூட்டிக்கொண்டே இருக்கட்டும் என்றுதான் நான் நகைச்சுவையை விட மறுக்கிறேன்.

**- ஊர்வசி**

## தமிழில் நடிக்க விரும்புகிறேன்




சென்னையில் கழிந்த என் பழைய நாள்கள் இன்னும் நினைவில் உள்ளன. கல்லூரி நாள்களில் கமலைப் பார்க்க அவரது வீட்டுக்குச் சென்றேன். ஆனால் அவர் வீட்டில் இல்லை. அப்போது அவர் ஆட்டோகிராப் போட்ட புத்தகம் ஒன்றை என்னிடம் கொடுத்தார்கள். அதுவே அவரைச் சந்தித்தது போன்று இருந்தது. என்னுடைய சினிமா அறிமுகம் தமிழில் நிகழ்வதாகத்தான் இருந்தது. தயாரிப்பு தரப்புடன் தகராறு ஏற்பட்டதால் அப்படத்திலிருந்து நீக்கப்பட்டேன். அதன் பிறகுதான் ஹிந்திக்குச் சென்றேன். தமிழ், மலையாளம் இரண்டும் எனக்குத் தாய் மொழிகள். நல்ல கதை அமைந்தால் நிச்சயம் இரு மொழிகளிலும் நடிப்பேன். வருடத்துக்கு ஒரு படம் என்பதுதான் என் திட்டம். நேரம் அமைந்தால் தமிழில் நடிப்பேன். படப்பிடிப்பு அரங்கத்தை விட, வெளியுலக வாழ்க்கையை இரசிக்க விரும்புகிறேன்.

**- வித்யா பாலன்**

## வெள்ளை உலகம்

காதல் தேவதை ஒருத்தி மனிதர்களைப் பார்த்து இப்படிக் கேட்டதாக எங்கோ படித்தேன்... "நாங்கள் இரண்டாயிரம் ஆண்டுகளாக எத்தனை லட்சம் காதல்களை தந்திருக்கிறோம். ஆனால், மனிதர்களே... உங்களால் ஏன் ஓர் உன்னத காதலை கூட வாழ வைக்க முடியவில்லை". இந்தியாவின் தேசிய விலங்கு புலி. தேசிய மொழி ஹிந்தி. தேசிய நோய் ஒன்று இருக்கிறது... சாதி. அதுவேதான் அதிகாரமும், சுயநலமுமாக காதலுக்கு எதிராக முதல் ஆயுதத்தை தயாரித்திருக்கும். "பாவம் என்றால் ஓர் ஆணையும், பெண்ணையும் இறைவன் படைப்பானா, பயணம் போகும் வழியில் திராட்சைக் கொடியை வளர்ப்பானா?" என்று நம் கண்ணதாசன் எழுதியிருப்பார். காதலும் பரிணாமமும் அப்படி வந்தது என்றால், அதற்கு எதிரான துரோகங்களும், அழிவு மனப்பான்மையும் எப்படி வந்தது? இதுதான் என் "வெள்ளை உலகம்" படத்தின் கதை.




**- இயக்குநர் உதயா ராமகிருஷ்ணன்**

# கற்றுத்தர முடியாதது



சர்.சி.வி. இராமன் தன்னுடைய ஆய்வகத்திற்கு ஒரு உதவியாளரை நியமிப்பதற்கான நேர்காணலை நடாத்தினார்.

அங்கு வந்தவர்களில் ஒருவன் மட்டும் அவருடைய கேள்விக ளுக்குப் பதிலளிக்க முடியாமல் திணறினான்.

சர்.சி.வி. இராமன் அவனிடம், “தம்பி, இந்த வேலைக்கு ஏற்ற வகையில் உன் இயற்பியல் அறிவை வளர்த்துக் கொள். அடுத்த முறையாவது வெற்றி பெறுவாய்” என்று அறிவுறுத் தினார்.

கவலையுடன் அங்கிருந்து கிளம்ப முயன்ற அவன், அங்கு கீழே ஒரு குண்டூசி கிடப்பதைப் பார்த்தான்.

அந்தக் குண்டூசியை எடுத்து, சர்.சி.வி. இராமனின் மேசை மேலிருந்த குண்டூசி டப்பாவில் அதைப் போட்டான்.

இதைக் கவனித்த சர்.சி.வி. இராமன் அவனை அழைத்தார். அவனிடம், “நான் உன்னை வேலைக்குச் சேர்த்துக் கொள்கிறேன்” என்றார்.

அந்த இளைஞன், “அய்யா, சிறிது நேரத்திற்கு முன்னால், எனக்கு இயற்பியல் அறிவில்லை என்றீர்களே...” என்றான்.

சர்.சி.வி. இராமன், “இயற்பியலைக் கற்றுத் தரலாம். கற்றுக் கொள்ள லாம். ஆனால், பொறுப்புணர்ச்சியை யாரும் கற்றுத் தர முடியாது. அது இயல்பான ஒன்று. இப்போது உனக்கு வேலை கிடைத்ததற்கும் அந்தப் பொறுப்புணர்ச்சியே காரணம்” .என்றார்.


இளைஞன் அடைந்த மகிழ்ச்சிக்கு அளவே இல்லை.

# தவறு என்ன?

இந்தப் படத்தில் தவறான விஷயங்கள் சில இடம் பெற்றுள்ளன. அவற்றைக் கண்டு பிடிக்கிறீர்களா?



# குறுக்கெழுத்துப் புதிர்



**வலமிருந்து இடம்:**


01. மிகவும் அவசியமானது. ஆனால் அடிக்கடி இல்லாமல் போய் நமக்கு ஷாக் கொடுப்பது.
03. மன்னர்கள் வைத்திருந்தது வந்தால் சொறிய வேண்டிய தொல்லை.
04. பாம்பு இனத்தில் ஒரு வகை..
05. பொன்னை வைத்திருக்கும் இசைக் கருவி.
07. பயிர்களுக்குத் தேவையானது.
09. ராமாயணப் படகோட்டி.
10.பின்-கோடு இருந்தாலும் அஞ்சல் செய்ய முடியாத உயிரினம்.
13.கவிச் சக்கரவர்த்தியின் மகன்.
14.விறகு நீளம் குறைந்தது என்றும் பொருள் படும்.
15.ஐவகை நிலங்களில் ஒன்று.
16.தொடக்கம் - ஆ... அறுவை என அலற வேண்டாம்.

**மேலிருந்து கீழ்:**

01. இருளில் ஒளி தருவது.
02. பொறுமை, அமைதி.
03. சாட்டையைச் சுழற்றினால் ஒற்றைக்காலில் நடனமாடும்.
04. நீ + நான் = ....
06. காப்பு நாண் கைவளை
08. இரட்டைக் காப்பியத்தில் ஒன்று
11. உணவு. இச்சொல்லைப் பிரித்து அதிககாரம் எனக் கத்த வேண்டாம்.
12.பகலுக்கு இன்னொரு பெயர்.
13.தோசை போன்ற உணவுப் பொருள் அதற்காக வயிறு நிறைய அடைக்க வேண்டாம்.

**உன்னை குறை கூறும் பலருக்கு உத்தமனாக வாழ்வதைவிட... உன்னை நம்பும் சிலருக்கு நல்லவனாய் இரு**




நாடாளுமன்ற பொதுத் தேர்தல் - 2015



சூசைமுத்து அலெக்ஸ்சாண்டர்

(ஈ.பி.டி.பி. தென்மராட்சி இணைப்பாளர்)




ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சி (ஈ.பி.டி.பி.)


# வித்தியாசம் கண்டுபிடி



# மேல்தளத்தின் கடைகள் விற்பனைக்காகவே எம்மை அங்கு செல்ல நிர்ப்பந்திக்கிறார்கள்

## பருத்தித்துறை மரக்கறி வியாபாரிகள் விசனம்



பருத்தித்துறை மத்திய சந்தையின் மேல் மாடியில் அமைக்கப்பட்ட கடைகளை விற்பனை செய்வதற்கு வசதியாகவே தம்மை மேற்தளத்தில் வியாபாரம் செய்யுமாறு நகர சபை நிர்வாகம் தம்மை வற்புறுத்தி வருவதாக பணிப்பகிஷ்கரிப்பில் ஈடுபட்டுள்ள மரக்கறி வியாபாரிகள் தெரிவித் துள்ளனர்.

சந்தைக்கட்டடத்தின் மேல் தளத்துக்கு வாடிக் கையாளர்களின் வரவு குறைவாகவுள்ள நிலையில், அங்கு செல்வதால் எதுவித பயனுமில்லையெனவும், விற்பனை செய்யும் உற்பத்திகளை ஏற்றி இறக்குவதில் பெரும் சிரமங்களை தாம் எதிர்கொள்வதாகவும் வியாபாரிகள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

இந்த விவகாரம் நீதிமன்றத்தின் கவனத்துக்கு கொண்டு செல்லப்பட்டுள்ள நிலையில் தமது நிலையை கவனத்தில் கொண்டு நகர சபை நிர்வாகம் இவ் விடயத்தில் நியாயமாக நடந்து கொள்ள வேண்டு மெனவும் அவர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

28 ஆம் திகதிக்கு முன் கீழ் தளத்தில் வியாபாரத்தை நிறுத்திக் கொள்ள நீதிமன்றம் ஆலோசனை வழங்கியிருக்கிறது. இதில் எமக்குள்ள சிரமங்களை வெளிப்படுத்தும் நோக்கில் 30 இற்கும் அதிகமான வியாபாரிகள் தமது மரக்கறி விற்பனை நடவடிக்கைகளை நேற்று நிறுத்திக் கொண்டனர். என அங்குள்ள வியாபாரி ஒருவர் தெரிவித்தார். (அ,52,18)

# சமூக ஒற்றுமையை வலியுறுத்தி ஆக்கத்திறன் போட்டிகள்

சமூகங்களிற்கிடையே ஒற்றுமையை ஊக்குவிப்பதற்காக சிறுகதை ஆக்கப்போட்டியொன்றினை பொது நிர்வாக அமைச்சின் தேசிய மொழிகள் சமூக ஒருமைப்பாடு பிரிவு நடாத்தவுள்ளது.

இனப்பிரச்சினை பால்வேறுபாடு, சாதியம், மொழி, மதம், கலாசார வேறுபாடுகளால் புறக கணிப்பு மற்றும் அநீதியாக நடாத்தப்படுவதற்கு பதில் மக்கள் மத்தியில் பரஸ்பர புரிந்துணர்வு, மரியாதை, நம்பிக்கையை ஏற்படுத்தும் வகையில் ஆக்கங்கள் அமையவேண்டுமென அந்த அறிவிப்பில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இப்போட்டிக்கான தழிழ், சிங்கள மொழிகளில் ஆக்கங்களை சமர்ப்பிக்க முடியுமெனவும் பல்கலைக்கழக பட்டப்படிப்புக்காக பதிவு செய்து கொண்டுள்ளவர்களாலும் அவ்வாறே கல்வியை தொடர்பவர்களாலும் சிறுகதை ஆக்கப் போட்டியில் பங்கு பற்ற முடியும் எனவும் அதில் தெரிவிககப் பட்டுள்ளது.

ஒரு போட்டியாளர் ஒரு ஆக்கத்தை மட்டுமே அனுப்பி வைக்க முடியுமெனவும் இம் மாதம் 30 ஆம் திகதிக்கு முன் சிரேஷ்ட உதவிச் செயலாளர், தேசிய மொழிகள் மற்றும் சமூக ஒருமைப் பாட்டுப் பிரிவு, பொது நிர்வாக உள்ளூராட்சி மற்றும் ஜனநாயக ஆட்சிக்கான அமைச்சு, இல. 40, புத்கமுவ வீதி, இராஜகிரிய என்ற முகவரிக்கு ஆக்கங்களை அனுப்பி வைக்குமாறும் சமூக ஒருமைப்பாட்டு பிரிவு வெளியிட்ட அந்த அறிவிப்பில் குறிப்பிடப் பட்டுள்ளது.

போட்டியாளரின் பெயர், தொலைபேசி இலக்கத்துடன் கல்வி கறகும் பல்கலைக்கழகத்தின் பெயரைக் குறிப்பிட்டு ஆக்கத்தை அனுப்பி வைக்குமாறும், முதலாம், இரண்டாம், மூன்றாம் இடங்களை பெறும் ஆக்கங்களுக்கு முறையே 25,000, 20,000, 15,000 ரூபா பரிசாக வழங்கப்படுமெனவும் நான்காவது இடம் முதல் பத்தாவது இடம் வரை தெரிவாகுவோருக்கு 5,000 ரூபா பரிசாக வழங்கப்படுமெனவும் அந்த அறிவிப்பில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ,54)

# மின்கம்பங்கள் நாட்டி ஏழு மாதங்கள் வழங்கப்படவில்லை மின்சாரம்


## மன்னாகண்டல் மக்கள் விசனம்

முல்லைத்தீவு புதுக்குடியிருப்பு பிரதேச செயலாளர் பிரிவிற்கு உட்பட்ட மன்னாகண்டல் கிராம சேவையாளர் பிரிவு மக்கள் இதுவரை மின்சாரம் வழங்கப்படவில்லை என விசனம் வெளியிட்டுள்ளனர்.

யுத்தத்தினால் இடம்பெயர்ந்து மீள்குடியேறி ஐந்து வருடங்கள் கடந்தும் தாம் இருட்டிலேயே வாழ்வதாகவும் கிராமத்தை சூழ்நது காட்டுப்பிரதேசமாக காணப்படுவதால் யானை களின் தொல்லையும் காணப்படுகின்றது.

அத்துடன் பாடசாலை மாணவர்கள் கல்வி கற்பதற்கும் மக்களின் அன்றாடத்தேவைகளை கருத்தில் கொண்டு விரைவில் மின்சாரத்தை பெற்றுத்தருமாறு கோரிக்கை விடுக்கின்றனர்.

இப் பகுதிக்கு மின்னிணைப்பு வழங்குவதற்காக மின்கம்பங்கள் நாட்டப்பட்டு ஏழு மாதங்களாகியும் இதுவரை மின்சாரம் வழங்க நடவடிக்கை எடுக்கப்படவில்லை எனவும் வீடுகளிற்கான மின்னிணைப்பு வேலைகள் நிறைவு பெற்றும் தமக்கான இணைப்புக்கள் வழங்கப்படவில்லையெனவும் இதனை உரிய அதிகாரிகள் கவனத்திலெடுத்து விரைவில் மின்னிணைப்பை பெற்றுத்தருமாறும் கோரிக்கை விடுக்கின்றனர்.



யாழ். காங்கேசன்துறை வீதியில் இனுவில், மருதனார் மடம் பகுதியில் வீதியின் இரு பகுதிகளும் புல் பூண்டுகளால் நிரம்பியுள்ளதைக் காணலாம் (66)

# பதிவிறக்கப் பெட்டகம்

யாழ் பல்கலைக் கழக கலைப்பீட முன்னாள் மாணவர் ஒன்றியத் தலைவராயிருந்த நண்பர் ஒரு பதிவு போட்டிருக்கிறார்.

"அன்புக்குரிய மாணவர்களே… இது தேர்தல் காலம். பல அரசியல் கட்சிகள் தங்களின் வாக்கு வங்கியை நிரப்பிட உங்களை ஏமாற்ற முனையலாம். பல்கலைக்கழக மாணவன் என்கின்ற அடையாளத்தைப் பயன்படுத்தி அரசியல் கட்சிகளின் காலடிகளில் விழுந்து கதிரை பங்கு கேட்டு பல்கலைக்கழகத்தின் தனித்துவத்தை தயவு செய்து யாரும் விலைபேசி விற்க வேண்டாம்! பல்கலைக்கழகத்தினுள் அரசியல் வேண்டாம். நாம் எப்போதும் எந்த அரசியல் கட்சியையும் சாராத தனிதத்துவமானவர்கள்!"

அந்த நண்பருடன் உரையாடிய போது சொன்னார், மாணவர் ஒன்றியத்தை, எந்த தனிப்பட்ட மனிதர்களின் அரசியல் நோக்கங்களுக்காகவும், எந்த தனிப்பட்ட அரசியல் கட்சியின் நலனுக்காகவும் பயன்படுத்த முடியாது என்று. அது உண்மை தான், அரசியல் தெளிவை ஏற்படுத்தலாமே தவிர, தனிப்பட்ட அரசியல் கட்சிக்ளின் பிரசாரக் கூடமாக மாணவர் ஒன்றியம் மாறக் கூடாது.

தமிழ்சமூகத்தைப் பொறுத்தமட்டில் சாதாரண சனங்களின் பார்வையில் பல்கலைக்கழகம் ஒரு அறிவு மையம். அதிலிருந்து தான் மக்களின் நம்பிக்கை வளர வேண்டும். நீங்கள் தீர்மானிப்பவராய் இருக்க வேண்டும். சிந்தித்து செயற்படும மாணவர்களை இத் தேர்தலை ஒட்டி கருத்துக் கணிப்புகளில் ஈடுபட வைக்கலாம், கட்சி அறிக்கைகளை பொது வெளியில் விவாதத்திற்கு உட்படுத்தலாம், கட்சியின் உறுப்பினர்களை, அழைத்து, பொது அரங்கில் மக்களுடனான அல்லது மாணவர்களுடனான திறந்த விவாதத்தை ஏற்பாடு செய்யலாம் – இதில கட்சி வேறுபாடுகள் காட்டாது. சின்னக் கட்சி பெரிய கட்சி என்று இல்லாமல் அனைவரையும் கேள்விக் குட்படுத்த வேணடும் அதன் மூலம் மக்களுக்கு நிலவரங்களை தெளியப்படுத்த வேண்டும்.

ஒரு பல்கலைக் கழகம் என்றால் அது அறிவின் பல்வேறு சந்திகளையும் இணைக்க வேண்டும், அதற்குரிய பொறுப்பும சக்தியும் அவர்களுக்கு உண்டு என்பதை நம்புகிறேன்.

– கிரிஷாந்தின் முகநூலில்

தேர்தல் நிலவரம் என்ன என்று பல நண்பர்களும் கேட்கிறார்கள். இதற்கு என்னிடம் இரண்டு சாதாரண கேள்விகள் தானுண்டு.

1. தமிழர்கள் தமிழ் அடையாளத்துக்காக தொடர்ந்து தமிழ் உணர்வுடன் வாக்களித்து வந்திருக்கிறார்கள் – அப்படித்தான வாக்களித்து வருகிறார்கள். தமிழர்கள் என்றால் கெட்டிக்காரர்கள், புத்திசாலிகள், அதிகம் படித்தவர்கள் என்று சொல்லிக கொள்ளும் எங்களால் ஏன் சிங்களத்தரப்பை வெற்றி கொள்ள முடியவில்லை? அதாவது, தமிழ் மக்களின் வாக்குகளைப் பெற்று, தமிழ்த்தலைவர்கள் வெற்றியடைகிறார்களே தவிர, தமிழ் மக்கள் இன்னும் வெற்றியடையவில்லையே. மக்களுடைய உரிமைகள் கிடைக்கவும் இல்லை. அவர்களுடைய பிரச சினைகள் எதுவும் தீரவும் இல்லை. ஆகவே, தமிழர்கள் உச் சிககுப்போக முடியாமல், நிரந்தர வெற்றியைப் பெற முடியாமல கிறிஸ் கம்பத்திலேயே சறுக்கி விழுந்து கொண்டிருப்பது ஏன்?

2. தமிழ் மக்கள் பெரும் இழப்புகளை எல்லாம் சந்தித்திருககிறார்கள். பெற்ற பிள்ளையை இழந்திருக்கிறார்கள். கட்டிய கணவரை இழந்திருக்கிறார்கள். சகோதர சகோதரிகளை இழந்திருக்கிறார்கள். சேர்த்த பொருளை, செய்த தொழிலை, கட்டிய வீட்டை, நட்ட பயிரை, வளர்த்த பிராணிகளை, வாழ்ந்த இடத்தை எனப் பலதையும் இழந்திருக்கிறார்கள். அத்துடன், இன்னும் கணவனைத் தேடிக்கொண்டிருக்கும் பெண்கள், பிளளையைத் தேடிக்கொண்டிருக்கும் பெற்றோர், கண்ணிழந்தவர், கையிழந்தவர், காலிழந்தவர், இடுப்புக்குக் கீழே இயங்காதவர் என்றிருக்கும் மக்களிடம் வாக்குக் கேட்க வருவோரில் – "நாம் இவர்களுக்காக என்ன செய்திருக்கிறோம்? இவர்களுடைய எதிர்காலத்துக்காக என்னவெல்லாம் செய்வோம்?" என்று சொல்லத்தக்க துணிவும் மனச்சாட்சியும் யாரிடம் உண்டு?

– முகநூலில் கருணாகரன்


அயோக்கியர்களை தெரிவு செய்யும் வியாதி யாழ்.மைய அரசியலின் சாராம்சமாகும். இதற்கு மாற்றானதை அமைக்க வேண்டிய வரலாற்று அவசியம் உள்ளது. பெரும் பணச்செலவிலான ஆடம்பர ஊதாரித் திருவிழவாகவும் தேர்தல் நடைமுறை காணப்படுகிறது. சாமானியர்கள் தேர்தலில் நிற்பது நினைத்துப்பார்க்க முடியாத விடயமாகி இருக்கிறது. இதனை ஜனநாயகத்தின் சிதைவு எனவும் கொள்ள முடியும். எனவே செம்மை– நேர்த்தி– ஜனநாயக மறுமலர்ச்சி என்பவற்றை நோக்கி எமை தயார்படுத்த வேண்டியிருக்கிறது.

– சுகு-ஸ்ரீதரன்

# தேர்தல் களம்

## விளையாட்டில் கிளிநொச்சி மாவட்டம் க்ணிசமான முன்னேற்றம்

### சந்திரகுமார் மகிழ்ச்சி



கிளிநொச்சி மாவட்டம் விளையாட்டுத் துறையில் கணிசமான முன்னேற்றமடைந்துள்ளமை மிகவும் மகிழ்ச்சியளிக்கின்றது என முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினரும் ஈழமக்கள் ஜனநாயகக்கட்சி வேட்பாளருமான முருகேசு சந்திரகுமார் தெரிவித்துள்ளார்.

கிளிநொச்சி பெரிய பரந்தன் வானவில் விளையாட்டுக்கழகம் வருடாந்தம் நடாத்தும் மென்பந்து சுற்றுப்போட்டி நேற்று முன்தினம் வானவில் விளையாட்டுக் கழக மைதானத்தில் இடம்பெற்றது. மாவட்டத்தைச் சேர்ந்த 18 விளையாட்டுக் கழகங்கள் பங்குபற்றும் மென்பந்து சுற்றுப்போட்டியின் ஆரம்ப நிகழ்வு நேற்று முன்தினம் காலை ஒன்பது மணிக்கு ஆரம்பமானது.

முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் முருகேசு சந்திரகுமார் பிரதம அதிதியாக கலந்துகொண்டு வீரர்களுக்கு ஆசி வழங்கி மென்பந்து சுற்றுப்போட்டியை ஆரம்பித்து வைத்தார். அவர் தனது ஆசியுரையில்

கடந்த காலங்களில் கிளிநொச்சி மாவட்டத்தின் விளையாட்டுத் துறைக்கு அதிகளவு பங்களிப்பு வழங்கியுள்ளமையினையிட்டு மகிழ்ச்சி அடைகின்றேன். குறிப்பாக விளையாட்டுக்கழகங்களின் புனரமைப்பு, விளையாட்டு உபகரணங்கள் பெற்றுக்கொடுத்தல் உள்ளிட்ட பல பணிகளை மேற்கொண்டிருக்கின்றோம்.

எனவே மீள்குடியேற்றத்தின் ஆரம்பத்தோடு ஒப்பிடுகையில் தற்போது மாவட்டதின் விளையாட்டுத்துறை கணிசமான முன்னேற்றத்தை அடைந்துள்ளது. இது தொடர்ந்தும் முன்னோக்கிச் செல்ல வேண்டும். இளைஞர்கள் தங்களது திறமைகள் மூலம் கழகத்திற்கு மட்டுமன்றி மாவட்டத்திற்கும் பெருமை சேர்க்க வேண்டும் என்றும் தெரிவித்தார்.

வானவில் விளையாட்டுக்கழக தலைவர் சாந்தன் தலைமையில் இடம் பெற்ற நிகழ்வில் வடக்கு மாகாண சபை உறுப்பினர் வை.தவநாதன்,கரைச்சி பிரதேச சபை உறுப்பினர் மனோகரன், கரைச்சி பிரதேச விளையாட்டு உத்தியோகத்தர் குமார் மற்றும் கிராம மாதர் அபிவிருத்திச் சங்கங்களின் பிரதிநிதிகள் விளையாட்டுக் கழக வீரர்கள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

## மக்கள் நலன்சார்ந்த செயற்றிட்டங்களை நடைமுறைப்படுத்தியவர்கள் நாங்களே

### ஈ.பி.டி.பி. முதன்மை வேட்பாளர் டக்ளஸ் பெருமிதம்



வடமாகாணத்தில் எந்த அரசியல் தலைவர்களும் செயற்படுத்தாத பல்வேறு மக்கள் நலன்சார்ந்த செயற்றிட்டங்களைச் செயற்படுத்தியவர்கள் நாமே என ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியின் செயலாளர் நாயகமும், முதன்மை வேட்பாளருமான டக்ளஸ் தேவானந்தா சுட்டிக் காட்டியுள்ளார்.

யாழ். கல்வியங்காடு, கலைமகள் சனசமூக நிலையத்தில் நேற்றுமுன் தினம் இடம்பெற்ற மக்கள் சந்திப்பில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், தேர்தல் காலங்களில் நடைமுறைப்படுத்த முடியாத பொய் வாக்குறுதிகளை வழங்கி, மக்களிடம் வாக்குக் கேட்டு வெற்றி பெற்றவர்கள் செயற்படுத்தக் கூடியதான மக்கள் நலன்சார்ந்த பல்வேறு பணிகளைச் செயற்படுத்த முடியாத திறனற்றவர்களாகவே இருக்கின்றனர்.

குறிப்பாக வடக்கு மாகாண சபையைக் கைப்பற்றிய தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் இதுவரையில் மக்களுக்காக எவ்விதமான செயற்றிட் டங்களை முன்னெடுத்துள்ளார்களெனக் கேள்வி எழுப்பியுள்ளார்.

ஆனால் நாம் அரசிடமிருந்து கிடைக்கப் பெற்ற நிதி வளங்களைக் கொண்டு மக்கள் நலன்சார்ந்த பல்வேறு செயற்றிட்டங்களை நடைமுறைப்படுத்திக் காட்டியுள்ளோம்.

அந்த வகையில் வாழ்வாதார மேம்பாடு, சுயதொழில் வாய்ப்புகள், கல்வி, சுகாதாரம், மின் சாரம், வீடமைப்பு, வீதி புனரமைப்பு உள்ளிட்டதான பல்வேறு மக்கள் நலன்சார்ந்த செயற்றிட்டங்களை நாம் நடைமுறைப்படுத்தியுள்ளோம்.

வடமாகாணத்தில் எந்த அரசியல் தலைவர்களும் செயற்படுத்தாத பல்வேறு மக்கள் நலன்சார்ந்த செயற்றிட்டங்களைச் செயற்படுத்திய அதேவேளை, குறிப்பாக காங்கேசன்துறை வரையான புகையிரத சேவையை கொண்டுவந்த பெருமை எம்மையே சாரும் என்றும் சுட்டிக்காட்டினார்.

அதனடிப்படையில் தான் மக்கள் எமக்கு வாக்களித்து வெற்றி வாய்ப்பைத் தரும் பட்சத்தில், பல்வேறுபட்ட வாழ்வாதாரம், உதவித் திட்டங்கள், வேலை வாய்ப்பு, அபிவிருத்தி உள்ளிட்ட மக்கள் நலன்சார்ந்த பணிகளை முன்னெடுக்க முடியும் என்றும் தெரிவித்தார்.

இதன்போது மக்களின் தேவைப்பாடுகள், பிரச்சினைகள் தொடர்பில் கேட்டறிந்ததுடன், தற்போதைய அரசியல் நிலவரம் தொடர்பிலும் செயலாளர் நாயகத்தால் விளக்கமளிக்கப்பட்டது.

இதன்போது, ஈ.பி.டி.பியின் வேட்பாளர்களான சொல்லின் செல்வர் இரா.செல்வவடிவேல், யாழ். மாநகர முன்னாள் முதல்வர் யோகேஸ்வரி பற்குணராசா உள்ளிட்டோர் உடனிருந்தனர்.


நாடாளுமன்ற பொதுத் தேர்தல் - 2015




(ஈ.பி.டி.பி. வலிகாமம் கிழக்கு இணைப்பாளர்)

X 2

ஈழ மக்கள். ஜனநாயகக் கட்சி (ஈ.பி.டி.பி.)


## எதிர்காலத்திலும் பணிகளை தொடர ஆணையை தரவேண்டும் மக்கள்

### பசுபதி சீவரத்தினம் தெரிவிப்பு

மக்களுக்காக இதுவரை ஆற்றிய பணிகளது அனுபவங்களின் அடிப்படையில் அவற்றை திறம்பட எதிர்காலத்திலும் முன்னெடுப்பதற்கான மக்கள் ஆணையை வேண்டி நிற்பதாக ஈழமக்கள் ஜனநாயகக் கட்சியின் அமைப்பாளர் பசுபதி சீவரத்தினம் தோழர் (கி.பி) தெரிவித்தார்.

எதிர்வரும் பொதுத்தேர்தலை முன்னிட்டு தெல்லிப்பளை சித்தியம்புளியடி கலைச்செல்வி சனசமூக நிலையத்தில் நேற்றுமுன்தினம் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த தேர்தல் பிரசாரக் கூட்டத்தில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இம்முறை தேர்தலில் வீணைச் சின்னத்தில் களமிறங்கியுள்ள பசுபதி சீவரத்தினம் தமது கடந்தகால பணிகளை நினைவுகூர்ந்து மேலும் உரையாற்றுகையில்,

நான் அரசியலில் பிரவேசிப்பதற்கு முன்பிருந்தே குறிப்பாக பிற்படுத்தப்பட்ட வறிய மக்கள் எதிர்கொள்ளும் வாழ்க்கை நெருக்கடிகள் அதற்காக அம்மக்கள் மேற்கொண்ட போராட்டங்களில் நேரடியாக நான் பங்குகொண்டவன். அந்த அனுபவங்களின் அடிப்படையில் எமது செயலாளர் நாயகத்தின் வழிகாட்டலின் கீழ் வறுமைக்கோட்டின் கீழ் வாழும் மக்களின் வாழ்வாதாரம் சுயதொழில் முயற்சிகள் மற்றும் அடிப்படை வசதிகளை பெற்றுக்கொடுப்பதற்கான பணிகளை நேர்த்தியாக மேற்கொண்டு

யுத்த சூழலில் மக்கள் நெருக்கடிகளை எதிர்கொண்ட போதெல்லாம் அவர்களுக்கான பாதுகாப்பு மற்றும் அடிப்படை வசதிகளை பெற்றுக் கொடுப்பதில் காத்திரமான பணிகளை நாம் மேற்கொண்டுள்ளோம்.

எமது அனுபவத்தில் வடக்கின் அபிவிருத்தியில் மக்களுக்கு தேவையானவற்றை முடிந்தளவுக்கு பெற்றுக் கொடுக்க வேண்டுமென்பதில் முனைப்பாக செயற்பட்ட பெருமை எமது செயலாளர் நாயகத்தையே சாரும்.

குறிப்பாக யுத்தத்தின் பின்னரான காலத்தில் வடபகுதி மக்களுக்கான உட்கட்டுமான அபிவிருத்தி வீடமைப்புத் திட்டங்கள் மின்விநியோகம் மற்றும் வாழ்வாதார உதவிகளை பெற்றுக் கொடுப்பதில் ஈழமக்கள் ஜனநாயகக் கட்சியின் வகிபங்கு மிகவும் காத்திரமானதாகும்.

இப்பணிகளை எதிர்காலத்தில் தொடர்ந்தும் செவ்வனேமுன்னெடுக்கப்பட வேண்டுமாயின் எமது செயலாளர் நாயகத்தின் வழிகாட்டலின் கீழ் உங்கள் பிரதிநிதிகளாக நாம் செயற்படுவதற்கான மக்கள் ஆணையை வழங்கி இத்தேர்தலில் எமது வெற்றியை நீங்கள் உறுதிப்படுத்த வேண்டுமென அவர் மேலும் தெரிவித்தார்.

இச்சந்திப்பில் கட்சியின் வலி.வடக்கு பிரதேச அமைப்பாளர் அன்பு, வலி.வடக்கு பிரதேச சபை எதிர்க்கட்சி உறுப்பினர் திருஞானம் உட்பட பொது அமைப்புக்களின் பிரதிநிதிகள் எனப் பலரும் கலந்து

(09) கீழே தரப்பட்ட கணிதச்செய்கையை அவதானித்து சரியான விடையின் கீழ் கோடுக

| △ + □ = 10 | ○ - △ = 05 | □ + □ = 18 | □ x ○ = 54 |
|---|---|---|---|

01) ○ பெறுமானம் என்ன? 1) 6 2) 5 3) 4

02) △ பெறுமானம் என்ன? 1) 2 2) 3 3) 1

03) □ + ○ - △ = ............. என்ன? 1) 14 2) 16 3) 18

(10) கீழே தரப்பட்ட கணிதச்செய்கையை அவதானித்து புள்ளிக்கோட்டில் வரக்கூடிய எண்களைக் கண்டு கீறிடுக

01)

6 ▭ 3 ⇨ 9
8 ⇨ 64 ▭ 61
6 ▭ --- ⇨ ---

(i) 2, 16 (ii) 4, 16 (iii) 4, 18

02)

8 ○ 40 ✚ 48
5 ✚ 13 ○ 65
6 ○ --- ✚ ---

(i) 36, 30 (ii) 38, 30 (iii) 30, 38

### நேற்று பிரசுரமாகிய வினாக்களுக்கான விடைகள்

(01) 01.அழும் 02. புப்புந்தது 03. பூக்கள் 04. நாங்கள் 05. பூக்கள்
(02) 01.சூரியன் காலையில் உதிக்கும் 02. உன் அப்பாவின் தொழில் என்ன?
(03) 01.12 (அ முதல் ஔ வரை எழுதுதல்) 02. 18, பொருத்தமானவை
03.கோபம் கூடாது கோபம் அறிவை இழக்கும் (04) 01. தைரியம் பொருள்பட எழுதுதல்
02. பழங்களை பொருள்பட எழுதுதல் (05)01. பெட்டி 02. சிவப்பு
(06) 01. சிலந்தி 02. பட்சிகள் (07) 01. சாக்கு விரைவாக நிரை உறிஞ்சும்
02. தென்னை கடற்கரை ஓரங்களில் செழித்து வளரும் (08) 01. செவிடி 02. புத்திரன்
03. பிராட்டி 04. பூட்டன் (09) 01. 2 02. 3 03. 2 04. 1 05. 3
06. 1 07. 2 08. 1 09. 2 10. 2 11. 3 12. 2 13. 3
14. 1 15. 3 16. 1 17. 1 18. 3 19. 3 (10) 01. 24.00
02. 55.00 03. 90.00 04. 169.00 (11) 01. C 02. D
03. B 04. A (12) பொருத்தமானதை எழுதுக
(13) 01 - 04 வரை பொருத்தமான வசனம் (14) 01. 12 02. வெள்ளை
03. மாடி வீட்டில் 04. விரைந்து பறக்கிறது
05. வெள்ளைப்புறா 06. வயல் 07. 01. இல்லம் / மனை / அகம்
02. விரைவாக / வேகமாக 08. கொக்கு 09. நெல், சோளம், பயறு
10. ஈ (14) 01. அகப்பை 02. காளான் 03. வியங்கோள் குறி
04. 01. காலம் தாழ்த்தல் பயனற்றது 02. முயற்சி வெற்றி தரும்

**இப் பயிற்சி வினாக்களின் விடைகள் நாளை வெளியாகும்**



தரம் - 5 புலமைப்பரிசில் பரீட்சை முன்னோடி - 2015

பகுதி - I


1 மணி 15 நிமிடம்

# கல்வி முரசு

எல்லா வினாக்களுக்கும் விடையளிக்க


(01) 01ஆம், 02ஆம் வினாக்களுக்கு நெருங்கிய தொடர்பற்ற உருவின் கீழ் கோடுக

01)



(i) (ii) (iii)

02)



(i) (ii) (iii)

(02) தரப்பட்டுள்ள உருக்களைக் கவனத்திற்கொண்டு விடை தருக




A B C D E

01) மனிதன் அருந்தக் கூடிய நிறை உணவைத் தரக்கூடிய விலங்குக் கூட்டம் எது?
1) B யும் C யும் 2) A யும் B யும் 3) A யும் C யும்

02) தாவர உண்ணிக் கூட்டத்தில் அடங்காதது எது?
1) E யும் C யும் 2) D யும் B யும் 3) A யும் D யும்

(03) 01ஆம், 02ஆம் வினாக்களுக்கு கீழே தரப்பட்ட உயிரினங்கள் ஏதோ ஒரு விதத்துக்கு ஏற்ப கூட்டங்களாக பிரிக்கலாம். அவற்றுள் சரியாகப் பிரிக்கப்பட்ட கூட்டத்தின் கீழ் கோடுக


01)



A B C D E F

1) A,B,D உம் C,E,F உம் 2) A,C,F உம் B,D,E உம் 3) A,B,C உம் D,E,F உம்


02)




01) A, C, F உம் B, D, E உம் 02) B, C, D உம் A, E,F உம் 03) A, D, E உம் B, C,F உம்

**(04) 01ஆம், 02ஆம் வினாக்களுக்கு வெற்றிடமாக உள்ள இடத்தில் வரக்கூடிய அமைப்பு எதுவெனக் கண்டு கீறிடுக**

01)





02)





**(05) பொருத்தமான விடையின் கீழ் கோடிடுக**


01) நானும் தம்பியும் இன்று வீட்டுக்குச் சென்றோம் என்ற வாக்கியத்தை உணர்த்தும் அடையாளக் கோவை எதுவெனக் கண்டு கீறிடுக





02) நேற்று இன்று நாளை இது என்ற வசனத்தை உணர்த்தும் அடையாளக் கோவை எதுவெனக் கண்டு கீறிடுக




03) புள்ளிக்கோட்டிற்குப் பொருத்தமான உரு எதுவெனக் கண்டு கீறிடுக




**(06) கீழே A, B, C, D ஆகிய நான்கு முக்கோணிகள் தரப்பட்டுள்ளன அவற்றை மையமாக வைத்து 01ஆம், 02ஆம் வினாக்களுக்கு விடை தருக**





01) முக்கோணிகள் A யும் C யும் கொண்டுள்ள எழுத்துக்கள் எவை எனக் கண்டு கீறிடுக

1) PXYRW 2) PXYWQ 3) R WYZP

02) முக்கோணி B மட்டும் கொண்டுள்ள எழுத்துக்கள் எவை எனக் கண்டு கீறிடுக

1) YQ 2) QZ 3) ZF

**(07) கீழே தரப்பட்ட கணிதச்செய்கையை அவதானித்து 01 முதல் 03 வரையான வினாக்களுக்கு விடை தருக**




01) பந்து இரண்டின விலை எனனவாக இருக்கும்

1) ரூபா 36.00 2) ரூபா 48.00 3) ரூபா 24.00

02) வற் இரண்டின் விலை யாதாக இருக்கும்


1) ரூபா 24.00 2) ரூபா 12.00 3) ரூபா 10.00

03) பென்சில் ஒன்றின் விலை யாது?


1) ரூபா 12.00 2) ரூபா 20.00 3) ரூபா 10.00

**(08) தொடக்கத்தில் உள்ள உருக்களுடன் தொடர்புடுத்தும் போது கிடைக்கும் உருவைத் தெரிவு செய்க**


01)





02)




03) கடதாசியை படத்தில் காட்டியவாறு மடித்து துளையிடும் போது பெறப்படும் அமைப்பு யாது?




04) கீழே தரப்பட்ட படங்கள் ஏதோ ஒரு ஒற்றுமைக்கு ஏற்ப கூட்டங்களாகப் பிரிக்கப்பட்டுள்ளன அதற்கேற்ப சரியாகப் பிரிக்கப்பட்ட கூட்டத்தின் கீழ் கோடிடுக




01) C, G உம் A, F உம்
02) A, G உம் B,H உம்
03) A, E உம் B,H உம் C,G உம்

# முகாமைத்துவ உதவியாளர் III சித்திபெற்றோர் விபரம்

**யாழ். மாவட்டம்**

திவ்வியா.பி (937991754v), தாரங்கினி.பி (906313162v), தர்சிகா.பி (906812690v), மாதுகி.ஆர் (906272199v), மதீஸன்.ரி (941944140v) பிரிந்தா.எம் (865572557v) சிவதர் சினி.எஸ் (888401962v) என்.பவதுர்சன் (938691469v) மாதுமை.எஸ் (895402370v), பூஜித்திரி.ரி (878242777v), கே.பிரசன்னா (892362955v) ரஜீந்தி டபிள்யூ.ஆர் (897161850v) எஸ்.பானுசிறி (927522870v), எஸ்.தர்மலிங்கம் (947621190v), சர்மளா தேவி.எஸ் (936003613v), டி.கோபிகாந்தன் (911392712v), காயத்திரி.எஸ் (906433290v), ஜனனி.டி (898171418v), மயூரிக்கா.பி (936232469v), விதுஜா.ஜி (937282605v), கே.மகாராஜ் (922412766v), கனுஜா.ஜே (918571647v), பாலேந்தினி.பி (945873272v), விதுப்பிரியா.வி (888023453v), தர்சிகா.எஸ் (938410909v), அனித்தா.ஆர் (885823246v), லோகனா.எம். (926510894v), மயூரி.எம் (897161770v), தர்மிகா. எஸ் (946270580v), பானுலதா.எஸ் (91507 3298v), சங்கீர்தா.எம் (908051963v), ஆர்.மோகனராஜ் (960100310v), ரி.துசிதரன் (940492645v), அஜிதா.பி (918061428v), ராஜினி.ஆர் (926571770v), பிருந்தா.எம் (878660595v), தட்சாஜனி.வி (895630209v), துவாரகா.ஜே (917842221v), யு.தாமோனுதன் (900170130v), தர்சிகா.கே (927141957v), விேனாதா.எஸ் (878132610v), விக்னேஸ்வரி.ஏ (878221648v), ஜெபபிரியா.யு (936443311v), கீர்த்தனா.கே (887771065v), சிவானி.வி (955042220v), ரேனுகா.ஏ (948361590v); சிநதூரி.என் (937190840v), தர்சிகா.ரி (937201915v), சுகன்யா.ஜி (887712093v), நிரோசியா.பி (915351913v), துர்க்கா.என் (935571111v), என்.பிரசன்னவதனன் (940863465v), சஜித்தா.வை (917683034v), வி.சிந்துஜன் (941892965v), எஸ்.தனுராஜ் (942543964v), சிந்துஜா.கே (917972109v), சுகன்யா.ஏ.எம் (947631160v), றூபிகா.எஸ் (948350246v), கஜந்தி.எஸ் (937544260v), கே.பிரதாப் (920313060v), யாசினி.டி (908650727v), தேவகி.என் (896563009v), திவ்ஜா.எஸ் (91804106v), மேரிடிலாந்தினி.கே (927892847v), கிருபாலினி.எஸ் (886673337v), சாளினி.எஸ் (896652230v), கங்கா.பி (915721265v), கவிதா.எஸ் (897020807v), பி.பவித்திரன் (943561834v), கஜானா.எஸ் (926271415v), சிந்துஜா.வி (925091987v), விதுஷா.கே (897413221v), வை. அம்பிகேஷன் (892640840v), சாமினி.ஏ (888511822v), கலைவாணி.ஏ (936081541v), நிரோஜினி.ஆர் (897463539v), உதயந்தி.ரி (925042498v), தாரணி.ரி (906772760v), கனனவாஜினி.பி (947353055v), தனுஜா.கே (877202399v), கே.உதயராஜா (900020937v), சுவேதா.வி (895612669v), நிஜூறி.ஜி (945352973v), வினித்தா.வை (908371917v), கனிதா.பி (857002202v), ஜி.நிஷாகரன் (951821934v), பிரஷாந்தினி.பி (946960594v), தர்சிக்கா.பி (916213328v), உஸ்.சுஜான் (902022090v), என்.நிருஷாந் (900941463v), நிருத்திக்கா.எஸ் (927892448v), சிந்துஜா.ஏ (886512155v).

**கிளிநொச்சி மாவட்டம்**

விதுஷா.ஆர் (885221424v), லதாங்கி.வி (937233477v), ஜானிஷா.ஆர் (945232676v), டிஷிஹான்.வை (941682995v), பிறேம்.ஐ. (900043031v), மிதுலா.ரி (938132852v), சரன்ஜன்.வி (922011796v), அனுஜா.எஸ். (945634073v), கே.தயாளன் (922580898v), கே.றோஜிதன் (சுட்டிலக்கம்-30472138), தேனுஜா.ரி (928044378v), சிவாஸ்கரன்.வி. (9401535 06v), ரேவதி.பி (887984115v), சரண்யா.கே (917693021v), காயத்திரி.எஸ் (895493570v), சுகந்தன்.ரி (880012762v), சிவதாஸ்.என் (942111606v)

**முல்லைத்தீவு மாவட்டம்**

எஸ்.ஜானகுமார் ( 881522101v), லபானா.ஏ (887454078v), நிரூசா.டி(918404287v), மகிளினி.ரீ (876841738v), அனோஜிகா.எஸ் (948240173v), எஸ்.வினோதன் (851793925v), எஸ்.அருண்யா (936722636v), றிஸ்வானா யு.எல்.எப் (916653980v), சுமித்தா.ஐ (927043289v), இந்துஜா.எல் (9383.32851v), நிறோஜனா.கே (897034964v), துஷியா.கே (947643061v), ஜினோசன்.ஏ (910890484v), டனுஷா.எஸ். (947472658v), கிருஷ்ணநர்மதா.எஸ். (91752 4475v)

**மன்னார் மாவட்டம்**

பாத்திமா அஸ்மிலா.ஏ (908501837v), றுபீனா ஏ.ஆர்.எப். (936763260v), மெனாட் தனுஷா.சி (907233758v), எஸ்.றொக்ஸ மிலன் (922380724v), ஜசான் எம்.ஜே.எம் (930633216v), யர்ழினி ஜே.ஜி.டி(925760927v), ஷரா ஏஞ்சல்.ரி (885973353v), குரூஸ ஆர்.எம். (891371047v), மதுரானந்தன்.எஸ் (941400752v), ஜெனாநிரூஷா.ஜி (937594038v), சொஜ்சா எஸ்.ஜே.வி (911203480v), ஜீவறஜீபன்.ஜே (922820210v), கொன்சிலா.எஸ். (897003287v), தர்மிகா.எம்.ரி. (905010220v), எம்.விஜயசாந்தி (946652431v)

**வவுனியா மாவட்டம்**

பி. புரந்தரதாசன் (892461538v), தனுசிக்கா.பி (906850958v), சிந்துஷா.சி (905842102v), சுவேதா.ஆர் (907531090v), தக்சிகா.ரி (938502986v), துவாரகா.வி (925932191v), ச்ர்மினி.என் (898291367v), கே.ஜெயரூபன் (931150251v), சுலக்ஷி.எஸ (905693301v), பவேத்திரா.யு (906962594v), எஸ்.கே.ஜேசிறி (927960842v), ரி.தேவசங்கர் (912442250v), பேல்சினி.ஏ (908000293v), விஷாரா.பி (886512740v), அருந்ததி.வி (907852172v), வினோஜிதா.ஜி (896922041v), எஸ்.எஸ்.ஐ.டி. கேரத் (946110116v), சுமர்னா.யு (905683870v), ஆன்சோபியா.எஸ் (848590177v), ரி.கௌசிகன் (891942060v), தமிழரசி.எஸ் (915191118v), ஜம்யுதா.பி (897241315v), தர்ஷா.ஆர் (917272247v), ஆர்.மகிந்தன் (892451729v), தமிழினி.எஸ் (906631270v), பாத்திமா நஷ்ரியா.எம்.ஆர் (938012202v),

## ஐக்கியத்தைக் கட்டியெழுப்பாமல் தேர்தலை சந்திப்பதில் பயனில்லை

### ஈ.பி.ஆர்.எல்.எவ்.இன் பத்மநாபா அணி கருத்து

பரந்தளவிலான ஜனநாயக ஐக்கியத்தை கட்டியெழுப்புவதன் முகம் மக்கள் மத்தியில் குறைந்த பட்ச புரிதலையேனும் ஏற்படுத்தாமல் தேர்தலில் பங்கு கொள்வது ஆக்கபூர்வமான பெறுபேறுகளைத் தராது என ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியின் பத்மநாபா அணி தெரிவித்துள்ளார்.

நடைபெறவுள்ள பொதுத்தேர்தலில் தமது நிலைப்பாட்டினை விளக்கி அந்த முன்னணியின் செயலாளர் தி.நிதன் வெளியிட்டுள்ள அறிக்கையிலேயே இவ்வாறு குறிப்பிடப்பட்டுள்ளது.

மிகவும் நெருக்கமான சூழலிலும் மேற்கொண்ட தமது அரசியல் பணி அனுபவங்களை குறிப பிட்டு வெளியான அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது.

நாம் தேர்தல் ஜனநாயக நடைமுறைகளில் கடந்த 27 வருடங்களாக பங்குபற்றி வந்திருக்கிறோம். மாகாணசபை முறை அறிமுகப்படுத்தப்பட்ட காலத்தில் யாருமே தேர்தல்களில் பங்குபற்றுவதை நினைத்துப் பார்க்காத காலத்தில் ஜனநாயகம் மறுக்கப்பட்ட காலத்தில்நாம் தேர்தலை சந்தித்தவர்கள் யுத்தம் ஆரம்பித்ததன் பின்னர் ஜனநாயக மீட்சிக்கான முன்னோடி நடவடிக்கைகளை நாம் மேற்கொண்டிருந்தோம்.

இந்த ஜனநாயகத்திற்கான தொடர் இடையறாச் செயற்பாட்டில் பல நூற்றுக்கணக்கான தோழர்கள் பலியாகி இருக்கிறார்கள். இழப்புக்களைச் சந்தித்திருக்கிறார்கள்.

மாகாணசபை- நாடாளுமன்றம் - உள்ளூராட்சிச் தேர்தல்களில் பல்வேறு இன்னல்கள் அபாயங்கள் மத்தியில் தேர்தல்களை நாம் சந்தித்து வந்திருக்கின்றோம்.

பரந்த ஜனநாயக ஐக்கியம் கட்டி எழுப்புவதற்கான முயற்சிகளை இடையறாது மேற்கொண்டு வந்திருக்கிறோம். ஆனால் அது தொடங்குவதும் சீர் குலைவதுமாகவே வரலாறு பூராகவும் இருந்து கொண்டிருக்கிறது. அப்படி ஒன்றைக் கட்டாமல் குறைந்த படச புரிதலைத் தன்னும் ஏற்படுத்தாமல் தேர்தலில் பங்குபற்றுவது ஆக்கபூர்வமான பெறுபேறுகளைத் தராது என்பது எமது அனுபவபூர்வமான உண்மையாகும்.

அவ்வாறான ஒருதேர்தல் மக்கள் அவநம்பிக்கை கொள்வதற்கும் ஏமாற்று மோசடி பேர்வழிகளை பலப்படுத்துவதாகவுமே அமையும்.

உண்மையில் விசச் சூழல் போல் அதுதான் நடந்து கொண்டிருக்கின்றது. மக்கள் நலன் சார்ந்த ஜனநாயக உணரவு கொண்ட பரந்துபட்ட ஐக்கிய ஸ்தாபனம் இன்றைய வரலாற்று அவசியமாக இருப்பதை நாம் எல்லோரும் முதலில் கவனத்தில் கொள்ளவேண்டும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

## மினி சூறாவளியால் மீனவர்கள் பாதிப்பு

நேற்றுமுன்தினமிரவு திடீரென வீசிய மினி சூறாவளியால் மீனவர் இளைப்பாறும் மண்டபத்தில் கூரை தூக்கி வீசப்பட்டுள்ளது.

பருத்தித்துறை தும்பளை, மணல் ஒழுங்கையில் அமைக்கப்பட்டிருந்த இந்த இளைப்பாறும் மண்டபமே இவ்வாறு சேதமடைந்துள்ளது.

கூரைக்கான மரங்களோடு சேர்த்து முழுவதும் காற்றினால் தூக்கி வீசப்பட்டதில் மண்டபம் வெட்ட வெளிச்சமாகக் காட்சியளிப்பதாக அப்பகுதி மீனவர்கள் தெரிவித்துள்ளனர்.

இப்பகுதி மீனவர்கள் இளைப்பாறுவதற்கென இந்த ஒரு மண்டபம் மாத்திரமே உள்ளதால் இவர்களது சிரமங்களை கவனத்திலெடுத்து இம்மண்டபத்தை விரைவில் புனரமைக்க சம்பந்தப்பட்டோர் துரித நடவடிக்கை எடுக்க வேண்டுமெனவும் மீனவர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

(அ,166)




## கல்வி முகாமைத்துவ டிப்ளோமா கற்கை நெறிக்கு விண்ணப்பம் கோரல்

பட்டப்பின்கல்லி முகாமைத்துவ டிப்ளோமா பாடநெறிக்கான விண்ணபங்களை தேசிய கல்வ நிறுவகம் கோரியுள்ளது.

இப்பாட நெறிக்கென 2016 முதல் 2018 வரை பகுதி நேரமாக கற்கை நெறியை தொடரவும் அவ்வாறே 2016 ஆம் ஆண்டுக்கென முழுநேரமாக கற்கை நெறியை தொடரவும்மென தனித்தனியாக விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

விண்ணபப் படிவங்கள் தேவைப்படுவோர் சுய முகவரி இடப்பட்ட10 ரூபா முத்திரை இடப்பட்ட கடித உறையினை பாடசாலை கல்வி தலை மைத்துவ அபிவிருத்தி முகாமைத்துவபீடம் மீப்பே சந்தி பாதுக்கை என்ற முகவ ரிக்கு அனுப்பி படிவங்களைப் பெற்றுக் கொள்ள முடியும்.

பகுதி நேர கற்கை நெறியாளர் ஒக்ரோபர் 31 ஆம் திகதிக்கு முன்னரும் முழுநேர கற்கையாளர்கள் அடுத்தமாதம் 31 ஆம் திகதிக்கு முன்னரும் தமது விண்ணபங்களை அனுப்பிவைக்க வேண்டுமெனவும் கல்வி நிறுவகத்தின் பணிப்பாளர் நாயகம் பேராசிரியர் குணபால நாயக்கார விடுத்துள்ள அறிவிப்பில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ)

## ஜெயபுரம் பகுதியில் வாள் வெட்டு

பூநகரி தெற்கு ஜெயபுரம் பகுதியில் வாள் வெட்டுச் சம்பவமொன்று நேற்றுக்காலை இடம்பெற்றுள்ளது.

இச்சம்பவத்தில் பல்லவராயன் கட்டு சோலைப்பகுதியைச் சேர்ந்த கு.கதிரவேற்பிள்ளை (வயது 48) என்பவரே கழுத்திலும், தோளிலும் வெட்டுக் காயங்களுக்குள்ளாகி முழங்காவில் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

நேற்றுப்பகல் வேளை ஜெயபுரம் சந்தையில் மக்கள் குழுமியிருந்த சமயம், இடம்பெற்ற இவ் வாள்வெட்டு சம்பவத்தை அடுத்து அப்பகுதி மக்கள் அச்சம் வெளியிட்டுள்ளனர். இச்சம்பவத்துக்கு குடும்பத் தகராறே காரணமெனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.(36)

## 54 ஆண்டுகளுக்குப் பின்னர்
# அமெரிக்க - கியூப தூதரகங்கள் திறப்பு



(ஹவானா)

54 ஆண்டுகளுக்குப் பின்னர் அமெரிக்கா-கியூபா நாடுகளில் நேற்றைய தினம் தூதரகங்கள் திறக்கப்பட்டன. அமெரிக்காவுக்கும், கியூபாவுக்கும் இடையே கடந்த 1961 ஆம் ஆண்டு முதல் தூதரக உறவு முறிந்தது. அமெரிக்காவுக்கு எதிரான தீவிரவாத நடவடிக்கைகளுக்கு கியூபா உதவி செய்வதாக எழுந்த குற்றச்சாட்டை தொடர்ந்து இரு நாடுகளுக்கு இடையேயான உறவில் விரிசல் ஏற்பட்டது.

அதைத் தொடர்ந்து இரு நாடுகளிலும் செயறபட்டு வந்த தூதரகங்கள் மூடப்பட்டன. கடந்த 54 ஆண்டுகளாக 'இருநாடுகளும் எதிரிகளாக செயற்பட்டு வந்தன. இந்த நிலையில் இரு நாடுகளும் பிரச்சினைகளை பேச்சு வார்த்தையின் மூலம் தீர்த்துக் கொள்ள முடிவு செய்தன.

அதற்கான நடவடிக்கை கடந்த 6 மாதங்களாக மேற்கொள்ளப்பட்டது. அமெரிக்க அதிபர் ஒபாமா ஒப்புதலின் பேரில் அந்நாட்டு வெளியுறவு மந்திரி ஜோன் கெரி, கியூபா வெளியுறவு மந்திரி புரூனோ ரோத்ரி கியூசுடன் பேச்சுவார்த்தை நடத்தினார்.

இதையடுத்து இரு நாடுகளுக்கும் இடையேயான சுமூக பேச்சுவார்த்தை முடிந்து சமரசம் ஏற்பட்டது. அதைத்தொடர்ந்து மீண்டும் தூதரக உறவு ஏற்படுத்தி கொள்ள முடிவு செய்யப்பட்டது.

அதன்படி அமெரிக்க தலைநகர் வோஷிங்டனில் கியூபா தூதரகம் நேற்று திறக்கப்பட்டது. அதே போன்று கியூப தலைநகரம் ஹவானாவில் அமெரிக்க தூதரகம் திறக்கப்பட்டது. 54 ஆண்டுகளுக்கு பிறகு இரு நாட்டு கொடிகளும் பறக்கத் தொடங்கியுள்ளன.

# நைஜீரியாவில் தொடரும் மோதல் எட்டு இலட்சம் சிறுவர்கள் பாதிப்பு

நைஜீரியாவில் போஹோஹராம் தீவிரவாதிகளின் தாக்குதல்கள் காரணமாக இதுவரையில் 8 இலட்சத்திற்கும் அதிகமான சிறுவர்கள் பாதிக்கப்பட்டுள்ளதாக யுனிசெவ் அமைப்பு அறிவித்துள்ளது.

ஐக்கிய நாடுகள் சபையின் சிறுவர் பாதுகாப்பு நிதியம் யுனிசெவ் அமைப்பு வெளியிட்டுள்ள அறிக்கை ஒன்றிலேயே இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதன்போது வெளியிடப்பட்டுள்ள அறிக்கையில், வடகிழக்கு நைஜீரியாவில் சுமார் 8 இலட்சம் குழந்தைகள் தங்களது வீடுகளிலிருந்து வெளியேறும் நிலைக்கு தள்ளப்பட்டுள்ளனர். அவர்கள் வீடின்றி குடும்ப உறவுகளை இழந்து தவிக்கின்றனர். பல முறைகேடான செயல்களுக்கு பயன்படுத்தப்படுகிறார்கள்.

கடந்த 2 ஆண்டுகளில் மட்டும் கைவிடப்பட்ட அல்லது குடும்பத்தை இழந்து நிற்கும் குழந்தைகளின் எண்ணிக்கை இரட்டிப்பாகியுள்ளது. போஹோஹராம் நடத்தும் தாக்குதல்களின் விளைவாக இந்த அபாயம் நேர்ந்துள்ளது.

இவர்களது சண்டைகளில் குழந்தைகள் திட்டமிட்ட இலக்குகள் ஆகின்றனர். பாலியல் தொந்தரவுகள், கட்டாயத் திருமணம், கடத்தல்கள் மற்றும் கொலைக்குள்ளாகின்றனர்.

பல குழந்தைகள் கிளர்ச்சியாளர்களின் ஆயுதங்களாகிவிட்டனர். பயங்கர ஆயுதங்களை உபயோகிக்க பழக்கப்படுகின்றனர். சில நேரங்களில் மனித வெடிகுண்டுகளாக பயன்படுத்தப்படுகின்றனர்.

கடந்த 2007 ஆம் ஆண்டிலிருந்து நைஜீரியாவில் பாடசாலைக்கு செல்லாமல் இருக்கும் குழந்தைகளின் எண்ணிக்கை 8 இலட்சத்திலிருந்து 10.5 இலட்சமாக அபாயகரமான அளவில் அதிகரித்துள்ளது என தெரிவிக்கப்பட்டுள்ளது.

உலகச் செய்திகள்

# 3 வார காலத்திற்கு பின்னர் கிரிஸில் வங்கிகள் திறப்பு

(ஏதென்ஸ்)

3 வார காலத்துக்கு பின்னர் கிரிஸ் நாட்டில் நேற்றையதினம் வங்கிகள் திறக்கப்பட்டன. கிரேக்கம் என அழைக்கப்பட்டு வந்த வரலாற்று சிறப்புமிக்க கிரிஸ் நாடு, வரலாறு காணாத வகையில் பொருளாதார நெருக்கடியில் தத்தளித்து வந்தது. இதன் காரணமாக அங்கு கடந்த 3 வாரங்களாக வங்கிகள் மூடப்பட்டுள்ளன



இதன்படி பொருளாதார சரிவில் இருந்து மீள்வதற்கு கிரிஸ் நாடு பெருமளவில் வரிகளை உயர்த்துகிறது. பொருட்கள், சேவைகளுக்கான வரிகள் கிட்டத்தட்ட இரு மடங்காக உயர்த்தப்படுகிறது. சர்க்கரை, கோகோ முதல் ஆணுறை வரை அனைத்துக்குமான வரி 13 சதவீதத்தில் இருந்து 23 சதவீதம் ஆகிறது. ஓய்வூதியத்திலும் மாற்றங்கள் வருகின்றன. அரசு நிறுவனங்கள் பலவற்றை தனியார் மயமாக்கவும் அலெக்சிஸ் சிப்ராஸின் இடது சாரி அரசு ஒப்புக் கொண்டுள்ளது.

இதற்கு ஒப்புக்கொண்டு, கடன் மீட்புத்திட்டத்தை அளித்துள்ளதால், கிரிஸ் நாட்டுக்கு 8,600 கோடி யூரோவை (சுமார் ரூ.5 இலட்சத்து 93 ஆயிரம் கோடி) 3 ஆண்டுகளில் ஐரோப்பிய நாடுகள் வழங்கும். இந்த நிலையில், அந்த நாட்டில் திடீர் தேர்தல் தவிர்க்க முடியாததாக அமைந்துள்ளதாக அரசியல் நோக்கர்கள் கருதுகின்றனர். அனேகமாக அங்கு செப்ரெம்பர் மாதம் தேர்தல் நடத்தப்படக்கூடும்.

இந்த நிலையில் பொருளாதார மீட்பு நடவடிக்கையின் முக்கிய நிகழ்வாக கிரிஸ் நாட்டில் இன்று வங்கிகள் திறக்கப்பட்டன. அதே நேரத்தில் அங்கு பொருளாதாரம் புத்துயிர் பெறுமா என்ற கேள்வியும் எழுந்துள்ளது.

# தற்கொலைகளின் நகரமாக சென்னை

இந்தியாவில் தற்கொலைகள் அதிகரிக்கும் நகராக தமிழகத்தின் சென்னை இனங்காணப்பட்டுள்ளது.

சென்னையிலேயே அதிகமான தற்கொலைகள் இடம்பெற்றுள்ளதாக தேசியக் குற்றவியல் ஆவணக்காப்பகம் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்தியாவில் மராட்டிய மாநிலத்துக்கு அடுத்து தமிழகத்திலேயே அதிகமான தற்கொலைகள் இடம்பெற்றுள்ளதாக 2014 ஆம் ஆண்டிற்கான அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

கடந்த 2014 ஆம் ஆண்டு தமிழகத்தில் 16 ஆயிரத்து 122 பேர் தற்கொலை செய்துகொண்டுள்ளதாகவும் சென்னையில் மாத்திரம் இரண்டாயிரத்து 450 பேர் உயிரிழந்துள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தமிழகத்தில் அதிகமான தற்கொலைகள் ஏற்படுவதற்கு மது பானசாலைகள் ஒரு முக்கியமான காரணமாகவுள்ளதாக ஆய்வில் கண்டறியப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.




# மேக் இன் இந்தியாதிட்டத்தில் 200 ஹெலிகள் உருவாக்கம்

மேக் இன் இந்தியா திட்டத்தின் கீழ் 200 உலங்கு வானூர்திகள் ரஷ்ய உதவியுடன் இந்தியாவில் உருவாக்கப்படவுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.



மேக் இன் இந்தியா திட்டத்தின் கீழ் பாதுகாப்புத் துறையில் செயற்படுத்தப்படும் முதல் திட்டம் இது என குறிப்பிடப்பட்டுள்ளது.

அண்மையில் இந்தியா ரஷ்யா இடையே ஏற்படுத்தப்பட்ட பாதுகாப்புத்துறை தொடர்பான ஒப்பந்தங்களில் 200 உலங்கு வானூர்திகள் தயாரிக்கும் திட்டமும் ஒன்று என ரஷ்யாவிற்கான இந்திய தூதர் ராகவன் கூறியுள்ளார்.

தொழில்நுட்பப் பரிமாற்றங்களுடன் இந்தியாவில் உலங்கு வானூர்திகளை உருவாக்க ரஷ்யா ஒப்புக்கொண்டுள்ளது.

இது இந்தியா ரஷ்யா இடையேயான நட்புறவில் முக்கிய அம்சம் எனவும் ராகவன் தெரிவித்துள்ளார்.

இந்த நிலையில் பாதுகாப்புத்துறையில் இந்தியா ஏனைய நாடுகளுடன் ஒப்பந்தம் மேற்கொண்டு வருவதால் ரஷ்யாவுடனான பாதுகாப்புத்துறை நட்பு குறவைடைந்துள்ளதாக கூறப்படும் கருத்தை ராகவன் மறுத்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

# அமெரிக்க ஹெலிகள் தாக்குதல் 14 ஆப்கன் வீரர்கள் உயிரிழப்பு

ஆப்கானிஸ்தானில் உள்ள சோதனைச் சாவடி மீது அமெரிக்கா மேற்கொண்ட வான்வெளித் தாக்குதலில் 14 இராணுவ வீரர்கள் உயிரிழந்துள்ளனர். அங்குள்ள பராக்கி பராக் மாவட்டத்தில் உள்ள சோதனைச் சாவடியின் மீது அமெரிக்க இராணுவத்தின் இரண்டு ஹெலிகொப்டர்கள் நேற்றுக் காலை 6 மணி அளவில் திடீரென தாக்குதல் நடத்தின. இதில் அந்த சோதனைச்சாவடி கொளுந்துவிட்டு எரிந்தது. இந்த தாக்குதலில் சோதனைச்சாவடியில் இருந்த 14 வீரர்கள் உயிரிழந்தனர். இந்தத் தகவலை அம்மாவட்ட ஆட்சியர் முகமது ரஹீம் அமின உறுதிபடுத்தி உள்ளார்.

## வெளியாகியது...

தது என்ன? ஆனாலும், இன்றுள்ள சூழலை தமிழ் மக்கள் நன்கு விளங்கிக் கொண்டுள்ளபடியால் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு கடும் சவாலை எதிர்கொள்ளவேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது.

அதுமட்டுமன்றி அவர்கள் தற்போது மக்கள் முன் அம்பலப்பட்டுள்ளார்கள் என்பதுடன் கூட்டமைப்பினர் தொடர்பில் மக்கள் உண்மை நிலைவரத்தினையும் புரிந்து கொண்டுள்ளார்கள்.

கடந்த காலங்களிலும் கூட்டமைப்பினரின் வெற்றுக் கோசங்களையும் உணர்ச்சிப் பேச்சுக்களையும் நம்பி ஏமாந்தபடியால் தான் மக்கள் உயிரிழப்புக்களையும், பேரவலங்களையும் சந்தித்திருந்தனர்.

அத்துடன் கிடைக்கப் பெற்ற சந்தர்ப்பங்களும் சரியான முறையில் பயன்படுத்தவில்லையென்றும் சுட்டிக்காட்டிய அவர், எமது கட்சியின் தேர்தல் விஞ்ஞாபனத்தில் குறிப்பிட்டதைப் போன்று மக்கள் நலன்சார்ந்த விடயங்களையும் செயற்திட்டங்களையும் நடைமுறைப்படுத்துவோம் என்றும் சுட்டிக்காட்டினார். இதனிடையே ஊடகவியலாளர்களின் கேள்விகளுக்கும் செயலாளர் நாயகம் பதிலளித்தார். நேற்று வெளியிட்ட தேர்தல் விஞ்ஞாபனத்தில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

நாமும் மத்திய அரசுகளில் பங்கெடுத்தவர்கள் ஆனாலும் நீங்கள் வழங்கிய சிறு அரசியல் பலமும்,அரசுடனான எமது நல்லெண்ண உறவும் அதனுடன் அரசியல் பங்கெடுக்க கிடைத்த வாய்ப்பும் மட்டுமே உங்களை அந்தளவிற்கு நிமிர வைத்தது.

அதிகூடிய வாக்களித்து, அரசியல் பலத்தை எமக்கு நீங்கள் தந்திருந்தால் அரசுடன் உங்கள் உரிமைக்காக மேலும் பேரம் பேசி தமிழ் மக்களின் தலைவிதியை மாற்றியிருப்போம்.

ஆனாலும்,கல்வி தொழில்நுட்பக்கல்வி, பல்கலைக்கழக அதிவிரிவாக்கம்,சுகாதாரம்,உட்கட்டுமான அபிவிருத்தி,புனரமைப்பு,நில மீட்பு வடக்கில் பல்லாயிரக்கணக்கான ஏக்கர்கள் மீள் குடியேற்றம், வீட்டுத்திட்டம், வேலைவாய்ப்பு, நிரந்தர நியமனங்கள்,நிவாரண உதவிகள், வறுமை ஒழிப்பு, வாழ்வாதார உதவி, சுயதொழில் வாய்ப்பு, சமுர்த்தி பயனாளிகள் அதிகரிப்பு, கடற்றொழில், விவசாயம், மற்றும் பனை வளங்கள் விருத்தி, தமிழ் அரசியல் கைதிகள் விடுவிப்பு, புனர்வாழ்வு பெற்ற 12,000 முன்னாள் போராளிகள் உட்பட வீதிகள் திருத்தம், புகையிரதப்பாதை, ஆலயங்கள் புனரமைப்பு மற்றும் ஏனைய நிதியுதவிகள் என எமது அரசியல் பலத்திற்கும், எமது வளங்களுக்கும் ஏற்ற வகையில் நாம் ஆற்றிய பணிகள் ஏராளம்.

அரசியல் தீர்வுக்காக வாய்ப்புக்களை ஏமாற்றும் தமிழ் தலைமைகள் பயன்படுத்தாமல் வரலாற்றுத் தவறிழைத்த போதும் குறைந்த அரசியல் பலத்துடனாவது நாம் எமது மக்களின் உரிமைகளுக்காக வாதிட்டோம். உழுத்துப் போன ஒன்றுக்கும் உதவாத அரைகுறை தீர்வென்று 13 ஆவது திருத்தச் சட்டத்தை ஏமாற்றும் தமிழ் தலைமைகள் தட்டிக்கழித்த போதும்,

13 ஆவது திருத்தச்சட்டம் (இலங்கை - இந்திய ஒப்பந்தம்) இருந்து தொடங்கும் நடைமுறை யதார்த்த வழியை நாமே வலியுறித்தி ஆரம்பித்த சக்திக்குள் புதைந்திருந்த அரசியல் தீர்வு முயற்சியை வெளியே இழுத்து வந்து விட்டிருக்கின்றோம். இந்தியா உட்பட சர்வ்தேசமும் இதையே முன் மொழிந்து வருகிறது.

எமது நிலம் எமக்கே சொந்தம் விடுபடாத நிலங்களை மீட்போம் மீள் குடியேற்றங்களைத் தொடர்வோம். மீள் குடியேறிய மக்களின் அடிப்படை வசதிகள் மற்றும் வாழ்வாதாரத்தை மேலும் உயர்த்துவோம் வீடற்ற மக்களுக்கு வீட்டுத் திட்டங்களை தொடர்ந்து அமைப்போம். காணி அற்ற மக்களுக்கு காணிகளும் காணி உறுதிகள் அற்றவர்களுக்கு காணி உறுதிகளையும் தொடர்ந்து வழங்குவோம் எஞ்சிய அரசியல் கைதிகளையும் சிறை மீட்போம் முன்னாள் போராளிகளின் வாழ்வியல் எழுச்சிக்காகவும், சமூக, ஜனநாயக, அரசியல் பணிகள் தொடர்வதற்காகவும் தொடர்ந்தும் உழைப்போம். இளைஞர், யுவதிகளுக்கு மேலும் வேலை வாய்ப்புக்களை வழங்குவோம் வறட்சி பிரதேச மக்களுக்கு சுத்தமான குடிநீரையும். விவசாயத்திற்கு தேவையான நீரையும் வழங்குவோம் விவசாய கடன்களை இரத்துச் செய்வோம் விவசாயம். பனந்தொழில், கடற்றொழில் மற்றும் தொழிற்றுறைகள் யாவும் சிறந்திட உழைப்போம், எல்லைகள் தாண்டிவரும் இந்திய மீனவர்களின் தொல்லைகள் ஒழிப்போம். வறுமை ஒழிந்து மக்களின் வா்ழ்வாதாரம் மேலும் உயர்ந்திட எமது மக்களின் வரலாற்று வாழ்விடங்களை அபிவிருத்தியால் மேலும் தூக்கி நிறுத்துவோம் கலாசார சீரழிவுகளை தடுத்து நிறுத்தி எமது கலாசார பண்பாடுகளை பாதுகாப்போம் போதைவஸ்து வர்த்தகம் மற்றும் பாவீனையை ஒழித்து நல்லொழுக்க சமுதாயத்தைக் கட்டியெழுப்புவோம். விழிப்பணர்வூட்டி எமது சமுதாயத்தைக் கட்டியெழுப்புவோம் சட்டம், ஒழுங்கு மற்றும் பாதுகாப்பை மேலும் உறுதிப்படுத்துவோம்.

யுத்தத்தால் இறந்த எமது உறவுகளை நினைவு கூரும் முகமாக ஒரு பொதுத்தினத்தை பிரகடனப்படுத்துவதற்கும், அவர்களின் நினைவாகத் தூபி ஒ்ன்றை அமைப்பதற்கும் நடவடிக்கை எடுப்போம். வடக்கு, கிழக்கு தமிழ் பேசும் மக்களின் வரலாற்று வாழ்விடம் தேசியம், தாயகம், சுயநிர்ணயம் எமது இலட்சியக்கனவுகள். அதை அடையும் யதார்த்த வழிமுறையே மத்தியில் கூட்டாட்சி மாநிலத்தில் சுயாட்சி. எங்கள் நிலத்தில் மக்கள் பலத்தில் நாங்கள் உரிமை பெற்று நிமிர்வோம் அதற்கு... அற்றல் மிகு எங்கள் கரங்களில் அரசியல் பலத்தைத் தாருங்கள் மத்தியில் ஆட்சி மாற்றம் நடந்தாலும், ஏமாற்றுத் தமிழ்த் தலைமைகளை மக்கள் மாற்றாத வரை தமிழ் மக்களின் தலைவிதி ஒரு போதும் மாறாது இதுவரை உங்கள் வாக்குப்பலத்தால் அரசியல் பலம் பெற்றிருந்த ஏமாற்றுத் தமிழ்த் தலைமைகளிடம் நீங்கள் ஏமாற்றமடைந்ததையும். அரசியல் பலமின்றி நாம் ஆற்றிய தேசிய பணிகளையும் உங்கள் நியாயத்தராசில் நிறுத்திப்பாருங்கள். அரசியல் பலத்தையும் பேரம் பேசும் சக்தியையும் இம்முறை எம்மிடம் தந்து பாருங்கள். தமிழ் பேசும் மக்கள் தோற்றுப்போன இனமல்ல என்பதை நாமே உலகத்தின் கண்முன் எடுத்துக் காட்டுவோம். எனக் குறிப்பிடப்பட்டுள்ளது.

# உட்கட்சி பிளவு இப்போது விஸ்பரூபம்

(கொழும்பு)

ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பிற்குள் நிலவி வரும் பிளவு பூதாகரமாகியுள்ளதாக கபே தேர்தல் கண்காணிப்பு அமைப்பு தெரிவித்துள்ளது.

ஒரே கட்சியைச் சேர்ந்த தரப்பினர் ஒருவரை ஒருவர் கடுமையாகத் தாக்கி கொள்வதாக கபே அமைப்பின் நிறைவேற்றுப் பணிப்பாளர் ரஞ்சித் கீர்த்தி தென்னக்கோன் தெரிவித்துள்ளார்.

மகிந்த ராஜபக்ஷ தரப்பாகவும், மைத்திரிபால சிறிசேன தரப்பாகவும் இரண்டு குழுக்களாக பிரசரம் செய்யப்பட்டு வருவதாகத் தெரிவிதுள்ளார்.

குறிப்பாக முகநூலில் ஒருவரை ஒருவர் தாக்கிக் கொள்ளும் நடவடிக்கை தீவிரமடைந்துள்ளதாகக் குறிப்பிட்டுள்ளார்.

மல்சா குமாரதுங்க, மகிந்த சமரசிங்க, ஜனக பண்டார தென்னக்கோன், துமிந்த திஸாநாயக்க, சாந்த பண்டார, திலங்க சுமதிபால, லக்ஸ்மன் யாபா அபேவர்தன, விஜித விஜயமுனி டி சொய்சா உள்ளிட்ட சில நபர்களுக்கு வாக்களிக்க வேண்டாம் என முகநூலில் அதே கட்சியைச் சேர்ந்த மற்றுமொரு தரப்பினர் கோரி வருகின்ற நிலைமை காணப்படுகின்றது என அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

பொதுவாக விருப்பு வாக்கு முறைமையில் ஒரே கட்சியைச் சேர்ந்த வேட்பாளர்களுக்கு இடையில் விருப்பு வாக்கு போட்டி காணப்பட்ட போதிலும், இம்முறை ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பிற்குள் இந்த நிலைமை கடுமையாக மோசமடைந்துள்ளது என அவர் தெரிவித்துள்ளார்.

## முடங்கியது...

போராட்டத்தில் ஈடுபட்டார்கள். கடந்த வெள்ளிக்கிழமை முதல் தெல்லிப்பளை ஆதார வைத்தியசாலையில் ஒப்பந்த அடிப்படையில் கடமையாற்றிய பல்வேறு தரத்திலான சிற்றூழியர்களும் எந்தவித முன்னறிவிப்பும் இன்றி வேலையில் இருந்து நிறுத்தப்பட்டுள்ளார்கள்.

அவர்கள் தமது வேலையை மீள வழங்கக் கோரி வைத்திசாலை வளாகத்தில் போராட்டத்தில் ஈடுபட்டுள்ள நிலையில் வட மாகாண சுகாதார அமைச்சின் செயலாளரால் வட மாகாண சுகாதார அமைச்சரின் கூற்றுக்கு எதிராக பாதிக்கப்பட்டுள்ள ஊழியர்களுக்கு வேலை மீள வழங்கப்படமாட்டாது என ஊடகங்களுக்கு அறிக்கை வெளியிடப்பட்டுள்ள நிலையில் வைத்தியசாலையின் அனைத்து ஊழியர்களும் மூன்று மணித்தியாலம் பணிப்புறக்கணிப்பில் ஈடுபட்டார்கள்.

இதன் காரணமாக வைத்தியசாலையின் விடுதிகளில் உள்ள நோயாளர்கள் மற்றும் அவசர நோயாளர்கள் இந்த நேரத்தில் பார்வையிடப்பட்டனர். தொடர்ந்து இந்த ஊழியர்களின் பணி வைத்தியசாலைக்கு அவசியமாக இருப்பதினால் இவர்களின் நியமன விடயத்தில் உரியவர்கள் கவனம் செலுத்தவேண்டும் எனவும் இல்லாவிட்டால் வைத்தியசாலையின் பணிகள் கடுமையாக பாதிக்கப்படும் எனவும் வைத்தியர்களால் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## அரச அதி...

of Science and Technology) பேராசிரியர் சூ ஷியாலியான் ( prof.Xu Xiaolin) உட்பட பேராசிரியர் சென் கீ (Prof. Chen He), பேராசிரியர் சென் ஷிகிஸ்கா (Prof Chen Zhixia) குழுவினருடன் இலங்கை அபிவிருத்தி நிர்வாக நிருவாகத்தின் SLIDA (Sri Lanka Institute of Development Administration) சிரேஷ்ட அலுவலர்கள் பங்குபற்றி இடம்பெற்ற கலந்துரையாடலின் பின் கருத்து தெரிவித்த போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இது குறித்து மேலும் கருத்து வெளியிட்ட அவர் சீனாவில் புகழ்மிக்கதுமான பல துறைகளில் திறமையான மாணவர்களை உருவாக்கி வரும் HUST பல்கலைக்கழகம் இலங்கை அபிவிருத்தி நிர்வாகத்துடன் பல வருடங்களாக பரஸ்பர நட்புறவினைப் பேணிவருகின்றது. இந்த நட்புறவினை பரஸ்பர தொடர்பினை மேலும் பலப்படுத்தும் விதமாக இந்நிறுவன அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான பட்ட மேற்படிப்பு நிகழ்ச்சித் திட்டங்களையும் பயிற்சி நெறிகளையும் வழங்க சீனாவின் HUST பல்கலைக்கழகம் மிகுந்த ஆர்வத்துடன் உள்ளது.

அவ்வகையில் பட்டமேற்படிப்பு நிகழ்ச்சித்திட்டமொன்றினை (Master in Public Management (MPM) degree programme) கிராமிய அபிவிருத்தி மற்றும் அரசாங்கம் ( Rural development and E - government) என்ற துறையில் முன்னெடுக்கும் வகையில் ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

அத்துடன் இலங்கை அபிவிருத்தி நிர்வாக சேவை உத்தியோகத்தர்களுக்கான வெளிநாட்டுப் பயிற்சி நெறியொன்றினையும் ஆரம்பிக்க திட்டமிடப்பட்டுள்ளது.

அவ்வகையில் 30 அபிவிருத்தி நிர்வாக சேவை உத்தியோகத்தர்கள் அடங்கிய ஒவ்வொரு குழு வீதம் தெரிவு செய்யப்பட்டு சீனாவுக்கு இரண்டு வார பயிற்சி நெறிக்காக அனுப்பி வைக்கப்படவுள்ளனர். அவ்வகையில் இவ்வருடத்தில் ஒரு குழுவும் எதிர்வரும் ஆண்டில் இரண்டு குழுக்களும் செல்ல ஏற்பாடுகள் முன்னெடுக்கப்படும் எனவும அவர் மேலும் தெரிவித்தார்.

அத்துடன் இவ்வாறான பயிற்சி நெறிகளையும் கற்கை நெறிகளையும் HUST பல்கலைக்கழகத்தினுடாக இலங்கை அரச சேவையாளர்களுக்கு வழங்குவதற்கு முன்வந்துள்ள சீன அரசாங்கத்திற்கும் குறிப்பிட்ட பல்கலைக்கழக சமூகத்தினருக்கும் நன்றி தெரிவிப்பதாகவும் அவர் தெரிவித்தார்.

## தேர்தல்...

கில் நிதிக் குற்றவியல் விசாரணைப் பிரிவினை பிரதமர் பயன்படுத்திக் கொண்டுள்ளதாகக் குறிப்பிட்டுள்ளார்.

நாட்டில் பொதுத் தேர்தல் அறிவிக்கப்பட்டுள்ள நிலையில் நிதிக் குற்றவியல் விசாரணைப் பிரிவு விசாரணைகளை நடத்தி வருவதாகக் குறிப்பிட்டுள்ளார்.

மேல் மாகாண முதலமைச்சர் பிரசன்ன ரணதுங்க மீது அழுத்தங்களை பிரயோகிக்கும் நோக்கில் விசாரணை நடத்தி வருவதாகக் குற்றம் சுமத்தியுள்ளார்.

## புளியங்...

வவுனியா, புளியங்குளம் சந்தியில் இடம்பெற்ற இந்த ஆர்ப்பாட்டத்தில் புளியங்குளம் தெற்கு பகுதியைச் சேர்ந்த குட்டிப் பிள்ளையார் குடியிருப்பு, கல்மடு, இராமர் புளியங்குளம், பழையவாடி, புளியங்குளம் ஆகிய கிராமங்களைச் சேர்ந்த மக்கள் ஆர்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

யுத்தம் காரணமாக தாம் இடம்பெயர்ந்து மீள்குடியேறிய போதும் தமக்கான அடிப்படை வசதிகள் எவையும் இதுவரை செய்து தரப்படவில்லை என ஆர்பபாட்டத்தில் ஈடுபட்ட மக்கள் தெரிவித்தனர்.

குறிப்பாக தமது கிராமத்திற்கு என ஒதுக்கப்பட்ட வீட்டுத் திட்டத்தை அமைச்சர் ஒருவரின் தலையீட்டினால் வேறு. இடத்திற்கு மாற்றப்பட்டுள்ளதாகவும் மழை காலம் தொடங்கவுள்ளதால் வீடுகள் இன்றி அவலப்படும் நிலை ஏற்பட்டுள்ளதாகவும் அவர்கள் தெரிவித்தனர். அத்துடன் தமது கிராமத்திற்கான மின்சாரம் முழுமையாக வழங்கப்படவில்லை எனவும் இதனால் காட்டில் இருந்து வரும் யானை முதலிய விலங்களுடன் இருட்டில் வாழ்வதற்காக போராட வேண்டி ஏற்பட்டுள்ளதாகவும் தமது பிரதேசத்துக்கான வீதியைப் புனரமைத்து தருமாறும் கோரிக்கை விடுத்துள்ளனர்.

## வாக்களிக்க...

வலுவுள்ளோர் வாக்களிக்கச் செல்லவென வாகன வசதி கோரி மாவட்ட தெரிவத்தாட்சி அதிகாரிக்கு விண்ணப்பிக்க முடியும் எனதேர்தல்கள் செயலகம் தெரிவித்துள்ளது.

பதிவு செய்யப்பட்ட வைத்தியரிடம் பெறப்பட்ட சான்றுடன் தேர்தல்கள் செயலகம் விடுத்துள்ள விண்ணப்பப் படிவத்தை நிரப்பி கையளிக்க முடியும் என செயலகம் குறிப்பிட்டுள்ளது.

தெரிவத்தாட்சி அதிகாரியின் தீர்மானத்தின்படி மாற்று வலுவுள்ளோர்களுக்கான போக்குவரத்து வசதி செய்து கொடுக்கப்படும் என தேர்தல்கள் செயலகம் தெரிவித்துள்ளது.

# காணாமற்போனோர் பிரச்சினைக்கு தீர்வு கிடைக்காதது ஏன்?

## கேள்வி எழுப்புகிறார் டக்ளஸ்



(யாழ்ப்பாணம்)

காணாமற்போனோருடைய பிரச்சினை, காணாமற்போன பிரச்சியையாக மாறிவிடக் கூடாது. அது கண்டுபிடிக்கப்பட வேண்டும். அத்துடன் இப்பிரச்சினைக்கு நாம் தீர்வு காண்போம் என ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியின் செயலாளர் நாயகமும் முதன்மை வேட்பாளருமான கே. என். டக்ளஸ் தேவானந்தா தெரிவித்தார்.

யாழ். கிறீன் கிராஸ் விடுதியில் நேற்று இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

தற்போது ஜனாதிபதி ஆணைக்குழு காணாமற்போனோர் விடயத்தில் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றது. அதன் அறிக்கையைப் பார்த்து விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்படவேண்டும். நடவடிக்கையும் எடுக்கப்பட வேண்டும். காணாமற்போனோர் தேடிக் கண்டுபிடிக்கப்படவேண்டும். பாதிக்கப்பட்டவர்களுக்கு பரிகாரம் காணப்படவேண்டும் என்பதே எமது நிலைப்பாடு. வருகின்ற அரசில் நாம் பங்கெடுக்க இருக்கின்றோம். எனவே, நாடாளுமன்றில் நாம் மீண்டும் இது விடயத்தில் பேசி இதற்கான தீர்வைப் பெற்று முடிவு காண்போம்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினால் இரகசிய முகாம் இருப்பதாக தெரிவிப்பது பொய்யானது. இதை பிரதமரும் மறுத்துள்ளார். இவர்கள் பத்திரிகைகளுக்காகவும் மக்களை ஏமாற்றி அரசியல் நடாத்தவும் அந்த விடயத்திலிருந்து தப்பிக் கொள்வதற்காகவும் சொல்லப்பட்ட விடயமே இரகசிய முகாம். இது பற்றி சரியான விசாரணைகள் மேற்கொண்டு மக்களுக்கும் வெளியுலகிற்கும் நடந்தது என்ன என்பது குறித்து வெளிப்படுத்துவதுடன் காணாமற்போனோரின் பிரச்சினைக்கு நாம் தீர்வைப் பெற்று முடிவு காண்போம் என அவர் மேலும் தெரிவித்தார். (இ)

# தோல்வியைத் தழுவிய சிந்தனை மீண்டும் அரங்கேறுகிறது

## ஐ.தே.க. கண்டனம்

(கொழும்பு)

தோல்வியடைந்த மகிந்த சிந்தனைக் கொள்கைத் திட்டமே மீண்டும் முன்னெடுக்கப்பட்டு வருவதாக ஐக்கிய தேசியக் கட்சி குற்றம் சுமத்தியுள்ளது.

கடந்த ஜனவரி மாதம் 8ஆம் திகதி மகிந்த சிந்தனையை மக்கள் நிராகரித்துள்ளதாக ஊடக அமைச்சர் கயந்த கருணாதிலக்க தெரிவித்துள்ளார்.

காலியில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பு ஒன்றில் அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பிடம் புதிய திட்டங்கள் எதுவும் கிடையாது எனவும், புழைய தோற்கடிக்கப்பட்ட மகிந்த சிந்தனைக் கொள்கைகளை தூக்கிப் பிடித்து தேர்தலில் வெற்றியீட்ட முயற்சிப்பதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

கடந்த ஜனவரி மாதம் 8ஆம் திகதி ஈட்டப்பட்ட வெற்றியை திசை திருப்ப முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவிற்கு இனி இடமளிக்கப்பட மாட்டாது என அவர் குறிப்பிட்டுள்ளார்.

# கட்சித் தாவல் தெற்கில் அமோகம்

ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் சரத் வீரசேகரவின் இணைப்புச் செயலாளரும் தெய்யத்தகண்டிய பிரதேச சபையின் முன்னாள் உப தலைவருமான துமிந்த ரணவீர உட்பட பலர் ஐக்கிய தேசியக் கட்சியில் இணைந்து கொண்டுள்ளனர். ஐக்கிய தேசியக் கட்சியின் தேசிய அமைப்பாளர் தயா கமகே முன்னிலையில் அவர்கள் நேற்று கட்சியில் இணைந்து கொண்டனர். ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி மீது ஏற்பட்ட அதிருப்தி காரணமாக சுமார் 290 பேர் இவ்வாறு ஐக்கிய தேசியக் கட்சியில் இணைந்து கொண்டதாக தயா கமகே கூறியுள்ளார்.

முன்னாள் ஜனாதிபதி மீண்டும் பொதுத் தேர்தலில் போட்டியிடுவதற்கு இவர்கள் எதிர்ப்பு வெளியிட்டுள்ளனர்.

# விதிகளை மீறி பேரணி மாகாண உறுப்பினர் மீது வழக்கு

(கொழும்பு)

பொலிஸாரின் உத்தரவை மீறி பண்டாரகமையில் கடந்த ஞாயிற்றுக்கிழமை பேரணி சென்ற பண்டாரகம ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியின் அமைப்பாளரும் மாகாண சபை உறுப்பினருமான சந்திரரத்னவுக்கு எதிராக வழக்குத்தாக்கல் செய்யப்போவதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவினால் ஆற்றப்பட்ட விசேட உரைக்கு எதிராக பதாதைகள் மற்றும் கட்அவுட்களுடன் பேரணியாக சென்ற போது. அவ்வாறு பேரணி நடத்த வேண்டாம் என்று பொலிஸார் உத்தரவிட்டுள்ளனர்.

அந்த உத்தரவையும் மீறியே பேரணி நடத்தப்பட்டுள்ளது. தேர்தல் காலத்தில் பேரணிகள் நடத்துவதற்கு தடைவிதிக்கப்பட்டுள்ளதாக தேர்தல்கள் ஆணையாளர் மகிந்த தேசப்பிரிய தெரிவித்திருந்தார்.

சட்டத்தை மீறி அவ்வாறு பேரணிகள் நடத்தினால், அதி உச்ச பலத்தை பயன்படுத்த முடியும் என்றும் துப்பாக்கி சூடு நடத்தலாம் என்றும் அவர் தெரிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கதாகும்.


முன்னாள் போராளிகள் மற்றும் அரசியல் கைதிகளின்

பெற்றோர்/பாதுகாவலர் சந்திப்பு

கடந்த காலங்களில் தமிழ்த்தேசிய செயற்பாடுகளில் அர்ப்பணிப்புடன் ஈடுபட்ட புனர்வாழ்வு பெற்று விடுதலையாகி சமூகத்துடன் இணைந்துள்ள சகல முன்னாள் போராளிகள் மற்றும் தடுப்பில் உள்ள அரசியல் கைதிகள் சார்பாக அவர்களது பெற்றோர் அல்லது பாதுகாவலர் அனைவரும் "கௌரவமான எதிர்கால திட்டங்களை நடைமுறைப்படுத்துவது" தொடர்பான ஒன்று கூடலிற்கு தவறாது கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

இடம்- நாவலர் கலாசார மண்டப முன்றல்
காலம்-23.07.2015 (வியாழன்)
நேரம்- பி.ப.3.30
தொடர்புக்கு : 0767134881

பிரதம செயற்பாட்டாளர்
முன்னாள் போராளிகள்/ அரசியல் கைதிகள்
ஒன்றியம், யாழ்ப்பாணம்

(C/3878)


# சிறுநீரக ஏற்றுமதி இலங்கையில் அதிகம்

## எச்சரிக்கிறார் பிரித்தானிய சட்டவாதி

(கொழும்ப)

மனித உடலில் சிறுநீரகம் மற்றும் உறுப்புக்களை விற்பனை செய்வது சட்ட விரோத செயல் என பிரித்தானிய பர்மிங்காம் பல்கலைக்கழகத்தின் சட்ட வல்லுநர் சார்லாட் எல்வேஸ் தெரிவித்தார்.

இலங்கையில் நபர்களிடம் இருந்து உடல் உறுப்புக்களை விலைக்கு கொள்வனவு செய்யும் மர்ம திட்டமொன்றில் பிரித்தானிய பிரஜைகள் ஈடுபடுவதாகத் தெரியவந்துள்ளது.

முகப்புத்தகத்தை (facebook) பயன்படுத்தி இந்த திட்டம் மிகவும் சூட்சமமாக முன்னெடுக்கப்படுவதாக கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

மாற்று சுற்றுலா என்ற திட்டத்தின் கீழ் உடல் உறுப்புக்கள் 75,000 டொலருக்கு விற்பனை செய்யப்படுவதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இத்திட்டமானது சர்வதேச மனித உரிமை மீறல் என்பதுடன் மனித கண்ணியத்திற்கு எதிரானது என்றும் பிரித்தானிய பர்மிங்காம் பல்கலைக்கழகத்தின் சட்ட வல்லுநர் சார்லாட் எல்வேஸ் தெரிவித்தார்.

இலங்கையில் மனித உறுப்புகளை திருடி வெளிநாட்டவர்களுக்கு விற்பனை செய்யும் வலைத்தளம் இயங்குவதும் அதனுடன் ரசகசியமாக சில மருத்துவமனைகள் தொடர்பு வைத்துள்ளதும் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

இதில் பிரபல தனியார் மருத்துவனையும் முன்னாள் இலங்கை அரசின் முக்கிய பிரமுகர் ஒருவரும் தொடர்புடையதும் தெரியவந்துள்ளது.

இலங்கையில் மாத்தளை மற்றும் கண்டியில் செயற்பட்டு வரும் இந்த மனித உறுப்பு வர்த்தக வலைத்தளம் குறித்து உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

குறிப்பாக மனித உடலில் சிறுநீரகத்தை எடுத்து வெளிநாடுகளுக்கு விற்றுவருவதாக கூறப்படுகிறது.

குறிப்பாக வறுமையில் உள்ளோரிடம் பணத்தாசை காட்டி அவர்களுக்கு சொற்ப பணத்தை கொடுத்து விட்டு அவர்களிடம் இருந்து சிறுநீரகத்தை பெற்று பெரும் லாபத்திற்கு வெளிநாட்டில் விற்றுவருவதாக தகவல்கள் வெளியாகியுள்ளன.

இது தொடர்பில் பொது மக்கள் அவதானமாக இருக்க வேண்டும் என கேட்டுக் கொள்ளப்படுகிறது.

# குளவி தாக்குதல் மலையகத்தில் 16 பேர் பாதிப்பு

(பதுளை)

பதுளை - ஹாலிஎல, திக்வெல்ல வத்த பிரதேசத்தில் குளவி தாக்குதலுக்கு இலக்காகி தோட்டத் தொழிலாளர்கள் சிலர் பாதிக்கப்பட்டுள்ளனர்.

இச்சம்பவம் நேற்று பகல் இடம்பெற்றுள்ளது.

குளவித் தாக்குதலில் கொழுந்து பறித்துக் கொண்டிருந்த 16 பேர் பாதிக்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

இதில் 12 பேர் அம்பிட்டிய வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

மேலும் நால்வர் பதுளை வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

இப்பத்திரிகை இல: 373 பிரதான வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியில் அமைந்துள்ள அற்புதன் அச்சகத்தில் 2015 யூலை 21ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.